
# வேலணை பிரதேச மலர்

## 2003



வேலணை பிரதேச சபை
වේලනෛයි ප්‍රාදේශීය සභා
Velanai Pradeshiya Sabha

050
வேலணை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வேலணை பிரதேச மலர்

# 2003

**வேலணை பிரதேசசபை**

**වේලනෙයි ප්‍රාදේසිය සභා**

**Velanai Pradeshiya Sabha**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | |
|---|---|---|
| மலரின் பெயர் | :- | வேலணை பிரதேச மலர் |
| உரிமை | :- | வேலணை பிரதேச சபை,<br>வேலணை. |
| பதிப்பு | :- | முதலாம் பதிப்பு |
| காலம் | :- | 21-07-2003 |
| பக்கங்கள் | :- | 115 |
| வடிவமைப்பு | :- | ஹரிஹணன் பிறிண்டேர்ஸ்,<br>காங்கேசன்துறை சாலை,<br>யாழ்ப்பாணம். |
| மலராசிரியர் | :- | தம்பிராஜா சிறீமுரளிதரன் |

| | | |
|---|---|---|
| Title | :- | "Velanai Pradeshiya Sabha" |
| Copy right | :- | Velanai Pradeshiya Sabha,<br>Velanai. |
| Edition | :- | First Edition |
| Date of Publication | :- | 21-07-2003 |
| Pages | :- | 115 |
| Graphics Design & Printing | :- | Harikanan Printers,<br>K.K.S Road,<br>Jaffna. |
| Editor | : | Thambirajah Srimuralitharan |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



பொது சன நூலகம் யாழ்ப்பாணம்

வேலணை பிரதேச சபை உத்தியோகத்தர்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொது சன நூலகம்
யாழ்ப்பாணம்

மாண்புமிகு இந்து சமய விவகார அலுவல்கள் அமைச்சர் தி.மகேஸ்வரன் அவர்கள் வழங்கிய



# வாழ்த்துச்செய்தி

அரச நிர்வாகத்தினைப் பரவலாக்கம் செய்து கிராம மக்களுக்கு அதன் பலன் கிடைப்பதற்கு உள்ளூராட்சி நிறுவனங்கள் துணையாக உள்ளன. பிரதேச மக்களின் நலனில் அக்கறை கொண்டு அவர்களின் தேவைகளைக் கருத்தில் கொண்டு இவை செயற்படுகின்றன. மக்களால் தெரிவு செய்யப்பட்ட பிரதிநிதிகள் பிரதேச சபையில் அங்கம் வகிக்கின்றார்கள். இவர்கள் மக்கள் நலனில் அக்கறை கொண்டு செயற்பட்டு வருகிறார்கள்.

வேலணை பிரதேச சபை, வேலணை, நயினாதீவு, புங்குடுதீவு, அல்லைப்பிட்டி, மண்டைதீவு ஆகிய கிராமங்களை உள்ளடக்கிய பெரிய பிரதேச சபை ஆகும். நமது நாட்டில் ஏற்பட்ட போர்க்கால சூழ்நிலையினால் மிகவும் பாதிப்புக்கு உள்ளான பிரதேசசபைகளில் இதுவும் ஒன்றாகும். இப்பிரதேசத்தில் செய்ய வேண்டிய சமூகப்பணிகள் பலவுள்ளன. கல்வி அபிவிருத்தி, விவசாய அபிவிருத்தி போன்ற பல்வேறு அபிவிருத்திகள் இப்பிரதேசத்தில் செய்ய வேண்டியுள்ளன. மக்கள் நலனில் அக்கறை கொண்டு இப் பிரதேசசபை நிர்வாகம் செய்யப்பட்டு வருவதை அறிந்து மகிழ்ச்சி அடைகின்றேன். உள்ளூராட்சி அமைச்சினால் உள்ளூராட்சி வாரம், இலங்கை முழுவதும் கொண்டாடப்படுகின்றது. யாழ்ப்பாணத்திலும் இதனை சிறப்பாக கொண்டாடுவதற்கான முயற்சிகளை யாழ் மாவட்ட உள்ளூராட்சி திணைக்களம் எடுத்துள்ளது. இந்த முயற்சியில் வேலணை பிரதேச சபையினரும் சிறப்பாக ஈடுபட்டுள்ளார்கள். உள்ளூராட்சி வாரத்தை ஒட்டி வேலணை பிரதேச சபையினா் வெளியிடும் மலருக்கு வாழ்த்துச் செய்தி அனுப்புவதில் மிகவும் மகிழ்ச்சி அடைகின்றேன்.

**தி. மகேஸ்வரன்,**
**மாண்புமிகு இந்து சமய விவகார**
**அலுவல்கள் அமைச்சர்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வடக்கு கிழக்கு மாகாண பொதுச்சேவை ஆணைக்குழு வாழ்த்தி வழங்கிய



# ஆசிச்செய்தி

"உள்ளூராட்சி மன்றம் ஒன்று தனது பிரதேசம் சார்ந்த மக்களின் அன்றாட வாழ்வின் பல்வேறு வகைகளிலும் தன்னை இணைத்துக் கொண்டிருக்கின்றது. நீண்ட காலமாக பாரம்பரியமாக உணரப்பட்ட விடயமாக இது இருக்கின்றபோதிலும் அண்மைக்கால நிகழ்வுகள், சூழ்நிலைகளால் அவ்வுணர்வு சற்றே குன்றியிருக்கின்ற என்பதை நாம் ஏற்றுக் கொண்டேயாக வேண்டும். இந்நிலையில் உள்ளூராட்சி மன்றங்கள் மீளவும் உத்வேகம் பெற்று சிறப்பாகத் தம் கடமைகளை ஆற்றுவதற்கு இவ்வாறான நிகழ்வுகள் இன்றியமையாதனவாகும். தங்கள் மன்றத்தால் கொண்டாடப்படும் உள்ளூராட்சி வாரம் நிறைவானதாக அமைந்து விரும்பப்பட்ட பயனை யாவர்க்கும் தரவேண்டுமென வாழ்த்துவதுடன் தங்களால் வெளியிடப்படும் மலர் எம் பிரதேச மக்களுக்கு பயன்பாடுடைய ஆவணமாக அமைந்து சிறக்க வேண்டுமென பிரார்த்திக்கின்றேன்".

நன்றி

வே.பொ. பாலசிங்கம்,
செயலாளர்,
மா.பொ.சே.ஆ.குழு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வடக்கு கிழக்கு மாகாண உள்ளூராட்சி ஆணையாளர் வேலணை பிரதேசசபைக்கு வழங்கிய



# வாழ்த்துச்செய்தி

பெரும்பாலான நிறுவனங்களில் காணப்படும் பொது இயல்பு பொது மக்கள் அந்த நிறுவன காரியங்களில் பங்குபற்றுவதற்கு உகந்த அமைப்பு எதுவும் அங்கு காணப்படாமையாகும். ஆனால் உள்ளூராட்சி அமைப்புக்கள் பொதுமக்களின் பங்குபற்றுதலை வேண்டிநிற்கும் அமைப்புக்களாகும். 70ஆம் ஆண்டுகால தசாப்தங்களுக்கு முன் உள்ளூராட்சியினையொட்டிய கிராமிய தலைமைத்துவம் காணப்பட்டது. ஆனால் பின்னர் வந்த காலப்பகுதியில் பல்வேறு காரணங்களினால் கிராமிய தலைமைத்துவம் குறைவடைந்து சென்றது. தற்போதைய உள்ளூராட்சி அமைப்புக்களிலும் செயல்பூர்வமான பங்கேற்பு இல்லாமலே காணப்படுகின்றது. மக்களின் செயல்பூர்வமான பங்களிப்பை ஏற்படுத்துவதற்கு இவ் உள்ளூராட்சி வாரகாலப்பகுதியில் ஏற்படுத்தப்படும் மக்கள் உறவுகள் தொடர்ந்து பேணப்படல் வேண்டும். இந்நிலை ஏற்பட்டால் மட்டுமே உருவாக்கப்படும் செயற்றிட்டங்கள் வெற்றியளிக்கும்.

உள்ளூராட்சி வாரத்தினை இம்முறை வடக்கு மாகாணத்தில் மிகவும் கோலாகலமாக கொண்டாடுகின்ற வேலணை பிரதேசசபை தன் இலட்சியத்தில் வெற்றிபெற என் வாழ்த்துக்களையும் நல்ஆசிகளையும் தெரிவிப்பதில் மகிழ்ச்சியடைகின்றேன்.

**தெ. து. விஜயலட்சுமி,**
**உள்ளூராட்சி ஆணையாளர்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உள்ளூராட்சி உதவி ஆணையாளர் உள்ளத்திலிருந்து



# வாழ்த்துச்செய்தி

"உள்ளத்தில் உள்ளது சொல்வேன்
எனக்குண்மை தெரிந்தது சொல்வேன்"

ஊர் மக்களுக்கு மக்களோடு மக்களாக இணைந்து சேவை செய்யும் உன்னதமான சேவை உள்ளூர் ஆட்சிச்சேவையாகும். கடந்த மூன்று தசாப்தங்களுக்கு முன்னர் உள்ளூராட்சி சேவையில் இருந்து நிர்வாகக்கட்டமைப்பு ஊர்மக்களுக்கு சேவை செய்வதில் உன்னதமான இடத்தை பெற்றிருந்தது என்பது உண்மையானதாகும். மக்களால் தெரிவு செய்யப்பட்ட பிரதிநிதிகளின் பரிபாலனத்திற்கு உட்பட்டிருந்த காலகட்டங்கள் உள்ளூர் ஆட்சி மன்றங்கள் மக்களோடு ஒரு இறுக்கமான கட்டமைப்பை வைத்திருந்தன என்பதில் எதுவித ஐயமும் இல்லை. உள்ளூராட்சிச் சேவையைச் சேர்ந்த எழுதுனர்களும் ஒரு பல்துறை நிபுணர்களாக பரிணமித்தமையால் மக்கள் பிரதிநிதிகள் சேவையில் இல்லாத காலங்களிலும் குறிப்பிடத்தக்க ஆளனி பற்றாக்குறைகள் இருந்த போதிலும் முகாமைத்துவக் கட்டமைப்பை சீர்தூக்கி சிறப்பாக செயலாற்றியது பெருமைக்குரியது. எனது கடந்த 35 ஆண்டுகால உள்ளூராட்சி சேவையோடு இணைந்து பணியாற்றிய நினைவுகளை மீட்டுப்பார்க்கின்ற பொழுது உள்ளூராட்சிச் சேவையில் இணைந்து பணியாற்ற வாய்ப்புக் கிடைத்த ஒவ்வொரு ஊழியனும் தனக்குக் கிடைத்த அரியவாய்ப்பினை எண்ணி புளகாங்கிதம் அடையவேண்டும்.

"ஒன்றே குலம் ஒருவனே தேவன்" என்ற கோட்பாட்டின் அடிப்படையில் நான்கு மதங்களும் ஒன்றாக பரிணமிக்கும். தீவகம் தெற்கு பிரதேசசபை தீவகத்தின் பெருமையையும் பாரம்பரியத்தையும் மேன்மேலும் வளர்ச்சியடைய ஆக்கபூர்வமான பணிகளை சென்ற காலத்திதைப் போன்று வருங்காலத்திலும் செயலாற்றி உன்னதமான இலக்கைச் சென்றடைய வேலணை பிரதேசசபை கொண்டாடும் இவ் உள்ளூராட்சி வாரம் மேன்மேலும் மெருகூட்டப்பட வேண்டும் என்று வாழ்த்துவதுடன் இந்நிகழ்வின் அங்கமாக அவர்கள் வெளியிடப்படும் "பிரதேச மலர்" நறுமணம் கமழும் ஓர் வாடாத மலராக என்றென்றும் நிலைத்து ஓங்க என் உளம் நிறைந்த வாழ்த்துக்களை தெரிவித்துக்கொள்கின்றேன்.

T. V. கிருஸ்ணசாமி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# இதழாசிரியரின் இதய அரங்கிலிருந்து...

நீண்டகாலமாக பாலை நிலமாகக் கிடந்த - நெஞ்சங்களுக்கெல்லாம்

பாலை வார்த்தது போல்

அமைதி மழை சாரல்கள் ஆங்காங்கே விழுகின்றன

நம்பிக்கை வற்றிக்கிடந்த - நஞ்சை புஞ்சைகளில் எல்லாம்

பசுமைக்கனவுகள்

மழைசாரல்கள் ஸ்பரிசிக்கும் போது மண் மணம் வீசுவதும்

இயற்கை தானே

அந்த வகையிலே வேலணை பிரதேசத்தின் மண் மணமான

இந்த மலர் வெளிவருகின்றது

வேலணை பிரதேச சபையின் உள்ளூராட்சி வாரம் 2003இன் சிறப்பு நிகழ்வாக வேலணை பிரதேச மலர் 2003 எனும் சஞ்சிகையின் தலைப்பிரசவத்தினை உங்கள் கைகளிலே தவழவிடுவதில் பெருமகிழ்வடைகின்றேன்.

ஆவணத்தொகுப்பு, இலக்கியநயப்பு என்கின்ற தளங்களையும் கடந்து எதிர்காலத்தில் இப்பிரதேசத்தில் முன்னெடுக்கப்பட வேண்டிய திட்டங்களை ஆற்றுப்படுத்தவல்ல திசைகாட்டியாயும் இம்மலர் அமையும் என்பதிலும் எனக்கு அசையாத நம்பிக்கை உள்ளது.

இம்மலருக்காக வாழ்த்துரைகள், கட்டுரைகள் போன்றவற்றை தந்துதவிய பெருந்தகையாயர்களுக்கு எனது மனமார்ந்த நன்றிகள் உரித்தாகுக. சிதறிக்கிடந்த இதழ்களை எல்லாம் அழகியமலராக்கிய ஹரிஹணன் பிறிண்டேர்ஸ் நிறுவனத்தாருக்கும் விளம்பர உதவிகள் செய்த நெஞ்சங்களுக்கும் எனது நன்றிகள்.

தம்பிராஜா சிறீமுரளிதரன்
இதழ் ஆசிரியர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மலரின் இதழ்களாக.....


1) தீவுப்பகுதி தெற்கு (வேலணை) பிரதேசசபை செயலாளரின் செய்திக்குறிப்பு 01

2) தீவுகள் தெற்குப் பிரிவின் அபிவிருத்தியும் பிரச்சனைகளும் 06

3) வேலணைப்பிரதேசசபை நிருவாகத்திற்கு உட்பட்ட தீவகம் - சில வரலாற்றுக்குறிப்புகள் 16

4) தீவகம் தெற்குப்பிரதேசம்: மீள் இடப்பெயர்வும் அதனோடு தொடர்புடைய பிரச்சினைகளும் 26

5) உள்ளூராட்சி மன்றங்களில் சித்தமருத்துவ சேவை 38

6) ஈழத்தமிழ் இனத்தின் கடந்த காலகட்டம் எதனை உணர்த்தி நிற்கின்றது 42

7) Language and Power the Role of English in Sri Lanka 56

8) பொது நூலகமும் மக்கள் வாழ்க்கையும் 62

9) உள்ளூராட்சி மன்றங்களின் வரலாறு 69

10) பொறுப்புணர்வுடன் பணிபுரியும் பொதுப்பணியாளரின் கூட்டு நடவடிக்கையே ஒரு தேசத்தின் இலட்சிய இலக்கை இலகுவில் எய்த உதவும் ஒன்றுபட்டால் உண்டு வாழ்வு. 72

11) நாமும் நமது மூலிகைகளும் 77

12) யோகமும் வாழ்வும் 84

13) நீரிழிவு (Diabetes) 86

14) வேலணை பிரதேசசபையின் அபிவிருத்தி வேலைத்திட்டங்கள் 1996-2003 91

15) நிரந்தர நிலையில் கடமையாற்றும் உத்தியோகத்தர்கள், ஊழியர்கள் விபரம் 94



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தீவுப்பகுதி தெற்கு (வேலணை) பிரதேசசபை செயலாளரின் செய்திக்குறிப்பு

வட இலங்கையில் சப்ததீவுகள் உட்பட பதினொரு பெரிய தீவுகளும், இவற்றுடன் வேறு சிறு சிறு தீவுகளும் காணப்படுகின்றன. அனலைதீவு, எழுவைதீவு, காரைதீவு, நயினாதீவு, புங்குடுதீவு, மண்டைதீவு, வேலணைத்தீவு ஆகிய ஏழும் ஒரே தொடர்பாக யாழ்குடாநாட்டின் தெற்கே அமைந்துள்ளன. இவற்றில் வேலணைத்தீவு (64ச.கி.மீ) மிகப்பெரியது. எழுவைதீவு (1.6ச.கி.மீ) மிகச் சிறியது. யாழ்ப்பாணக் குடாநாடு போன்று அதனை அடுத்துள்ள பிரதான தீவுகளும் நீண்டகால வரலாறு கொண்டவை. புவியியல் ரீதியிலும், வரலாற்று ரீதியிலும் இவை யாழ்ப்பாணக் குடாநாட்டின் ஒன்றிணைந்த பகுதிகளாயினும் இவற்றிற்குத் தனிச்சிறப்பியல்புகளும் உள்ளன. வரலாற்று ரீதியிலே நோக்கும்போது யாழ்ப்பாணக் குடாநாட்டைப் போன்று தீவகப்பகுதிகளிலும் கிறிஸ்துவுக்கு முற்பட்டகாலந் தொட்டு மக்கள் வாழ்ந்து வருகின்றனர். இத்தீவுகள் யாழ்ப்பாணக் குடாநாட்டுக்கு அண்மையில் உள்ளன. அதே வேளையில் தென்னிந்திய குறிப்பாகத் தமிழ்நாட்டுக் கரையோரப் பகுதிக்குச் சற்றுத் தொலைவில் உள்ளன. இத்தீவுகள் அமைதியான இயற்கைச் சூழ்நிலையுள்ள இடங்களாகும். இலங்கையின் பூர்வீகக்குடிகளான நாகர் இலங்கையின் வடபகுதியிலே வாழ்ந்தனர். இவர்களிடையே நாகவழிபாடு பிரபல்யமாக விளங்கிற்று. தீபவம்சம், மகாவம்சம் முதலிய நூல்களிலே நாகதீபம் ஒரு



**செ. சண்முகராசா,**
*செயலாளர்,*
*வேலணை பிரதேசசபை.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முக்கியமான பௌத்த நிலையமாகக் கூறப்படுகின்றது. நாகதீபம் என்னும் பதம் குறிப்பாக தற்போதைய நயினாதீ வையே குறிக்கும். நயினாப்பட்டர் என்னும் பிராமணர் தமிழ் நாட்டில் இருந்து இங்கு வந்து குடியேறியதால் இத்தீவுக்கு நயினாதீவு என்னும் பெயர் வந்தது. நயினாதீவு யாழ்ப்பாணத்திலிருந்து தென்மேற்கே சுமார் 29 கி.மீ தூரத்தில் அமைந்துள்ளது. இதன் மறுபெயர்களாக நாகதீவு, நயினாதீவு, நாகதீபம், பூந்தோட்டம், மணிபல்லவத்தீவு எனத் தமிழிலும், நாகதிவயின என சிங்களத்திலும் வழங்கப்படுகின்றது. யாழ்ப்பாணக் குடாநாட்டிலுள்ள "சப்ததீவு களின்" கேந்திரத் தலமாக விளங்குவது புங்குடுதீவு. யாழ் நகரிலிருந்து செல்லும் 29 கி.மீ நீளமுள்ள பிரதான பாதை மூலம் இத்தீவு யாழ்நகருடன் இணைக்கப் பட்டுள்ளது. பல குடாக்களையும் முனைகளையும் கொண்டுள்ள இத்தீவின் சுற்றளவு 34 கி.மீ ஆகும். மஞ்சள் நிறமும், வாசனையும் கொண்ட "புயங்கு" என்ற ஒரு வகை மரம் இங்கு செறிந்திருந்தமையால் "புயங்குதீவு" எனப் பெயர் பெற்று பின்பு புங்குடுதீவாயிற்று. சப்ததீவுகட்கும் தலையாய தீவாக விளங்குவதால் "மண்டைதீவு" எனப் பெயர் பெறுவதாயிற்று. இத்தீவு தலைத்தீவு என்றும் வழங்கப்படு கின்றது. இராம-இராவண யுத்தத்தின்போது இராம பாணத்தினால் வெட்டுண்டு பறந்த இராவணன் தலை இத்தீவில் வீழ்ந்தமை யால் இதற்கு "மண்டைதீவு" என்னும் பெயர் வந்தது. யாழ்ப்பாண நகரிலிருந்து செல்லும் சுமார் 5 கி.மீ நீளமுள்ள பாதையின் மூலம் வேலணைத்தீவு குடாநாட்டுடன் இணைக்கப் பட்டுள்ளது. இது "லைடன் தீவு" எனவும் வழங்கப்படும். இத்தீவின் உட்கிராமங்களாக மண்கும்பான், அல்லைப்பிட்டி, வேலணை என்பன விளங்குகின்றன. யாழ்ப் பாணத்தை ஆண்ட சிங்கை ஆரியச் சக்கரவர்த்தி காலத்தில் வேலன் என்னும் நாட்டுத் தலைவன் தானை சேனையுடன் இங்கு இருந்தபடியால் இவ்விடம் வேலணை எனப்பெயர் பெற்றது. அல்லி ராணி பற்றிய கதைகள் அல்லைப்பிட்டி யில் நிறுவுகின்றன. பண்ணைத்துறை என்னும் பெயர் சோழநாட்டிலுள்ள பெண்ணையாற்றுப் பகுதியில் இருந்து வந்தவர்களினால் இடப்பட்டது.

தீவுத்தொகுதிகள் வரலாற்றுக்காலம் முதற்கொண்டு சமூக, பொருளாதார பண்பாட்டியல் அடிப்படையில் சிறப்புற்று விளங்கியது. இத்தீவுகள் தென்னிந்தி யாவுக்கும், யாழ்ப்பாணக் குடாநாட்டுக்குமி டையே அமைந்துள்ளமையால் இருவேறு பகுதிகளின் சமூகபொருளாதார பண் பாட்டுத்தொடர்புகளுக்கு ஒரு பாலமாக அமைந்திருந்தது. தீவுகள் அதிவரள் வலயத்தில் காணப்படுவதாலும், மண் வளம், தரைகீழ் நீர்வளம் போன்றன மக்களின் வாழ்வுக்கு சவாலாக அமைந்துள்ளதாலும், நீர் வழிப்போக்கு வரத்தினூடாகவே தீவுகளுக்கிடையே யும், தீவுகளுக்கு வெளியேயும் தொடர்பினை ஏற்படுத்த வேண்டி இருந்த மையினாலும் தனிமைப்படுத்தப்பட்டதா கவே காணப்படுகின்றது. 1991ஆம் ஆண்டிலிருந்து தீவக மக்கள் புதிய வடிவிலமைந்த பிரச்சினைகளுக்கு முகம் கொடுக்க வேண்டிய நிர்ப்பந்தத்திற் குள்ளானார்கள். 1991ம் ஆண்டு வேலணை உதவி அரச அதிபர் பிரிவிலிருந்து 9000 குடும்பங்களைச் சேர்ந்த 40018 மக்களும், ஊர்காவற்றுறை உதவி அரச அதிபர் பிரிவைச்சேர்ந்த 9191 குடும்பங்களைச் சேர்ந்த 38480 மக்களும், ஒரு சில நாட்களில் தாம் வாழ்நாளில் அனுபவித்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தேடிய தேட்டங்கள் எல்லாவற்றையும் விட்டு யாழ்ப்பாணக்குடாநாட்டிற்கும், நாட்டின் ஏனைய பகுதிகளுக்கும் பண்ணை மற்றும் பொன்னாலைப் பாலங் களூடாக தற்காலிக நிரந்தர இடப்பெயர் வுக்கு உள்ளாக்கப்படவேண்டியது தவிர்க்க முடியாததாகியது. இந்நிலை யில் 1991ம் ஆண்டு இடப்பெயர்வினை மேற்கொண்டிருந்தவர்களின் மொத்த எண்ணிக்கை 78498 ஆகும். 1991ம் ஆண்டு தீவகத்தில் வாழ்ந்த மொத்த குடித்தொகையான 92717 மக்களில் 78498 மக்கள் வெளியிடப்பெயர்வினை மேற்கொண்டிருக்க 14219 மக்கள் இடம் பெயராத நிலையில் அவ்வப் பிரதேசங்களி லேயே வாழ்ந்து வந்தனர். தீவகத்தின் பொருளாதார அமைப்பானது மிக நீண்ட பழைமை வாய்ந்தது. 1996ம் ஆண்டு தீவுப்பகுதிகளிலிருந்து இடம் பெயர்ந்தவர்கள் மீண்டும் சொந்தப் பிரதேசங்களில் குடியேறுமாறு அரசு வேண்டுகோள் விடுத்திருந்தது. ஆனால் அவ்வேண்டுகோள்களை மக்களிற் பெரும்பாலானோர் ஏற்காத நிலைக்கு பல்வேறு காரணிகள் உண்டு. குறிப்பாக மருத்துவ நிலையம், பாடசாலை, போக்குவரத்து, தொழில்வாய்ப்பு, பாது காப்பு போன்றவற்றில் அதிககவனம் செலுத்தி மக்களைக் கவருவதற்கான வழிவகைகளை விரைந்து செய்தல் அவசியமாகின்றது. குறிப்பாக தீவகப்பிர தேசத்தின் உட்கட்டமைப்புகளின் பராமரிப்புக்களைப் பொறுத்தவரை எந்த ஒரு நிறுவனமும் சிரத்தை கொள்வதாகத் தெரியவில்லை. இதன் விளைவாக மக்கள் உள் இடப்பெயர்வினை மேற் கொள்வதில் பின்னிற்கின்றனர் என்பது தான் உண்மையான நிலையாகும். யாழ்ப்பாணக் குடாநாட்டில் கல்வி நிலையில் மேம்பாடடைந்த பிரதேசங் களில் தீவகமும் ஒன்றாகும். தீவகத்தில் தற்போதைய கல்வி நிலையானது பல ஆண்டுகளுக்கு பின்தள்ளப்பட்டு விட்டது என்பதுதான் உண்மை நிலையாகும். எனவே இங்கு வாழும் மக்களிடையே கல்விப் பாரம்பரியத்தை மீட்டெடுக்க வேண்டுமாயின் பின்தங்கிய வாழ்க்கைத் தரத்தினைக் கொண்ட மக்களின் வாழ்க்கைத் தரத்தினை உயர்த்துவது மட்டுமல்லாது சுதந்திரமாக கல்வி கற்பதற்கான வாய்ப்புக்களை ஏற்படுத்திக் கொடுத்தல் அவசியமாகும்.

தீவகப் பகுதியில் சிவன் வழிபாடு, தாய்த்தெய்வ வழிபாடு, விநாயகர் வழிபாடு, ஐயனார் வழிபாடு ஆகிய வழிபாடுகள் அன்று தொடக்கம் இன்றுவரை அதிகம் காணப்படுகிறது. தாய்த்தெய்வ வழிபாட்டிற்கு தீவகத்தி லுள்ள தலங்களில் நயினை நாகபூசணி அம்மன் ஆலயம் செல்வாக்குள்ள தலமாக விளங்குவது போல சிவவழி பாட்டிற்கு பிரசித்தி பெற்ற இடமாக காரைதீவில் உள்ள "ஈழத்துச்சிதம்பரம்" விளங்குகின்றது. தீவகத்தின் சமய நிலையை உற்று நோக்கும்போது ஆழத்தின் ஆதிமதமாக இந்துசமயமே விளங்கியது என்பது இற்றைவரை காணப்படும் வழிபாடுகள் மூலம் உறுதிப்படுத்தப் பட்டுள்ளது. ஐயனார் வழிபாடு தீவகப் பகுதிகளில் மேலோங்கி இருந்தது என்பதற்கு காரைதீவிலுள்ள வியாவில் ஐயனார் கோவில் குளக்கோட்ட மகாராஜன் காலத்தில் ஆரம்பிக்கப்பட்ட வரலாறும், வேலணை மேற்றிலுள்ள அரிகர ஐயனார் கோவில் வெடியரசன், பூதத்தம்பி காலத்தில் ஆரம்பிக்கப்பட்ட வரலாறும் சான்று பகர்வதோடு, அனலைதீவிலுள்ள ஐயனார் கோவில், சுருவில் ஐயனார் கோவில் போன்றவை இவ் ஐயனார் கோவில் வழிபாடு மேலும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வலுப்பெற்றிருந்தது என்பதைருசுப்படுத்துகின்றன. அல்லைப்பிட்டி கிராமத்தில் வாழ்ந்த மக்கள் யாவரும் தமிழர்கள் என்றும் இவர்களில் ஒருவர் கூட விதிவிலக்கின்றி சகலரும் சைவர்கள் என்றும் வரலாறு கூறுகிறது. இந்துமத்தின் செல்வாக்கு தீவகத்தில் அதிகரித்திருந்த போதிலும், பௌத்தமதத்தின் செல்வாக்கும் அன்று தொட்டு இன்றுவரை மேலோங்கி இருப்பதைக் காணலாம். நயினாதீவு என்றும் நாகதீபமென்றும் அழைக்கப்படும். இப்பகுதியில் புத்தபிரான் இரண்டு தடவைகள் வருகை தந்திருந்தார் எனவும் புத்த பெருமான் கால் பட்டபடியால் இது புனித இடமாகவும் பேணப்பட்டு 1939 - 1940ம் ஆண்டுகளில் இங்கு ஒரு தாது கோபுரம் புதுப்பிக்கப்பட்டது. 1947ல் பௌத்த விக்கிரகம் பர்மாவில் இருந்து கொண்டு வரப்பட்டு இங்கே பிரதிஸ்டை செய்யப் பட்டது. 1958ல் இப்பௌத்த கோவிலில் மேலும் புனருத்தாரண வேலைகள் நடைபெற்றன. தீவகத்தில் ஏனைய மதங்களோடு ஒப்பிடுகையில் இஸ்லாம் செல்வாக்கு உள்ள மதமாக எழுச்சி பெறவில்லை எனினும், மண்கும்பானில் உள்ள பள்ளிவாசல், நயினாதீவில் உள்ள பள்ளிவாசல் ஆகியவற்றின் தோற்றமும், பராமரிப்பும், தீவகம் அனைத்து மதத்தவரின் சின்னங்கள் காணப்படுகின்ற இடமாக மட்டும் அன்றி பௌத்த சிங்களவரின் புனித இடமாக தீவகத்தில் உள்ள நயினாதீவு விளங்குவது இப்பகுதிக்கு உரிய தனிச் சிறப்பாகும். வரலாற்றுக்காலம் தொடக்கம் தீவகம் ஒரு தனி நிர்வாகப் பிரிவாக இருந்து வருகின்றது. தீவுப்பகுதி மக்கள் ஆரம்ப காலத்தில் இருந்தே நாட்டுப்பற்று, மொழிப்பற்று, சமயப்பற்று உடையவர் களாகத் திகழ்கின்றனர்.

இத்தகைய வரலாற்றுச் சிறப்புகளோடு கூடிய தீவகப் பிரதேசம் குன்றாது பாதுகாக்கப்பட வேண்டுமாயின் நீர் வளத்தை குன்றாது பாதுகாக்க வேண்டும். நீர்வளம் இன்றியமையாதது. நீர் இன்றி நாடு இல்லை. கட்டுப்பாடுடைய நீர்ப்பாவனை வேண்டும். எதிர்காலச் சந்ததியினருக்கு நீர்வளத்தைப் பேணிக் கொடுக்க வேண்டும். தீவகப் பகுதிகளில் மழைவீழ்ச்சி வருடம் முழுவதும் சமனாகப் பெறப்படுவதில்லை. மொத்தத்தில் 50% மழை ஒக்டோபர், நவம்பர் மாதங்களிலேயே பெறப்படுகின்றது. மாரி காலத்தில் கூடிய நீர் தரைக்கீழ் நீராகச் சேமித்தல் மிக அத்தியாவசியமாகிறது. அத்தோடு பாவனையை மட்டுப்படுத்தலும் மிக முக்கியமாகும். வேலணைத்தீவில் சாட்டி, மண்கும்பான், அல்லைப்பிட்டி வலயம் சிறந்த நன்னீர் சேமிப்புக் கொண்ட வலயமாகும். மாரி காலத்தில் நன்னீர் பிரச்சனை இல்லை. ஏப்ரல் மாதம் தொடக்கம் செப்ரம்பர் மாதம் வரை நன்னீர்ப் பாவனையில் பிரச்சனை ஏற்படுகின்றது. நீர்பாவனை கடந்த காலங்களைவிட அதிகரித்துக் காணப் படுவதால் நன்னீர்ப் பகுதிகளும் உப்பு நீர்ப்பகுதிகளாக மாறிவரும் நிலை உருவாகிறது. வீட்டுத் தேவைக்காக நன்னீரை குழாய்கள் மூலம் விநியோகிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. புங்குடுதீவு, மண்டைதீவு போன்ற பகுதிகளுக்கு சாட்டியிலிருந்து கொள்கலன்கள் மூலம் நீர்விநியோகம் செய்யப்பட்டு வருகிறது. குழாய்மூலம் நீர் விநியோகம் வேலணை தவிர ஏனைய இடங்களுக்கு வெற்றிகரமாக அமையவில்லை. புங்குதீவுக்கு நாள் ஒன்றுக்கு 30,000 கலன் நீர் தேவைப் படுகிறது. இப்பொழுது மிக குறைவாகவே நீர்விநியோகம் நடைபெறுகிறது. நயினாதீவு மக்களும் போதிய நன்னீர் இன்மையால் கஸ்டப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

படுகின்றனர். தீராத பிரச்சனையாகவுள்ள நீர்ப்பிரச்சினையை தீர்த்து வைக்க நிலத்தடிநீர் ஆராய்ச்சி நிபுணர்களைக் கொணர்ந்து ஆராய்ந்து நிலையான நீர்விநியோகத்திட்டத்திற்கு அரச, அரச சார்பற்ற நிறுவனங்கள் பெருமளவில் நிதியுதவி செய்தல் வேண்டும். ஆகவே இனத்தை, மொழியை, பிரதேசத்தை பேணுதல் போல் பாதுகாத்தல் போல், அபிவிருத்தி செய்ய உழைப்பது போல் தரைக்கீழ் நீரையும் நாம் பேண வேண்டும், பாதுகாக்க வேண்டும். சேமிக்க வேண்டும்.

நிறைவாக தீவகமக்களின் வர லாற்றை நோக்கும்போது "திரை கடலோடியும் திரவியம்தேடு" என்னும் தமிழ் உரைக்கு அவர்கள் நல்ல எடுத்துக்காட்டாக விளங்குகின்றனர்.

"வரப்புயர நீர் உயரும்
நீர் உயர நெல் உயரும்
நெல் உயர குடி உயரும்
குடி உயர கோன் உயர்வான்"

-ஔவையின் வாக்கு

## சந்திரனுக்கு அடுத்து செவ்வாய்

சந்திரனில் காலடி வைத்துவிட்ட மனிதன் இப்பொழுது தனது அடுத்த முயற்சியாக செவ்வாயிலும் உயிரினங்கள் வாழ முடியும் என்று கூறிவருகிறான். இந்தக் கருத்துக்கு வலுவூட்டும் விதமாக சமீபத்தில் "மார்ஸ் ஒடிசி" என்ற விண்கலம் படம் வெளியிட்டது. படத்தில் செவ்வாயின் வடபகுதி உறை பனியால் மூடப்பட்டது போன்று உள்ளது. இந்த நீலநறம் பனிக்கட்டியைக் காட்டுகின்றது.


இந்த விண்கலம் சேகரித்த தகவலின்படி, உறைபனிப் படலம் பருவமாற்றங்களுக்கு உட்படுகின்றது. உலர்பனி (காபனீர்ஒட்சைட் நுரைபனி) குவிக்கப்படுவதுடன் பின்னர் இளவேனிற் காலம் தோன்றியதும் இது சிதறி அழிந்து விடுகின்றது. இதன் பின் நீர், பனிக்கட்டிகள் காணப்படும் பனிப்படலம் தெரிகின்றது.

ஆகவே, பனிக்கட்டிகள் இருப்பதனால் செவ்வாயில் உயிரினங்கள் வாழமுடியும் என்று விஞ்ஞானிகள் நம்பிக்கை தெரிவிக்கின்றனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தீவுகள் தெற்குப் பிரிவின் அபிவிருத்தியும் பிரச்சனைகளும்



பீ.பாலசுந்தரம்பிள்ளை,
*பேராசிரியர்,*
*யாழ் பல்கலைக்கழகம்.*

1991ஆம் ஆண்டு தீவுப்பகுதிக்கு மிகவும் துக்ககரமான ஆண்டாக அமைந்தது. அவ்வாண்டில் நடந்த யுத்தத்தினால் இப்பிரதேச மக்கள் கட்டாய பாரிய இடப்பெயர்வுக்குட்பட்டனர். வேலணைத்தீவு, காரைநகர், புங்குடுதீவு, மண்டைதீவு மக்களற்ற பிரதேசங்களாக மாறின. தீவுகள் தெற்குப் பிரதேசசபைப் பகுதியில் நயினாதீவு தவிர்ந்த ஏனைய பகுதிகள் எல்லாவற்றிலும் ஆயிரத்துக்குக் குறைவான மக்களே இடப்பெயர்வுக்குட் படாமல் 1996 வரை இங்கு இருந்தனர். இப்பகுதியில் இடப்பெயர்வுக்குட் படாதவர்கள் கூட தத்தம் வீடுகளில் இராமல், ஒரு சில இடங்களில் கூட்டாக வாழவிடப்பட்டனர். (வேலணை அம்மன் கோவிலடி, துறையூர், பெருங்காடு) நயினாதீவு மக்கள் பாரிய இடப்பெயர்வுக்குட்படாத பொழுதும் சிறுதொகையினர் இடம் பெயர்ந்திருந்தனர். தீவுகள் தெற்குப்பிரிவு மக்கள் போக்குவரத்திலும், நாளாந்த வாழ்க்கைக்குத் தேவையான பொருட்களையும், சேவைகளையும் பெறுவதிலும் மிகக் கடினமான பிரச்சனைகளை எதிர்நோக்கினர். உயர்மட்ட மருத்துவ சேவைகளைப் பெறுவதற்கும் மற்றும் கொழும்பு செல்வதற்கும் திருகோணமலை செல்லவேண்டியிருந்தது. வேலணை, புங்குடுதீவு, மக்கள் பொருட்களையும் சேவைகளையும் பெறுவதற்கு நயினாதீவு சென்றுவர வேண்டியிருந்தனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1991 ஆம் ஆண்டு பாரிய இடப்பெயர்வினால் இப்பிரிவைச் சேர்ந்த கிராமங்கள் பாரிய சமூக, பொருளாதாரப் பின்னடைவுகளை அடைந்தன. 1991இல் இப்பகுதியிலிருந்து ஒட்டுமொத்தமாக வெளியேறிய மக்கள் யாழ்ப்பாண நகரிலும், அதன் அயல் கிராமங்களிலும் பல்வேறு இன்னல்கள் மத்தியில் குடியேறி வாழ்ந்தனர். இவ்விடப் பெயர்வினால் அவர்களிடமிருந்த சமூக இணைப்புகள் அறுந்து இடம் பெயர்ந்த அகதி வாழ்வுக்கு முகம் கொடுக்க வேண்டியவர்களானார்கள். இடப்பெயர்வு சடுதியாகவும், ஒழுங்கற்றதாகவும் இடம்பெற்றதால் அவர்கள் தங்களுடைய பொருட்களைக் கொண்டுவர முடியவில்லை. இடம்பெயர்ந்த மக்களில் மிகப் பெரும்பான்மையானவர்கள் வீட்டுப்பிரச்சினை, தொழில் பிரச்சனைக்கு முகம் கொடுக்க முடியாத பல கஷ்டங்கள் மத்தியில் அரசாங்க நிவாரணத்தில் வறுமைக் கோட்டிற்குக் கீழ் வாழவேண்டியதாயிற்று. ஏலவே யாழ்ப்பாண நகரிலும் அதன் அயற் கிராமங்களிலும் மிகவும் கஷ்டத்தின் மத்தியில் வாழ்ந்த மக்கள்1995 ஆம் ஆண்டில் மீண்டும் பாரிய இடப்பெயர்வுக்குட்பட வேண்டிய துர்ப்பாக்கிய நிலைக்குட்பட்டனர். இவ்விடப் பெயர்வினால் குடும்பங்கள் மேலும் சிதறுண்டன. வாழ்க்கையில் நம்பிக்கை இழந்து பல திக்குகளுக்குச் செல்லத் தொடங்கினர். தென்மராட்சி, கிளிநொச்சி, வன்னி, வவுனியா மற்றும் பிற மாவட்டங்களுக்கும் சென்றனர். கிளிநொச்சி, வன்னிப்பகுதி குடியேற்றத்திட்டங்களில் தீவுப்பகுதி மக்கள் முன்னரே குடியேறியிருந்ததால் அவர்களின் தொடர்பு காரணமாக குறிப்பிடத்தக்க எண்ணிக்கையினர் கிளிநொச்சிக்குச் சென்றனர்.

இப்பிரதேச மக்கள் 1980களிலிருந்து தென்னிலங்கை இனக்கலவரங்களால் பெரிதும் பாதிக்கப்பட்டு வந்ததால் வெளிநாடுகளுக்கு இடம்பெயரும் போக்கு மக்களிடையே அதிகரிக்கத் தொடங்கின.

1980களில் ஏற்பட்ட இனக்கலவரங்களும், வடக்குப் பகுதியில் ஏற்பட்ட உள்நாட்டு யுத்தமும் அரசின் திறந்த பொருளாதாரக் கொள்கையும், வெளிநாடுகளுக்கு ஆட்களை அனுப்பும் முகவர்களின் வளர்ச்சியும் இப்பிரதேச மக்களின் வெளிநாட்டு இடப்பெயர்வை ஊக்குவித்தன. 1980களிலிருந்து குறிப்பிடத்தக்க தொகையினர் சர்வதேச இடப்பெயர்வுக்கு உட்பட்டனர். இப்போக்கு 1991க்குப்பின்னர் வேகமாக அதிகரித்தது. இன்று தீவுகள் தெற்கைச் சேர்ந்த மக்கள், அவர்களின் வழித் தோன்றல்கள் குறிப்பிடத்தக்க எண்ணிக்கையில் சுவிஸ், கனடா, பிரான்ஸ், இங்கிலாந்து மற்றும் பல ஐரோப்பிய நாடுகளில் வாழ்கின்றனர். துன்பமான இடப்பெயர்வுக்குட்பட்ட போதும் புதிய வாழ்வைத்தேடி கடின முயற்சிகள் மேற்கொண்டதினால் முன்னைய சமூக - பொருளாதார நிலையிலும் பார்க்க இடப்பெயர்வுக்குட்பட்ட பிரிவு மக்களில் ஒரு பகுதியினர் நல்வாழ்வைத்தேடியிருக்கின்றார்கள் என்றும் சொல்லலாம். இன்னுமொரு பகுதியினர் துன்பமான இடப்பெயர்வுக்கு உட்பட்டு உயிர்இழப்பு, பொருள் இழப்புடன் மீளமுடியாத பிரச்சினைகளுடன் வாழ்கின்றார்கள்.

1991-1995க்கு இடைப்பட்ட காலத்திலும் அதற்குப் பின்னரும் வேலணை, சரவணை, அல்லைப்பிட்டி, மண்கும்பான், மண்டைதீவு, புங்குடுதீவு ஆகிய கிராமங்களின் பொருளாதார வளம் பெரும் சேதத்துக்குட்பட்டது. யுத்தத்தினால்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெருமளவு வீடுகள், அசையும் சொத்துக்கள், பனை, தென்னை ஆகியன அழிவுக்குள்ளாகின. மக்கள் இடப்பெயர்வினாலும், நீண்ட காலமாக மக்கள்வீடுகளில் வாழாத காரணத்தாலும் பராமரிக்கப்படாததாலும் இயற்கையால் பெரும் அழிவுக்குட்பட்டன. குடியிருப்புப் பகுதிகளில் வீடுகள் மாத்திரமல்ல விவசாயத்துடன் தொடர்புடைய புகையிலைப் போறணைகள், மால்கள் மற்றும் பல தற்காலிக கொட்டில்கள் யாவும் அழிந்துபோயின. குடியிருப்புப் பகுதிகள் பற்றைக் காடுகளாக மாறின.

யாழ்ப்பாணத் தீவுகளின் பொருளாதாரத்தில் நீண்டகாலமாக விவசாயம், மீன்பிடி, சிறுகைத்தொழில்கள் முக்கிய இடம் பெற்றிருந்தன. பின்னர் படிப்படியாக இப்பிரதேசத்தின் பொருளாதாரத்தில் வெளியிடங்களிலிருந்து கிடைக்கும் உழைப்பு முக்கியம் பெறத் தொடங்கியது. புங்குடுதீவு, நயினாதீவு ஆகியவற்றின் பொருளாதாரச் செயற்பாட்டில் வெளியிலிருந்து கிடைத்த வருமானம் மிகமுக்கியவிடத்தைப் பெற்றிருந்தது. வேலணை, சரவணை, மண்டைதீவு, அல்லைப்பிட்டி, மண்கும்பான் ஆகிய கிராமங்களின் பொருளாதாரத்தில் விவசாயம், மீன்பிடி, சிறுகைத்தொழில்களே தொடர்ந்தும் குறிப்பிடத்தக்க பங்கை வகித்து வந்தன.

1954இல் புங்குடுதீவுக்கும் வேலணைக்கும் இடையே பாதை அமைக்கப்பட்டது. 1961இல் அமைக்கப்பட்ட பண்ணை பாதையால் யாழ்ப்பாண நகருக்கும் வேலணைத் தீவுக்கும் தரைவழிப் போக்குவரத்து கிட்டியது. இதனைத் தொடர்ந்து 1960களின் முற்பகுதியில் குறிகாட்டுவான் இறங்குதுறை அமைக்கப் பட்டது. நெடுந்தீவு, நயினாதீவு மக்கள் ஊர்காவற்துறை வழியாக யாழ்ப்பாணம் செல்லாமல் குறிகாட்டுவானிலிருந்து நேரடியாக யாழ்ப்பாண நகருக்கு மிகக்குறுகிய நேரத்தில் செல்லக்கூடிய வாய்ப்பேற்பட்டது. போக்குவரத்துத்துறையில் ஏற்பட்ட இப்பாரிய முன்னேற்றத்தால் தீவுப்பகுதியில், குறிப்பாக வேலணையிலும், புங்குடுதீவிலும் பாரிய சமூக - பொருளாதார மாற்றங்கள் ஏற்படத் தொடங்கின. இவ்விருதீவுகளும் யாழ்ப்பாணநகருடன் நெருக்கமாகப் பிணைக்கப்பட்டன. இப்பகுதியில் வாழும் மக்கள் தொழிலுக்காகவும், பொருட்கள் சேவைகள் பெறுவதற்காகவும் யாழ்ப்பாண நகரத்துக்குச் செல்லும் வழக்கம் அதிகரிக்கத் தொடங்கியது. வெளிப் பொருளாதாரச் செல்வாக்கால் தீவுகளின் சமூக-பொருளாதாரம் 1960களில் துரிதமாக அபிவிருத்தி காணத்தொடங்கியது. மேலும் 1970களில் இப்பிரதேசத்தில் மேற்கொள்ளப் பட்ட மிளகாய்ச் செய்கை மூலம் விவசாயிகள் குறுகிய காலத்தில் குறிப்பிடத்தக்க செல்வத்தை ஈட்டினார்கள். மிளகாய்ச் செய்கையால் கிடைத்த வருமானத்தால் விவசாயிகள் கல்வீடுகள் கட்டினார்கள். 1970களில் இருப்பிடவசதிகளை மேம்படுத்துவதில் இப்பகுதிகள் குறிப்பிடத்தக்க முன்னேற்றம் கண்டன. 1970களில் தீவுகள் உதவி அரசாங்க அதிபர் பிரிவு வேலணையில் அமைக்கப்பட்டதும், அதனைத்தொடர்ந்து கமநல சேவை நிலையம், மிருக வைத்திய நிலையம் கல்விக்கந்தோர், மின்சாரசபை, உபகாரியாலயம், நீர்வழங்கல் காரியாலயம், வங்கி ஆகிய பல நிறுவனங்கள் வங்களாவடியில் நிறுவப்பட்டன. இதன் காரணமாக வேலணை வங்களாவடி ஒரு முக்கிய சேவை நிலையமாக வளர்ச்சிபெற்றது. தீவுகள் தெற்குப் பிரிவில் ஒட்டுமொத்தமாக சேவை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வசதிகள் வளர்ச்சிபெற்றதால் மக்கள் நேரடியாகவும் மறைமுகமாகவும் பல நன்மைகளைப் பெற்றனர்.

1960களில் பண்ணைப்பாதை அமைக்கப்பட்டதால் மண்கும்பான், அல்லைப்பிட்டி ஆகிய கிராமங்களில் இருந்த மணலுக்கு யாழ்ப்பாண நகரத்திலும், நகர அயல் பகுதிகளிலும் பெரும் கிராக்கி ஏற்பட்டது. இப்பகுதியில் கிடைத்த இயற்கைவளத்தை அல்லைப்பிட்டி, மண்கும்பான் மக்கள் விற்று தங்களது பொருளாதார நிலையை மேம்படுத்தினர். இவர்கள் குறிப்பாக யாழ்ப்பாண நகரப்பகுதியில் நகைக்கடை வியாபாரத்தில் ஈடுபட்டு இத்தொழிலில் குறிப்பிடத்தக்க முன்னேற்றம் கண்டனர். மேலும், யாழ்ப்பாண நகரப்பகுதி மெய்யாதனத்தில் குறிப்பிடத்தக்க முதலீடு செய்துள்ளனர். விவசாயத்திலிருந்து மிகவும் குறைந்த வருமானத்தைப் பெற்றுவந்த மண்கும்பான், அல்லைப்பிட்டி மக்களின் பொருளாதார முன்னேற்றத்துக்கு மணல் விற்பனை பெரும் பங்களித்தது எனலாம்.

1996 மீள் குடியேற்றத்திற்குப் பின்னர், விவசாயம், மீன்பிடி, பனைசார் தொழில்கள் ஓரளவு மீளவும் விருத்தி பெற்று வந்தாலும் வர்த்தக சமூகத்தின் பங்களிப்பு மிகவும் குறைந்து காணப்பட்டது. இப்பிரதேசத்தைச் சார்ந்த தென்னிலங்கை வர்த்தக சமூகம் இப்பொழுது மிகவும் குறுகிவிட்டது. மேற்படி சமூகத்தினர் யாழ்ப்பாணம், கொழும்பு நகர மக்களுடன் தங்களை முழுமையாக இணைத்துக்கொண்டனர். மாற்றாக வெளிநாடுகளிலிருந்து சிறிதளவு பணம் கிடைத்துவருகின்றமை குறிப்பிடத்தக்கது. இப்பிரதேசத்தின் பொருளாதார வளர்ச்சி இன்னும் சில காலத்துக்கு விவசாயம், மீன்பிடி, பனைசார் தொழில்களின் முன்னேற்றத்திலேயே தங்கியிருக்கும் எனக்கொள்ளலாம்.

மேற்குறிப்பிட்டதொரு சமூக - பொருளாதாரப் பின்னணியிலேயே தீவுப்பகுதியின் அபிவிருத்தியை முன்னெடுக்கவேண்டியுள்ளது. 1996ஆம் ஆண்டிலிருந்து மீளக்குடியமர்வு, மீள அபிவிருத்தி நடவடிக்கைகளை முன்னெடுப்பதில் யாழ்ப்பாண மாவட்டத்தில் ஏனைய பிரிவுகள் எதிர்நோக்கிய பிரச்சினைகளிலும் பார்க்க, தீவுகள் தெற்குப்பிரிவு கூடுதலான பிரச்சினைகளை எதிர்நோக்கியது. அவை வருமாறு.

1) இப்பிரிவு யாழ்ப்பாணத்திற்கு மேற்கே மூன்று தீவுகளைக் கொண்டதாகவும் நயினாதீவு கடலால் பிரிக்கப்பட்டும், மண்டைதீவு நீண்டகாலமாக இராணுவ கட்டுப்பாட்டுப் பகுதியாகவும் இருந்து வருகின்றன.

2) தீவுப்பகுதிப் போக்குவரத்து இராணுவத்தால் மிகவும் கட்டுப்படுத்தப்பட்டு இருந்தது. பிரயாண நேரக்கட்டுப்பாடு, தங்கிநிற்பதில் கட்டுப்பாடு மற்றும் சோதனை நிலையங்களின் செயற்பாடு போன்றன ஆரம்பகாலங்களில் (1996-1998) மிகவும் கடுமையாக இருந்ததால் புனர்வாழ்வு நடவடிக்கைகள் தாமதமாகின. இப்பொழுது மேற்குறிப்பிட்ட விடயங்களில் முன்னேற்றங்கள் ஏற்பட்டாலும் முழுமையான மாமூல் நிலை ஏற்படவில்லை.

3) மண்டைதீவின் ஒரு பகுதி, அராலி தரவைப்பகுதி, வேலணை மத்திய கல்லூரிச் சுற்றாடல் ஆகியன இராணுவக்கட்டுப்பாட்டுப் பகுதியாக இருப்ப



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தால் இப்பிரதேசங்களைப் பயன் படுத்து வதிலும்,வேலணை சேர் வைத்திய லிங்கம் துரைசாமி மத்திய மகாவித்தி யாலயத்தை அதனது சொந்த இடத்தில் இயங்கவைக்க நீண்ட காலமாக முயற்சி எடுக்க வேண்டியிருந்தது.

4) இப்பிரிவிலிருந்து இடம் பெயர்ந்த மக்களில் கணிசமான தொகையினர் சர்வதேச, தேசிய, பிராந்திய இடப்பெயர்வுக்கு உட்பட்டு, புதிதாக வாழ்வையமைத்துக் கொண்ட பகுதி களில் தொடர்ந்தும் வாழவிருப்பம் கொண்டவர்களாக இருந்து வருகின்ற னர். இதனால் பழைய குடிசனத் தொகையைப் பெறமுடியாதிருக் கின்றது. நலிந்த பிரிவினரே மீள்குடி யமர்விற்கு உடன் முன்வந்தனர். வன்னிக்குச் சென்றவர்கள் அங்குள்ள குடியேற்றத் திட்டங்களிலிருந்த தீவுப்பகுதி மக்களின் உதவியுடன் அங்கு வாழ்ந்து, நிலைமை சீரானதும் இங்கு வரலாம் என்ற எண்ணத்துடன் இருந்ததால் படிப்படியாகவே அவர்கள் தீவுப்பகுதிகளுக்கு மீள்குடியேறி வந்துள்ளனர்.

5) யாழ்ப்பாண நகருக்கு இடம்பெயர்ந்த தீவு மக்கள், தங்கள் கிராமங்களில் பற்றுக்கொண்டவர்களாக இருந்த போதும் பிள்ளைகளின் கல்வி, தொழில் வாய்ப்பு, வாழ்க்கைவசதிகள், சமூக அந்தஸ்து ஆகியனவற்றைக் கருத்திற் கொண்டு, குடும்பத்தை நகரில் வைத்துக்கொண்டு, தங்களது நிலபுலங்களைக் கவனித்துவருகின்ற போக்கு மீள்குடியேற்றம், புனர்வாழ்வு நடவடிக்கைகளை வேகப்படுத்த வில்லை.

6) நெற்காணி, தோட்டக்காணி, பனம் காணி, மற்றும் வீடுவளவுக் காணிகளின் சொந்தக்காரர்கள் நகரத் தில் வாழ்ந்து கொண்டு தம் நிலங்களைப் பயிர் செய்வதிலும் அபிவிருத்தி செய்வதிலும் பல சிக்கல்களை எதிர்நோக்க வேண்டி யுள்ளனர்.

7) இப்பிரதேசம் பின்தங்கியதாக இருப்ப தால் இப்பிரதேசத்தில் கடமையாற்ற போதிய அரச, அரசசார்பற்ற ஊழியர் களை உள்ளூரில் பெறுவது கடினமாக இருக்கின்றது. இங்கு கடமையாற்றும் ஊழியர்களில் மிகக்கூடிய விகி தத்தினர் இங்கு நிரந்தரமாக வாழாது யாழ்ப்பாணநகரிலிருந்து தினசரி கடமைக்கு வந்துபோவதால் அவர்கள் தம் பணியைச் சிறப்புறச்செய்வதில் பல சிரமங்களை எதிர்நோக்கு கின்றனர். மேலும் அவர்களின் வரு மானம் மற்றும் சமூகத்தில் கொண் டுள்ள செல்வாக்கும் இப்பிர தேசமக் களுக்குச் சென்றடைவதில்லை.

8) இப்பிரதேசத்தின் பொருளாதாரத்தில் மீன்பிடி முக்கியமாக இருந்தாலும் மீன்பிடித்துறையின் வளர்ச்சினை முன்னெடுப்பதில் பல பிரச்சினைகளை எதிர்நோக்கவேண்டியுள்ளது. கடற் படைக்கட்டுப்பாடுகள், இந்திய மீனவர் களின் ஊடுருவல் போன்றன பெரும் பிரச்சினைகளை உருவாக்கியுள்ளன.

மேற்குறிப்பிட்ட பிரச்சினைகளின் பின்னணியில் தீவுகள் தெற்குப் பிரதே சத்தை எவ்வாறு அபிவிருத்திசெய்யலாம் என நோக்குவோம்.

இப்பிரிவு 96 சதுர கிலோ மீற்றர் பரப்பளவையும் இன்று ஏறத்தாழ 20,000 மக்களையும் கொண்டு, விளங்குகின்றது. 1981இல் இப்பிரிவு 38,500 மக்களைக் கொண்டிருந்தது. ஆகவே 1981இல் இருந்த மக்கள் தொகையை மீளப்பெற



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பலவாண்டுகள் செல்லலாம். இடம் பெயர்ந்து பின் மீளக்குடியமரக்கூடிய மக்களில் பெரும்பாலானோர் மீளக் குடியேறிவிட்டனர். இப்பிரதேசம் மேலும் வளர்ச்சியுறும் பொழுது சிறு தொகை யினர் மீளக்குடியமர வரலாம் - மக்கள் தொகை இடப்பெயர்வால் குறை வடைந்தது இயற்கை வளத்தில் தாக்கத் தைக் குறைத்தாலும் அது இப்பிரதே சத்தின் எதிர்கால வளர்ச்சியைப் பாதித்துள்ளது எனலாம்.

இப்பிரதேசத்தின் எதிர்காலப் பொரு ளாதாரவளர்ச்சி விவசாயம், மீன்பிடி, விலங்கு வேளாண்மை, பனைசார் தொழில்களில் தங்கியுள்ளது. இதனால் இப்பிரதேசத்தின் நிலம், நீர், கடல், பனை/தென்னை வளங்களை நன்கு காத்து வளம்பெருக்க வேண்டும். இப்பிரதேசத்தில் ஏழு வகையான நிலங்கள் / நிலப்பயன்பாடுகள் காணப்படு கின்றன. அவையாவன:

1. நெற்காணிகள்
2. தோட்டக்காணிகள்
3. வீடும் / வீட்டுத்தோட்டமும்
4. பனை வளவுகள்
5. தரவை நிலம்
6. மணல் நிலம்
7. சதுப்பு நிலம்

## நெற்காணிகள்

நெற்காணிகள் தாழ் நிலங்களாக இருப்பதுடன் வருடத்தில் ஒருமுறை பெரும்போகத்தில் பயிர் செய்யப்ப டுகின்றன. நெல் அறுவடை முடிந்ததும் வேறு பயிர் செய்வது மிகமிகக் குறைவு. கோடை காலத்தில் கிணற்று நீர் மிகக்குறைவாகவே இருப்பதால் கோடைப் பயிர்கள் யாதும் செய்யமுடியாதுள்ளது. மேலும் கட்டாக்காலி மாடுகளின் தொல்லையால் எள்ளு போன்ற பயிர்களும் செய்யப்படுவதில்லை. மண்டைதீவு, அல்லைப்பிட்டி, புங்குடுதீவு, நயினாதீவு ஆகிய பகுதிகளில் நெற்பிரதேசம் நிலப்பயன்பாட்டு மாற்றுக் குள்ளாகவில்லை - ஆனால் வேலணை, சரவணைப் பகுதிகளில் 1970, 1980 களில் குறிப்பிடத்தக்க நெற்செய்கைப்பரப்புகள் கொட்டுமண் போட்டு தரையை உயர்த்தி தோட்ட நிலங்களாக மாற்றப்பட்டுள்ளன. இதனால் வயல் நிலங்களின் முக்கி யத்துவம் வேலணை, சரவணைப் பகுதிகளில் குறைவடைந்துள்ளது. இப்பிரதேசம் முழுவதும் நெற் செய்கை ஒரு லாபகரமற்ற பயிர்ச்செய்கையாக இருந்துவருகின்றது. உற்பத்திச் செல வுக்கு ஈடுகொடுக்க முடியாததால் நெற்செய்கைப் பரப்புகளின் எல்லை நிலப்பரப்பு அதிகரித்துவருகின்றது. எதிர்காலத்தில் நெற்செய்கைப்பரப்பு முழுவதும் பயிர்ச் செய்கைக்கு உட்படுத் தப்படுவதுடன் கோடை காலத்தில் சிறு தானியங்கள் அல்லது எண்ணெய் வித்துக்கள் உற்பத்திக்குப் பயன்படுத்தப் படக்கூடிய மாதிரி விருத்தி செய்யப்பட வேண்டும். நெற்செய்கை லாபம் தரும் விவசாய நடவடிக்கையாக மாற்றப்பட வேண்டும்.

### தோட்டக்காணிகள்

தோட்டக்காணிகளின் மிகக்கூடிய விகிதம் ஒரு போக புகையிலை பயிர்செய்யப் பயன்படுத்தப்படுகின்றது. வளம் குறைந்த தோட்டக்காணிகளை வெங்காயச் செய்கைக்கு பயன்படுத்தப் படுகின்றன. நீர் சிக்கன முறையில் புகையிலை, செய்கை இடம்பெறல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேண்டும். இதற்குப் பொருத்தமான பயிர் அறிமுகம் செய்யப் படவேண்டும்.

## தரவை நிலங்கள்

இப்பிரிவில் தரவைக்காணிகள் மிக முக்கிய இடத்தைப் பெற்றுள்ளன. மாரிகாலத்தில் இத்தரவை நிலங்களில் நீர் தேங்கி நிற்கும். நீர் வற்றியதும் இவை புற்தரையாக இருக்கும். இப்பிர தேசங்களில் காணப்படும் ஆடு, மாடுகள் தரவைநிலத்தை மேச்சலுக்குப் பயன்படுத் தப்படுகின்றன எனினும் அண்மைக் காலத்தில் ஒழுங்கற்றமுறையில் மண் அகழ்வு செய்யப்பட்டதால் தரைத் தோற்றத்தில் குன்றுகளும் பள்ளங்களும் ஏற்பட்டுள்ளன. இதனால் தரவைப் பகுதிகள் ஒழுங்கான சமதரையாக மாற்றப்படின் இதன்மூலம் நல்ல பலன் பெறமுடியும். மேலும் இத்தரவை நிலங் களின் பௌதிக சூழலில் வளரக்கூடிய நல்லபுல் இனம் அறிமுகப்படுத் தப்பட்டால் இப்பிரதேசத்தில் விலங்கு வேளாண்மையைச் சிறப்பாக விருத்தி செய்யலாம். மேலும் சோளகக்காற்றுக் காலத்தில் பறக்கும் புழுதியைக் கட்டுப்படுத்தக்கூடியதாக இருக்கும் இத்தரவை நிலங்களில் குறிப்பாக எல்லைப்பகுதிகளில் சமுதாயக்காடுகள் உருவாக்கப்படின், கிராமத்துக்குத் தேவையான விறகு மற்றும் தேவை களைப் பெறக்கூடியதாக இருப்பதுடன் இப்பிர தேசத்தைப் பசுமையாகவும் வைத்திருக்க முடியும். ஊர்காவற்றுறை - யாழ்ப்பாணம் பிரதான வீதியில் அல்லைப் பிட்டியிலிருந்து சரவணை 8ஆம் கட்டை வரைக்கும் றோட்டின் இருபக்கமும், மேலும் வடக்கே கடற்கரை வரையும் தரவை நிலம் காணப்படுகின்றது. இதுபோல புங்குடுதீவு, மண்டைதீவு, நயினாதீவிலும் தரவை நிலம் முக்கிய நிலப்பரப்பாக இருக்கின்றது.

## வீடுகளும் வீட்டுத்தோட்டங் களும்

பெரிய இடப்பெயர்வுக்குப் பின்னர், ஆறு வருடங்கள் வரை மக்கள் இங்கு வாழாது விட்டால் இப்பிரதேசத்து வீடுகளும் வீட்டுத்தோட்டங்களும் பெரும் அழிவுக்குட்பட்டன. இப்பகுதியில் காணப் படும் வீடுகள் / வீட்டுத்தோட்டப் பகுதிகள் உயர்வான நிலப்பகுதிகளில் காணப் படுகின்றன. மேலும் நீர், வயல் நிலங் களிலும், தோட்ட நிலங்களிலும் காணப் படும் நீரிலும் பார்க்க சவர்த்தன்மையைக் கூடுதலாகக் கொண்டுள்ளது. இதனால் குடிநீரைக்குழாய் மூலமோ வயல் வெளி களில் உள்ள கிணறுகளில் இருந்தோ பெறவேண்டியுள்ளது. வீட்டுத் தோட்டங் களில் குறிப்பாக பனை, தென்னை, வேம்பு, முருங்கை காணப்படுகின்றன. வீட்டுத்தோட்டங்கள் பெரும் அழிவுக்குட் பட்டதால் வீட்டுத்தோட்ட வான் பயிர்கள் நடுகைக்கு முக்கியத்துவம் கொடுக்கப் படவேண்டும்.

## பனை வளவுகள்

பனை வளவுகள் ஒப்பீட்டு ரீதியில் உயரமான பகுதிகளில் அமைந்திருப் பதுடன் இப்பரப்புகள் மிகவும் வளம் குறைந்த பகுதிகளாகக் காணப் படுகின்றன. மணல் பிரதேசங்களிலும் கூடுதலாக பனை / வடலிகள் நெருக்க மாகக் காணப்படுகின்றன. கடந்த காலங்களில் ஏற்பட்ட யுத்தத்தினால் பெருமளவு பனை மரங்கள் வெட்டியழிக் கப்பட்டன. இதனால் இப்பிரதேசத்தின் இயற்கை தாவரப்போர்வையை அதிகரிப்ப



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தற்கும், பொருளாதாரக் காரணங்களுக்குமாக பனை நடுகை பெரும் எடுப்பில் மேற்கொள்ளப்படவேண்டும். இப்பிரதேசத்தின் நில நீர் வளத்துக்கும், காலநிலைக்கும் மிகப்பொருத்தமான மரமாக பனை மற்றும் தென்னை காணப்படுகின்றன.

## மணல் பிரதேசம்

மண்கும்பான், அல்லைப்பிட்டிக் கிராமங்களில் கடந்த காலங்களில் பெருமளவு மணல் கும்பிகள் இருந்தன. கட்டிடத் தேவைகளுக்குப் பெருமளவு மணல் எடுத்ததால் பல இடங்களில் தரைமட்டம் கடல் மட்டத்திலும் பார்க்கக் குறைவாக இருப்பதைக் காணலாம். கட்டுப்பாடற்ற முறையில் மணல் எடுக்கப்பட்டதால் நிலம் பழநிலமாக மாறியுள்ளது. முன்னர் இருந்த தாவரப்போர்வையை இழந்துள்ளது. சூழல் பேணும் வகையில் இம் மணல் பிரதேசத்து மணல் வளம் பயன்படுத்தபடவேண்டும்.

## சதுப்பு நிலம்

இப்பிரிவிலுள்ள தீவுகளில் குறிப்பாக மண்டைதீவு, வேலணைத்தீவு, புங்குடுதீவு ஆகியவற்றின் வடகரையோரப் பகுதிகள் சதுப்புக்கரையோரமாகவும், சதுப்புத்தீவுகளையும் கொண்டு காணப்படுகின்றன. மண்டைதீவு, அல்லைப்பிட்டி, பண்ணைக்கு இடைப்பட்ட முக்கோணப்பகுதி ஒரு சதுப்பு நிலப் பகுதியாகவும் கடல்நீர் தாவரத்தைக் கொண்ட பரப்பாகவும் இருக்கின்றது. இப்பிரதேசத்தை பறவை சரணாலயமாக விருத்திசெய்ய வேண்டுமென்று பலமுறை சிபார்சு செய்யப்பட்டும் அது இன்னும் கைகூடவில்லை. யுத்தத்தின் காரணமாக இச்சதுப்பு நில கண்ணாக்காடுகள் பெருமளவு அழிக்கப்பட்டுள்ளன. கடற்கரையோரப் பகுதிகளில் மீன் விருத்திக்கு இச்சதுப்புக் காடுகளும், சதுப்பு நிலப் பிரதேசங்களின் இயற்கைச் சூழலும் பாதுகாக்கப்பட வேண்டும்.

## நீர்வளம்

இப்பிரதேசம் சிறிய நிலப்பரப்புக் களைக் கொண்ட பல தீவுகள், அல்லது நிலத்திணிவுகளைக் கொண்டு இருப்பதால் நீர்வளம் மட்டுப்படுத்தப்பட்டு ஒரு சில இடங்களில்தான் நன்னீர்வளம் காணப்படுகின்றது. மற்றும் வருடம் முழுவதும் நீர்வளம் பெறுவது கடினமாகவுள்ளது. குறிப்பாக யூலை, ஓகஸ்ட், செப்டெம்பர் மாதங்களில் நீர்நிலை களில் நீர் முற்றாக வற்றிவிடுவதுண்டு. கிணறுகளில் நீர்மட்டம் கீழ் சென்றுவிடும். குடிநீருக்கு மக்கள் பொது விநியோகத்தை நம்பியிருக்க வேண்டியதாக இருக்கின்றது. இப்பிரதேசத்தில் சாட்டி பிரதேசத்தைத் தவிர்ந்த ஏனைய பகுதிகளில் நீர்ப்பிரச்சினை வருடம் முழுவதுமோ அல்லது ஒரு காலப்பகுதியிலோ மக்கள் எதிர்நோக்குகின்றனர். இதனால் சாட்டியை அடிப்படையாகக் கொண்ட வேலணை குடிநீர்த் திட்டமும், அல்லைப்பிட்டியை அடிப்படையாகக் கொண்ட ஊர்காவற்றுறை குடிநீர்த் திட்டம் நல்ல முறையில் பேணப்படவேண்டும். மிகையான நீர்ப்பாவனை காரணமாக இப்பிரதேசங்களில் காணப்படும் நீர் வளத்தை மக்கள் இழக்க வேண்டிவரும். நீர் வளத்தைப் பேண இப்பிரதேசங்களிலுள்ள குளங்களும், வாய்க்கால்களும் தூர் எடுத்து நல்ல முறையில் பேணப்படவேண்டும். வேலணைப் பகுதியில் கல்லாண்ட



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முனைப் பகுதியிலிருந்து சரவணை நாய்குட்டி வாய்க்கால் வரையில் மாரிகாலத்தில் ஓடும் சிறு அருவியையும், அதன் வழியில் காணப்படும் குளங்களான பெருங்குளம், நவக்கை, முந்தாய் வெட்டுக்குளம், உப்புக்குளி, புதுக்குளம் போன்றன சிறந்தமுறையில் தூர் வாரி கூடியளவு நீரை வைத்திருக்கக்கூடியதாக மாற்றப்பட வேண்டும். இதேபோல் வேலணை மேற்கு, புங்குடுதீவு, நயினாதீவு, பகுதிகளில் காணப்படும் நன்னீர் நிலைகள் சிறந்த முறையில் விருத்திசெய்யப்படவேண்டும். கடல்நீர் உள்வராது கட்டப்பட்ட தடுப்பணைகள் தற்பொழுது மீளஅமைக்க நடடிவடிக்கை கள் எடுக்கப்பட்டுவருவதைக் காணலாம்.

அராலி, சரவணை, அல்லைப்பிட்டி, மண்கும்பான் பகுதிகளில் வடகரையோரப் பகுதியில் தடுப்பணைகள் சீர்செய்து புதுப்பிக்கப்பட வேண்டும். நாய்க்குட்டி வாய்க்காலில் அமைந்துள்ள பராஜ் திருத்தப் பட்டால் சரவணையில் கடல்நீர் உட்புகுவதை தடுக்கமுடியும். இதன் வழியாக உவர்நீராவதைக் குறைக்கவும், தரவை நிலங்களில் உவர்த்தன்மையைக் குறைக்கவும் வழிவகுக்கலாம்.

இப்பிரதேசத்து நன்னீர் பழுது படாமல் இருப்பதற்கு ஒழுங்குபடுத்தப் பட்ட நீர்ப் பாவனை முக்கியமாகும். தோட்டச் செய்கையை ஒக்டோபரில் தொடங்கி சித்திரை வருடப்பிறப்புக்கு முன்னர் முடிவுக்குக்கொண்டு வர வேண்டும். 1970களில் மிளகாய்ச் செய்கை மிகவும் அதிகளவாகவும், உற்சாகமாகவும் நடைபெற்றபொழுது இப்பயிர்ச் செய்கை ஆனி, ஆடி மாதங்கள் வரை நீடித்ததால் நீர் உவர்த்தன்மை அடைந்ததை மக்கள் அறிவர்.

தீவுப்பகுதியின் மிகக்குறைந்த வளமான நன்னீர் வளம் மிகவும் சிக்கனமுறையில் நிலைத்துநிற்கும் பண்புடன் பயன்படுத்த வேண்டியதன் உண்மையை மக்கள் யாவரும் அறிந்திருக்கவும், நடைமுறையில் கடைப்பிடிக்கவும் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

இப்பிரதேசத்தின் இயற்கைத் தாவரம் வறள்நிலவளரிப் பிரிவைச் சார்ந்தது. மனித நடவடிக்கை மூலம் பெருமளவு தாவரப்போர்வையை ஏற்படுத்துவது மிகவும் கடினமானதும், நீண்டகாலம் எடுக்கும் செயற்பாடாகவும் இருந்துவருகின்றது. அண்மையில் நடைபெற்ற யுத்தத்தினால் இப்பிரதே சத்தில் பெருமளவு பனை, தென்னை அழிவுக்குட்பட்டன. மேலும் மனித முயற்சி யால் நடப்பட்ட வான் பயிர்களும் அழிவுக்குட்பட்டன. இதனால் இப்பிர தேசத்தின் தாவரப்போர்வையை மேம் படுத்த மரநடுகை இயக்கம் சிறப்பாக மேற்கொள்ளப் படவேண்டும்.

## மீன்பிடித்தொழில்

இப்பிரதேசத்தில் மீன்பிடித்தொழில் மிக முக்கியத்துவம் பெறுகின்ற பொழுதும், இத்தொழிலும், மொழில் சார்ந்த சமூகமும் பல பிரச்சினைகளை எதிர்நோக்கியுள்ளன. மிகையான மீன்பிடி யால் கடலில் மீன்வளம் குறைந்துபோக வாய்ப்புண்டு. இந்திய மீனவர்கள் நெடுந்தீவு, கச்சதீவு கடற்பகுதிகளைக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காலத்துக்குக்காலம் ஆக்கிரமிப்பதால் இப்பகுதி மீனவர்கள் பெரும் கஷ்டத்துக் குள்ளாகின்றனர். மேலும் இப்பிரிவில் மீன்பிடிமையங்களில் இறங்கு துறை களோ, மீன்பிடித்துறைமுகங்களோ இல்லாதிருப்பது பெரிய குறைபாடாகும். இதனால் வேலணை செட்டிபுலத்தில் மீன்பிடித்துறைமுகம் ஒன்று அமைக்கப்பட வேண்டும். இக்கோரிக்கை நீண்டகாலமாக இருந்து வருவதுடன் 1959இல் தயாரிக் கப்பட்ட 10 ஆண்டுத் திட்டத்திலும் இவ்மீன் பிடித்துறைமுகத்திட்டம் இனங்காணப்பட்டுள்ளது. மேலும் மீன்பிடித்தொழில் வளர்ச்சிக்கு கெட்டில், துறையூர், அல்லைப் பிட்டி, புங்குடுதீவு, நயினாதீவுகளில் இறங்கு துறைகள் அமைக்கப்படவேண்டும். வெளிச்ச வீடுகள் இல்லாதிருப்பதும் மீனவர் களுக்குப் பெரும் இடர்பாடாகவுள்ளது. ஆகவே மீன்பிடித்தொழிலையும் இதில் ஈடுபட்டுள்ள சமூகத்தையும் முன்னெடுக்க இரு முனைப்பு அபிவிருத்தி நடவடிக் கைகள் முன்னெடுக்கப்படவேண்டும்.

பனைசார் தொழில்களில் பாய், பெட்டி, கடகம் இழைத்தல் போன்ற தொழில்கள் மீண்டும் விருத்தி செய்ய சாதகமான நிலை ஏற்படலாம். சுற்றுச் சூழல் பேணும் பிரிவினர் பிளாஸ்டிக் பை பாவனையால் ஏற்படும் பிரச்சினைகளை முன்னெடுப்பதால் சூழல் சிநேகிதமான பனம் பொருட் பாவனைக்கு கிராக்கி ஏற்பட வாய்ப்புண்டாகும். இச்சூழ நிலையைச் சரியானமுறையில் அணுகி பனைசார் தொழில்களை மேம்படுத்த வேண்டும். கள்ளு, கள்ளை அடிப்படை யாக்கொண்ட மதுபாவனை வகைகள் உற்பத்தியைப் பெருக்க வாய்ப்புண்டு.

தொகுத்து நோக்குகையில் இப் பிரதேசத்து நிலம், நீர், கடல் மற்றும் பனை, தென்னை, வளங்களை நிலைத்து நிற்கக்கூடிய முறையில் அபிவிருத்தி செய்தால் இப்பிரதேசத்தின் பொருளா தாரத்தை முன்னெடுக்கலாம். இந்நிலை யை அடைந்த பின்னர், இப்பிரதேசத்து இயற்கை வனப்புக்களை நல்ல முறையில் பயன்படுத்தி, சுற்றுலாத் துறையை வளர்க்கமுடியும். அல்லைப் பிட்டி, மண்கும்பான், வெள்ளைக் கடற்கரை, புங்குடுதீவு கண்ணகியம்மன் கடற்கரை மற்றும் பல சிறுதீவுகள், கடல்நீர் ஏரிகள் ஆகியன சுற்றுலாத்துறை வளர்சிக்குப்பெரிதும் உதவியாக அமையும். நயினாதீவில் அமைந்துள்ள புகழ் பெற்ற நயினை நாகபூஷணியம்மன் கோயில், புத்தவிகாரை, தலயாத்திரை இடங்களாக விருத்தி செய்ய நிறைய வாய்ப்புண்டு. இவ்அபிவிருத்தி முயற்சி களால் பெருமளவு வேலை வாய்ப்புகள் உருவாக வழியுண்டு. ஆகவே தீவுகளின் அபிவிருத்திக்குப் பல உள்ளார்ந்த இயற்கை வளங்கள் இருப்பினும், இவைகளைப் பயன்படுத்த சிறந்த போக்குவரத்து வசதியையும், உயர்வான மனித வளத்தையும் விருத்தி செய்தல் வேண்டும் என்பது குறிப்பிடத்தக்கது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வேலணைப் பிரதேசசபை நிருவாகத்திற்கு உட்பட்ட தீவகம் - சில வரலாற்றுக்குறிப்புக்கள்.



**பேராசிரியர் வி. சிவசாமி,**
*யாழ் பல்கலைக்கழகம்,*
*யாழ்ப்பாணம்.*

யாழ்ப்பாணக்குடா நாட்டினையடுத்துப் பெரிதும், சிறிதுமான பல தீவுகள் உள்ளன. அவற்றுள்ளே வேலணை (லைடன் தீவு), புங்குடுதீவு, நெடுந்தீவு, நயினாதீவு, அனலைதீவு, எழுவைதீவு, காரைதீவு (காரைநகர்) ஆகிய ஏழும் நன்கு குறிப்பிடத்தக்கவை. இவை சப்த (ஏழு) தீவுகள் அல்லது தீவகம் எனக் கூட்டாகவும் அழைக்கப்படுவன. புவியியல் ரீதியிலும், வரலாற்று ரீதியிலுமிவை யாழ்ப்பாணக்குடா நாட்டுடன் ஒன்றிணைந்த பகுதிகளாயினும், இவற்றிற்குத் தனிச்சிறப்பியல்புகளும் உள்ளன. இச் சிறுகட்டுரையிலே தற்போது வேலணைப் பிரதேசசபை நிருவாகத்திற்குட்பட்ட பகுதிகளான மண்டைதீவு, அல்லைப்பிட்டி மண்கும்பான், வேலணை, புங்குடுதீவு, நயினாதீவு ஆகியன பற்றிய வரலாறு கூறப்படும்.

யாழ்ப்பாணக்குடாநாடு, தீவகத்தின் ஏனைய பகுதிகளின் வரலாறு போலவே இப்பிரதேசத்தின் வரலாற்றினைத் தொன்று தொட்டுத் தொடர்ச்சியாகக் கூறமுடியாது எனினும் புராதன இலங்கை வரலாற்றினைக் கூறும் தீபவம்சம், மகாவம்சம், சூளவம்சம் ஆகியன வற்றுடன், பௌத்த ஜாதகக் கதைகள், மணிமேகலை, நம்பொத்த, கைலாயா மலை, யாழ்ப்பாணவைபவமாலை, வையா பாடல் முதலிய இலக்கிய நூல்கள், சில சாசனங்கள், கட்டிடங்கள், சிற்பங்கள், மட்பாண்டங்கள், நாணயங்கள், இடப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெயர்கள், வாய்மொழி மரபுகள் போர்த்துக்கீசர், ஒல்லாந்தர், பிரித்தானியர் கால ஆவணங்கள், வரலாற்றுக் குறிப்புகள் முதலியனவற்றின் துணைகொண்டு இப்பிராந்தியத்தின் நீண்டகால கால வரலாற்றின் சில கட்டங்களை ஓரளவு அறியலாம். இவற்றைவிட சென்ற நூற்றாண்டின் முற்பாதியில் ஆர்.எச்.பசெற், முதலியார், செ.இராசநாயகம் முதலியார், குலசபாநாதன் முதலியாரும், பிற்பகுதியிலே யாழ்ப்பாணத் தொல்லியற்கழகம், யாழ்ப்பாணப்பல் கலைக்கழக வரலாற்றுத்துறை முதலியோர் செய்த வரலாற்று ஆய்வுகள், தொல்லியல் மேலாய்வுகளும், குறிப்பாக அல்லைப்பிட்டியிலே பேராசிரியர் ஜோன் கார்ஸ்வெல் நடத்திய அகழ்வாய்வுகளும் குறிப்பிடத்தக்கவை. கி.பி.16,17,18ம் நூற்றாண்டுகளில் இப்பகுதியிலேற்பட்ட போர்த்துக்கீச, ஒல்லாந்த படையெடுப்புகளாலும், தொடர்ந்து ஏற்பட்ட ஆட்சியினாலும் இப்பகுதிகளிலிருந்த கோவில்களும், பிறகட்டிடங்களும் வேறு முக்கியமான பழைய சின்னங்களும் அழிக்கப்பட்டன அல்லது புறக்கணிக்கப்பட்டன. அதேவேளை இப்பகுதி மக்களிற்பலர் இன்றுவரை எஞ்சியவற்றில் ஈடுபாடு கொண்டவர்களாகவோ, அவற்றைப் பேணிப்பாதுகாப்பதிலோ கவனம் செலுத்திலர். இன்னோரன்ன காரணங்களாலும் தொடர்ச்சியான வரலாற்றை அறிவதிலே பெரும் பிரச்சினைகள் உள்ளன. சில முக்கியமான இடங்களிலே தொல்லியல் ரீதியிலே அகழ்வாய்வு செய்வதன் மூலம் முக்கியமான வரலாற்றுத் தடயங்கள் தென்படலாம். இந்த வகையிலே மேற்குறிப்பிட்ட அல்லைப்பிட்டி அகழ்வாய்வு குறிப்பிடற்பாலது. இவருடைய அகழ்வாய்வு கூடுதலாக அப்பகுதியின் மத்திய கால வரலாறு பற்றிய தகவல்கள் சிலவற்றை வெளிப்படுத்தியுள்ளது.

வரலாற்று ரீதியிலே நோக்கும்போது யாழ்ப்பாணக் குடாநாட்டிற் போன்றே இத்தீவுகளிலும், ஏனைய தீவுகளிலும் மனித நடமாட்டங்கள் கிறிஸ்துவுக்கு முற்பட்ட காலம் தொட்டே ஏற்பட்டு வந்துள்ளன எனலாம். இத்தீவுகள் அமைந்திருக்கும் நிலையம் இவ்விடங்களிலே வந்து குடியேறிய மக்களைப்பற்றி ஓரளவாவது அறிய உதவும். இவை யாழ்ப்பாணக் குடாநாட்டிற்கும், பூநகரி முதலிய வன்னிப் பெருநிலப்பரப்புக்கும் அண்மையிலுள்ளன. அதேவேளையில் இந்தியாவின் தென்பகுதியிலுள்ள தமிழ்நாடு, கேரளம், ஆந்திரதேசம் முதலியனவற்றிற்கும் இவை வெகு தொலைவில் இல்லை. மேலும் ஆதிகால, மத்தியகால, மேற்காசிய தென்னாசிய, தென்கிழக்காசிய வர்த்தகப் பாதைகள் சில யாழ்ப்பாணக்குடா நாட்டிலுள்ள துறைமுகங்கள். தீவுகளிலுள்ள துறைமுகங்கள் ஊடாகவும் சென்றுள்ளன. எனினும் மேற்குறிப்பிட்ட தென்னிந்திய மாநிலங்களிலிருந்து காலம் தோறும் மக்கள் சிலர் வர்த்தகம், மீன்பிடித்தல், புதிய நாடுகளுக்குச் செல்லும் துணிச்சல், சமய ஆர்வம் முதலிய பல காரணங்களாலும், பல்லவ சோழ, பாண்டிய, விஜயநகரப் பேரரசுகளின் ஆதிக்கப் படர்ச்சியைத் தொடர்ந்தும் இங்கும் யாழ்ப்பாணத்திலும், வன்னிப்பகுதிகளிலும் குடியேறியிருப்பர். அதேவேளையில் வன்னிநிலப்பரப்பிலே கிறிஸ்து ஆண்டிற்கு முன்பே தமிழர் வாழ்ந்து வந்தனர் என்பது அண்மைக் காலத்திலே கலாநிதி ப.புஷ்பரத்தினம் மேற்கொண்ட



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆய்வுகள் மூலம் அறியப்படுகின்றது. இலங்கைக்கு உள்ளே யாழ்ப்பாணத்தி லிருந்து. மட்டுமன்றி பூநகரி போன்ற வன்னிப் பகுதிகளிலிருந்தும் சிலர் இங்கு வந்து குடியேறியுள்ளனர் என்பதற்கு இடப்பெயர்வுகள் தரும் சான்றும் உள்ளது. அதுபோலவே இங்குள்ள மக்களில் ஒரு சாரார் யாழ்ப்பாணக் குடாநாட்டிற்கும், வன்னிப் பிரதேசத்திற் கும் சென்று குடியேறினர். குடியேறி வருகின்றனர். தமிழ் நாட்டிலிருந்து இங்கு ஏற்பட்ட குடியேற்றம் பற்றிக் கைலாய மாலை (196-197), யாழ்ப்பாண வைபவ மாலை ஆகிய இடைக்காலத் தமிழ் நூல்கள் குறிப்பிடுகின்றன. இவை தரும் குறிப்பின்படி யாழ்ப்பாணத்தை ஆண்ட சிங்கை ஆரிய மகாராசனின் வேண்டு கோளின்படி தமிழ்நாட்டின் சில பகுதி களிலிருந்து சிலர் தலைமையில் யாழ்ப்பாணத்திலும், தீவுகளிலும் குடியேற் றங்கள் ஏற்பட்டன. இப்பெயர்ப்பட்ட ஒன்று செய்யூர் இருமரபும் துய்ய தனிநாயகன் நெடுந்தீவிலேற்பட்டது. தனிநாயகனின் வழிவந்தோர் நெடுந்தீவில் மட்டுமன்றி அயலிலுள்ள புங்குடுதீவு, வேலணை முதலிய தீவுகளில் உள்ளனர் என அறியப்படுகின்றது.

இலங்கையின் பிற இடங்களிற் போலவே இங்கேயும் வரலாற்று வெளிச்சம் பெருங்கற் பண்பாட்டுடன் தொடங்கிற்று எனலாம். பெருங்கற் பண்பாடு, தீபகற்ப இந்தியாவிலே (விந்திய மலைக்குத் தெற்கேயுள்ள இந்தியா) கி.மு.1000 - கி.பி 500 வரை நிலவிற்று.

இலங்கையிலே பௌத்தம் பரவுதற்கு முன்பே (கி.மு 3ம் நூற்றாண்டு) இப்பண்பாடு இலங்கையின் பல இடங்களில் பரவிவிட்டது. தொல்லியல் ஆய்வுகள் மூலம் இ∴து உறுதிப்படுத்தப் பட்டுள்ளது. இத்தகைய சின்னங்கள் காரைநகரில் உள்ள களபூமி, புங்குடுதீவிலே திகழி, வேலணையிலே சாட்டி, யாழ்ப்பாணத்திலே கந்தரோடை, ஆனைக்கோட்டை முதலிய பல இடங்களிலே கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. மேலும் புங்குடுதீவின் வடபகுதியிலுள்ள ஊரதீவின் வடக்குக்கரையிலே வட்டக் கற்களாலான சிறு கிணறுகள் தென்பட்ட தாகக் கூறப்படுகின்றது. இத்தகைய கிணறுகள் வல்லிபுரம், பூநகரியிலே கிராஞ்சி, திருக்கேதீச்சரம், முதலிய இடங்களிலும் காணப்பட்டன. இத்த கைய கிணறுகள் பெருங்கற் பண்பாட்டு டன் தொடர்புள்ளவை. புங்குடுதீவி லுள்ள மேற்குறிப்பிட்ட இடத்திற்கு அண்மையில் பாணாவிடை (பாணா வோடை) ஐயனார் ஆலயம் உள்ளது. இ∴து இராமலிங்ககேஸ்வரர் ஆலயமென அழைக்கப்படுகின்றது. இங்கு கருவறையி லுள்ள கற்றூண் வளர்வதாகக் கூறப்படுகிறது. இதிலே சில எழுத்துக்கள் காணப்படுவதாகவும் அறியப்படுகிறது. இவை தமிழ் -கிரந்த எழுத்துக்கள் எனக்கருதப்படுகின்றன. இக்கல்வெட்டு முறைப்படி வாசிக்கப்படின் இப்பகுதி வரலாறு துலக்கம் பெறும். மேலும் இவ்விடத்திலிருந்து மேற்கேயுள்ள கேரதீவுக்குப் பக்கத்திலே சங்குமால் என்ற இடமுண்டு. இங்கு தமிழ் நாட்டிலுள்ள அதிராம்பட்டினம் போன்ற இடங்களிலிருந்து வந்த வர்த்தகர் சிலர் இப்பகுதிக் கடலிலே பெறப்பட்ட சங்கு, சிப்பி முதலியனவற்றை விலைக்கு வாங்கிச் சென்றதாகக் கூறப்படுகின்றது. சங்குமால் என்ற பெயரிலான துறைமுக மொன்று ராமேஸ்வரத்திலுள்ளதாக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இக்கட்டுரையாசிரியர் அண்மையில் அறிந்துள்ளார். எனவே சங்குமால் எனும் தமிழ்நாட்டுத் துறைமுகத்திலிருந்து இங்கு வர்த்தகம் செய்தவர்களும், குடியேறி யோரும் இப்பெயரை இவ்விடத்திற்குச் சூட்டியுள்ளனர் எனக் கொள்ளலாம். இதற்கேற்பப்போலும் அண்மையிலே மேற்குறிப்பிட்ட ராமலிங்கேஸ்வரர் (சிவன்) ஆலயமும் அமைக்கப்பட்டுள்ள மையும் குறிப்பிடத்தக்கது.

இலங்கையின் பூர்வீகக்குடிகளான யஷர், நாகர் பற்றிய தீபவம்சம், மகாவம்சம் ஆகிய நூல்கள் குறிப்பி டுகின்றன. இவர்களிலே யஷர் ஆதி ஒஸ்ரலோயிட் இனத்தவர் எனவும், நாகர் திராவிடர் எனவும் வரலாற்றாசிரியர் களிலொருசாரார் அடையாளங்கண்டுள் ளனர். நாகர்கள் பெரும்பாலும்வட இலங்கையிலே வாழ்ந்தனர். குறிப்பிட்ட காலப்பகுதியில் இவர்கள் அரசுகள் அமைத்து நாணயங்களும் வெளியிட்டுள் ளனர் என்பதை அண்மைக் காலத்திலே கலாநிதி ப.புஷ்பரத்தினம் எடுத்துக் காட்டியுள்ளார். நாகர்களிடையே நாகவழி பாடு பிரபல்யமாக நிலவி வந்துள்ளது. நாகம்மாள் (நாகபூஷணி யம்மன்) நாகதம்பிரான் வழிபாடு குறிப்பாக நயினாதீவிலும், அனலைதீவிலும் உள்ளன. நாக, நயின எனும் பதங்கள் பாம்பு எனும் பொருள்படும். நாகவழிபாடு இப்பகுதியிலே பிரபல்யமாக விளங் குகின்றது.

பெருங்கற்பண்பாட்டினைச் சேர்ந்த திராவிடர் மத்தியிலே புராதன இந்து சமய நம்பிக்கைகள், வழிபாடுகள் நிலவி வந்துள்ளன. எனவே புராதன காலத்தில் இப்பகுதியில் வாழ்ந்த திராவிடர் குறிப்பாகத் தமிழர் மத்தியிலே ஆதி இந்து சமயம் நிலவியிருக்கலாம்.

இதைத்தொடர்ந்து இலங்கையின் பிற இடங்களைப் போன்று பௌத்தம் பரவியிருக்கலாம் தீபவம்சம், மகாவம்சம் ஆகிய நூல்களிலே நாகதீபம் ஒரு முக்கியமான பௌத்த க்ஷேத்திரமாகக் கூறப்படுகின்றது. இங்கு புத்தபிரான் வந்து சென்றார் என்று கூறப்படுகின்றது. நாகதீபம் பரந்த கருத்திலே வடஇலங்கை யைக் குறிக்குமாயினும் சிறப்பாக நயினாதீவையே சுட்டுமெனக் கருதப் படுகின்றது. பியங்குதீபம் என்ற ழைக்கப்பட்ட புங்குடுதீவும் புராதன காலத்தில் ஒரு முக்கியமான பௌத்த மையமாகக் கருதப்பட்டது. இங்கு பிரபல்யமான அர்ஹந்த்ஸ் (பௌத்த ஞானிகள்) வாழ்ந்தரென மகாவம்சம் கூறுகிறது. இவ்விடம் பற்றி வல்லி புரத்திலே கிடைத்த பொற்சாசனத்திலும் குறிப்பு வருவதாகக் கருதப்படுகின்றது. மேலும் இச்சாசனத்திலே வரும் படகர(வடகரை) பற்றியும் கருத்து வேறுபாடுகள் நிலவு கின்றன. வடகர என்ற இடம் நயினாதீவிலும் உள்ளது. மேலும் நயினாதீவிலுள்ள புத்தர் திடல் எனும் இடப்பெயர் அங்கு பௌத்தம் நிலவியதற்கான பிறிதொரு சான்றாகும். மேலும்தீவகத்தில் வாழ்ந்த பௌத்தர் தமிழ் பௌத்தர் எனக் கொள்ளலாம்.

வருவதாகக் கருதப்படுகின்றது. மேலும் இச்சாசனத்திலே வரும் படகர(வடகரை) பற்றியும் கருத்து வேறுபாடுகள் நிலவு கின்றன. வடகர என்ற இடம் நயினாதீவிலும் உள்ளது. மேலும் நயினாதீவிலுள்ள புத்தர் திடல் எனும் இடப்பெயர் அங்கு பௌத்தம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிலவியதற்கான பிறிதொரு சான்றாகும். மேலும்தீவகத்தில் வாழ்ந்த பௌத்தர் தமிழ் பௌத்தர் எனக் கொள்ளலாம்.

தமிழ் நாட்டுப் பௌத்த மரபினை அடிப்படையாகக் கொண்டெழுந்த மணிமேகலையிலே கூறப்படும் மணி பல்லவம் நயினாதீவு எனப்பொதுவாக அடையாளம் காணப்படுகின்றது. ஆபுத்திரன், மணிமேகலை, அஷயபாத்திரம் பற்றிய ஐதிகங்கள் அங்கு, இன்றும் நிலவுகின்றன. எனவே தென்னிந்திய, இலங்கைப் பௌத்த மரபுகள் தீவகத்திலும் சங்கமித்துள்ளன எனலாம். எனவே தமிழ் நாட்டிற் போன்று இங்கும், இலங்கையின் பிறபகுதிகளிலும் பௌத்தமும், இந்து சமயமும் அக்கம் பக்கமாக நிலவி வந்தன எனலாம். தமிழர்களில் ஒரு சாரார் பௌத்தர்களாக இருந்தனர். தமிழ் நாட்டிலே கி.பி.ஆறாம் நூற்றாண்டிலேற்பட்ட சைவ, வைஷ்ணவ பக்தி இயக்கத்தின் விளைவாகப் பௌத்தமும் சமணமும் செல்வாக்கினை இழந்தன. இந்நிலை இலங்கையிலே வாழ்ந்த தமிழர் மத்தியிலும் ஏற்பட்ட தெனலாம்.

புராதன காலத்திலே மேற்குறிப்பிட்ட தீவகத்திலே நிலவிய ஆட்சிமுறை பற்றி அறிய முடியாதுள்ளது. எனினும் சில குறுநிலத்தவர்கள் இங்கு ஆட்சி புரிந்திருக்கலாம். அவர்கள் சுதந்திரமா கவோ அல்லது யாழ்ப்பாண மன்னர் / சிற்றரசர்கள், அல்லது அநுராதபுரகால மன்னர்களின் கீழ் ஆட்சி புரிந்த தேசாதிபதியின் கீழ் நிருவாகத்தைக் கவனித்திருப்பர். வரலாற்றுக் காலம் தொட்டு தீவகம் ஒரு தனி நிருவாக அலகாகவும் இருந்திருக்கலாம். நெடுந்தீவு வெடியரசன், அல்லைப்பிட்டி அல்லிராணி பற்றிய கதைகளும், நயினாதீவுடன் தொடர்புபடுத்தப்படும் நயினாபட்டர் போன்றோர் கதைகளும் நுணுகி ஆராயப்படவேண்டியவை. மேலும் யாழ்ப்பாணத்தை ஆண்ட சிங்கை ஆரியச்சக்கரவர்த்தி காலத்திலே வேலன் எனும் நாட்டுத்தலைவன் தானை - சேனையுடன் அங்கு இருந்தபடியால் அவ்விடம் வேலணை எனவும், நாராயணன் தானையுடன் தங்கியிருந்த இடம் நாரந்தனை எனவும் இவ்விடப்பெயர்கள் ஏற்பட்டன என்ற ஐதீகமுண்டு. குளக் கோட்டனும் தீவகத்துடன் தொடர்பு படுத்தப்படுகின்றான். வேலணை நடுப் பகுதியிலேயுள்ள கோபுரத்தடியிலே காணப்படும் அழிபாடுகள் அல்லிராணி யுடன் தொடர்புபடுத்தியும் கூறப்படு கின்றன. ஆனால் இஃது உண்மையில் போர்த்துக்கீசர் அல்லது குறிப்பாக ஒல்லாந்த கால அவதானிப்பு நிலைய மாயிருந்திருக்கலாமெனக் கருதப்படு கின்றது. 1932ம் ஆண்டு இஃது ஐம்பது அடி உயரமுள்ளதாக இருந்தது. இப்போது இதன் கீழ்ப்பகுதியே பெரிதும் இல்லை.

தமிழகத்திலேற்பட்ட பேரரசுகளின் தாக்கம் இலங்கையின் பிற இடங்கள் சிலவற்றிலோ பலவற்றிலோ ஏற்பட்டது போல இங்கும் ஏற்பட்டன. குறிப்பாக கி.பி 10ம் நூற்றாண்டின் முடிவு தொடக்கம் (கி.பி997 கி.பி 1070 வரை சோழப் பேரரசு ஆதிக்கம் இங்கும் ஏற்பட்டது. நாரந்தனையிலுள்ள தான்தோன்றீஸ்வரி அம்மன் ஆலயம் அமைந்துள்ள இடத்திலே கிடைத்த சோழப்பெருமன்ன னின் நாணயங்கள், அம்பாள் (லக்ஷ்மி)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிலை முதலியன குறிப்பிடற்பாலன. சோழர், பாண்டியர், கலிங்கர் தொடர்புகள் சில இடப்பெயர்களாலும் புலனாகின்றன. கி.பி.13ம் நூற்றாண்டிலே நல்லூரைத் தலைநகராகக் கொண்டு உருவாகிய யாழ்ப்பாண அரசு காலத்திலே, வலிகாமம், வடமராட்சி, தென்மராட்சி, பச்சிலைப்பள்ளி ஆகிய நிருவாகப் பிரிவுகளுடன் தீவகமும் ஒரு தனி நிருவாகப்பிரிவாக இருந்தது. யாழ்ப்பாண மன்னரைத் தொடர்ந்து ஆதிக்கம் பெற்ற போர்த்துக்கீசர், ஒல்லாந்தர், பிரித்தானியர் ஆகியோரும்தீவகத்தினை ஒரு தனிநிருவா கப்பிரிவாகவே பரிபாலித்து பின்னர் இலங்கை 1948ல் சுதந்தரம் பெற்ற காலகட்டத்திலே நெடுந்தீவு தனியான நிருவாக அதிகாரியின் பிரிவாகவும், ஏனைய தீவுகள் ஊர்காவற்து றையிலே தீவக நிருவாக அதிகாரியின் பிரிவாகவும் பரிபாலிக்கப்பட்டன. பின்னர் சமீபகாலத் தில் இது தீவகம் வடக்கு, தீவகம் தெற்கு என இருபிரிவுகளாகவும், 2003லே காரைநகர் தனிப்பிரிவாகவும் வகுக்கப் பட்டுள்ளது. தீவகம் தெற்குப் பிரிவு வேலணைப் பிரதேசசபைக்கு உட்பட்ட தாகும்.

பன்னாட்டு வணிக, பண்பாட்டுத் தொடர்புகள், இங்கும் நிலவி வந்தன. இலங்கையின் பிற இடங்களுடன் நிலவி வந்த தொடர்புகள், இந்தியத்தொடர்பு களை விட, கிரேக்க, உரோம அராபிய, சீன வர்த்தகத் தொடர்புகளும் இங்கு நிலவின எனலாம். நயினாதீவு நாகபூஷணி அம்மன் ஆலயத்திலுள்ள கற்பலகைச்சாசனத்தின்படி ஊர்காவற் துறையிலே வெளிநாட்டு வர்த்தகம் நடைபெற்றதை அறியலாம். இத்தமிழ்க் கல்வெட்டு கி.பி 12ம் நூற்றாண்டைச் சேர்ந்த முதலாம் பராக்கிரமபாகு காலத்திலாகும். இது தமிழில் இருந்தால் இவ்வர்த்தகத்திலே தமிழ் வணிகர் ஈடுபட்டிருந்தமை தெளிவு.

நயினாதீவிலே பௌத்தம்மட்டு மன்றிக் குறிப்பாகச் சக்தி வழிபாடும் பிரபல்யமாக நிலவிவருதற்கு நாகபூஷணி அம்மன் ஆலயம் சிறந்த சான்றாகும். இது சிறந்த சக்திபீடங்களில் ஒன்றாகவும் கருதப்படுகின்றது. மார்க்கண்டேய புராணத்திலேயுள்ள தேவீமகாத்மி யத்திலே தேவி கடல் சூழ்ந்த தீவிலே வீற்றிருக்கிறாள் எனக்கூறப் படுகிறது. இக்குறிப்பு இங்கேயுள்ள அம்பாளைப் பற்றியதெனவும் கொள்ளப்ப டுகின்றது.

மரபுவழிக் கதைகளின்படி அல்லி என்னும் இந்திய அரசி முத்துக்களைத் தேடிவருகையில் அல்லைப்பிட்டிக்கு வந்து தங்கிவிட்டாள் எனக் கூறப்படு கின்றது. இவள் இங்கு மாளிகையும், கோவிலும் கட்டினாள். இவளின் மாளிகைக்கு மேற்கேயுள்ள கப்பலடி (கப்பல்கள் தரிக்குமிடம்)யிலே இவளின் கப்பல்கள் தரித்து நின்றன. இவள் கட்டிய கோவிலுக்கு அண்மையில் ஒரு கோத்தாமரம் நின்றது. அம்மரம் எத்தகையது என்பது பிற்காலத்த வருக்குத் தெரியாதெனினும் அது புனித மாகக் கருதப்பட்டதாகத் தெரிகின்றது. இப்பொழு தும் அது நின்ற இடம் கோத்தாமரத்தடி என வழங்கப்படுகின்றது. அரசமாளிகை இருந்த இடத்திற்கு அண்மையில் 1922லே வினாசி பிலிப்பன் புனம் விதைகளைப் புதைக்க நிலத்தை வெட்டியபோது குஜராத்திய பொற்காசுகள் அடங்கிய சாடி வெளிவந்தது. இவ்விடத்தில் காற்று வேகமாக வீசி,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மணலைக் கரையோரமாகக் கொண்டுவர பித்தளை விளக்குகளும், வேறு பல பழம் பொருட்களும் வெளிவந்துள்ளன. 1877லே ஒரு பழைய கட்டிட அழிபாடுகளின் மத்தியில் உள்ள குழியிலே பல பொற்காசுகள் கண்டெடுக்கப்பட்டதாகக் கூறப்படுகின்றது. இவையெல்லாம் அல்லைப்பிட்டியின் பழையகாலச் சிறப்பினைச் சுட்டிக்காட்டு வனவாகலாம். சென்ற நூற்றாண்டின் எண்பதுகளிலே ஏற்கனவே குறிப்பிட்ட பேராசிரியர் கார்ஸ்வெல் நடத்திய அகழ்வாய்வு களிலே மத்திய கால சீனத்தொடர்புகளை நன்குபுலப்படுத்தும் தொல்லியற் சின்னங் களும், ஓர் இந்துக்கோவிலின் அழிபாடும், வேறுசிலவும் வெளிக்கொணரப்பட்டன. இந்தக் கோவில்தான் அல்லிராணி கட்டியதா என்பது நன்கு ஆராயப்பட வேண்டியதாகும்.

மேலும் இலங்கையின் பிற இடங்களிலே கிடைக்கும் பழைய நாணயங்களில் சிலவகைகள் இங்கும் கிடைத்துள்ளன. இவற்றுள்ளே மத்திய கால இலங்கை அரசர்கள், சோழர், பாண்டியர், யாழ்ப்பாண மன்னர் முதலியோர் வெளியிட்டவை குறிப்பிடத் தக்கவை. போர்த்துக்கீச, ஒல்லாந்த நாணயங்களும் சில கிடைத்துள்ளன. ஆனால் இவைபற்றிப் பலரும் கவனம் செலுத்தி யாழ்ப்பாண மன்னர் வெளியிட்ட “சேது” நாணயங்கள் குறிப்பிடத்தக்கவை.

சீனத்தொடர்புகளைக் காட்டும் சின்னங்கள் குறிப்பிடற்பாலன. கி.பி 10ம் நூற்றாண்டு தொடக்கம் சீனவர்த்தகம் தென்னாசியப்பகுதிகளிலே நன்கு நடை பெற்றது. ஏற்கனவே குறிப்பிட்ட அல்லைப்பிட்டியைவிட, வேறு சில இடங்களிலும் சீனத் தொடர்புகள் நிலவின. சீனன்கோவில், சீனன் புலம் போன்ற இடப்பெயர்கள் முறையே வேலணையிலும், புங்குடுதீவிலும் உள்ளன. மேலும், நயினாதீவுத்துறை முகத்திற்கு அண்மையி லுள்ள பப்பரவன்சல்லி என்னுமிடத்திலே கிடங்கு வெட்டியபோது கி.பி.12ம் நூற்றாண்டைச் சேர்ந்த சீனச்சாடிகள் வெளிவந்தன. இத்தகைய சாடிகள் ஊர்காவற்துறை யிலும் கிடைத்துள்ளன.

இத்தீவுகளின் பெயர்கள் பற்றியும், அவற்றிலுள்ள இடப்பெயர்கள் பற்றியும் சற்று நோக்கலாம். வேலணை பற்றி ஏற்கனவே கூறப்பட்டது. அது தனதிவ அல்லது தனதிவயன எனவும் அழைக்கப் பட்டுள்ளது. புங்குடுதீவு பியங்குதீப என அழைக்கப்பட் டுள்ளது. பிரியங்கு எனும் கொடி / செடி இங்கு நன்கு காணப்பட் டமையால் இப்பெயர் பெற்றிருக்கலாமென ஒருசாரார் கருதுவர். புங்கு மரம் இங்கு காணப்பட்டமையால் இப்பெயர் வந்திருக் கலாம் எனப் பிறிதொருசாரார் கருதுவர். இங்குள்ள புங்கடி, புங்கங்குளம் போன்ற பெயர்களை இதற்குச் சான்றாகவும் கொள்ளலாம். மேலும் தமிழ் நாட்டிலுள்ள புங்கனூர், பூங்குடி போன்ற இடங்களில ிருந்து வந்தோரால் இப்பெயரிடப் பட்டிருக்கலாமெனவும் சிலர் கருதுவர். எனினும் ஒரு செடி அல்லது மரத்தின் பெயரால் இப்பெயர் ஏற்பட்டிருக்கலாம்.

ஏற்கனவே குறிப்பிட்டவாறு நாகவழி பாடுடன் மிகுந்த தொடர்புள்ளமையால் நயினாதீவு என்ற பெயர் வந்திருக்கலாம். இது பிராமணத்தீவு எனவும் அழைக்கப் பட்டுள்ளது. மண்டைதீவு, புங்குடுதீவி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ுள்ள வரதீவு என்பன தீபவம்சத்திலும் குறிப்பிடப்படுகின்றது. மேலும் மண்டதீவு என்ற பெயர் புங்குடுதீவிலும் உள்ளது. இதற்கு அயலிலுள்ள மலையுச்சி எனுமிடத்திலே தொல்லியல் சின்னங்கள் கிடைத்துள்ளன.

அல்லைப்பிட்டி என்ற பெயர் அல்லைக்கொடிகள் காணப்பட்ட மணற்பிட்டித்தன்மையால் ஏற்பட்ட தெனலாம். மண்கும்பான் என்ற பெயர் அவ்விடத்து நில அமைப்பின் அடிப்படையில் ஏற்பட்டதாகும். அதாவது காற்றினாலே கடல் அலைகள் காலம்தோறும் வீசி வந்த மணல் திட்டிகளாக வளர்ந்து பெரிய மண் குவியல்களாக மணல் மேடுகளாகக் காணப்பட்டது. ஆனால் இன்றோ இந்நிலை முற்றிலும் மாறிவிட்டது. பொருளாதார நோக்கங்களுக்காக மணல் பெருமளவு விற்கப்பட்டு வேறிடங்களுக்குக் கொண்டு செல்லப்பட்டுள்ளன. இதனால் இவ்விடத்தின் சிறப்பும், குன்றிவிட்டதெனலாம். முக்கியமான இயற்கைத் தோற்றம் ஒன்று குன்றிவிட்டமை கவலைக்குரியதே.

இத்தீவுகளிலுள்ள இடப்பெயர்கள் பெரும்பாலும் தமிழ்ப் பெயர்களாகவும், அவ்வவ்விடங்களிலுள்ள நிலத்தின் தன்மை, மரங்கள், வெளித்தொடர்புகள், சமூகப் பிரிவுகள் முதலியனவற்றைச் சுட்டுவனவா கவும் உள்ளன. ஒரேபெயர் பல இடங்களிலும் காணப்படுகின்றது. இங்குள்ள காணிகளின் பெயர்கள் வயல், தோட்டம், வளவு, திடல், பிட்டி, ஓடை, குடியிருப்பு சாட்டி, பிரிவு, கலட்டி, சரிவு, தாழ்வு, கூடல் முதலிய தமிழ்ச் சொற்களுடன் அழைக்கப்படுகின்றன.

மரம், பயிர் முதலியனவற்றால் அழைக்கப்படும் இடப்பெயர்களை முதலிற் குறிப்பிடலாம். கற்பகதருவான பனைகள் நிறைந்த இடங்களைப் பெரும்பனம் தோட்டம், சிறு பனந்தோட்டம் எனவும் சுட்டுமுறையும் குறிப்பிடற்பாலது. இதனை விட நொச்சி தோட்டம், தாளையடி, புல்லோடை, வேம்படி, முருங்கப்புலம், நாவலடி, ஈச்சம்புலம், பருத்திச்சாட்டி, தெங்குபுலம் முதலியன வற்றைக் குறிப்பிடலாம். இப்பெயர்கள் பலதீவுகளிலும் உள்ளன. பருத்தியின் பெயரால் அழைக்கப்படுமிடங்கள் வேலணை, புங்குடுதீவில் மட்டுமன்றி வேறு தீவுகளிலும் உள்ளன. அனலை தீவுக்கு அருகாமையில் பருத்தித்தீவு உள்ளது. ஊர்காவற்துறைக்கு அண்மையில் பருத்தியடைப்பு எனும் இடம் உள்ளது. இவ்விடங்களில் பருத்தி பயிரிடப்பட்டமை இதனாற் புலப்படும். கலட்டி, சாட்டி, சல்லி, சுவடு, உயரப்புலம், பெரியபுலம் போன்ற பெயர்கள் பெருமளவு பலதீவுகளிலும் காணப்படு கின்றன. இவை நிலத்தின் தன்மையைக் காட்டுவன.

கிராஞ்சி எனும் பெயர் மண்டதீவு, நயினாதீவு, புங்குடுதீவு ஆகிய இடங்களில் காணப்படுகின்றது. தென்மரவாடி, வெட்டுக்காடு ஆகிய இடப்பெயர்கள் அல்லைப்பிட்டியில் உள்ளன. வீராமுனை, வீரமுனை போன்ற இடப்பெயர்களும் உள்ளன. இப்பெயர்கள் பூநகரியையும் அதனையடுத்துள்ள வன்னிப்பிரதேசத் தொடர்புகளைச் சுட்டுவன. மண்டதீவிலே சுண்டிக்குளி என்ற இடமுண்டு. இது யாழ்ப்பாணத்திலுள்ள இப்பெயருள்ள இடத்தொடர்பைச் சுட்டுகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தமிழ் நாட்டிலிருந்து வந்து இங்கும் வர்த்தகம் செய்த செட்டிமார்களின் தொடர்புகளைக் குறிக்கும் செட்டிவளவு, பெரிய செட்டியார்வளவு, செட்டியா தோட்டம், செட்டிச்சிவளவு போன்றவை புங்குடுதீவிலும் வேலணையிலும் உள்ளன. மேலும் குறிப்பாகப் பிரபல தென்னிந்திய வணிககணங்களில் ஒன்றான ஐந்நூற்றுவரின் பெயர் கொண்ட அந்நூற்றுவன் (ஐந்நூற்றுவன்) வளவு, அந்நூற்றுவன் பிரிவுகள் வேலணை மேற்கில் உள்ளன. இவ்வணிகக் குழுவினர் பலநாடுகளிலே வர்த்தகம் செய்துவந்தனர். அவர்கள் இங்கும் வந்துள்ளமை இதனால் புலப்படுகின்றது. புங்குடுதீவிலே செட்டிகள், கணக்கனார், சாவான் (ஜாவாக்காரன்) சீனர் முதலி யோரின் தொடர்புகளை ஒரே நிரையிலே யுள்ள காணிப்பெயர்கள் செட்டியா தோட்டம் கணக்கனாவளவு, சாவான் வளவு, சீனன் புலம் சுட்டிக்காட்டுவன. பெருக்கடி என்ற இடம் புங்குடுதீவிலும், அல்லைப்பிட்டியிலும் உள்ளன. புங்குடுதீ விலே புளியடித்துறை முகத்திற்கு அண்மையிலே பெரிய பெருக்கமரம் உள்ளது. இம்மரம் ஒட்டகங்களுக்காக அராபியர் இங்கு அறிமுகம் செய்ததாகக் கூறப்படுகின்றது. நெடுந்தீவிலே பல பெருக்கமரங்கள் உள்ளன. ஐயனார் கோவிலடி, பிள்ளையார் புலம், கோயிற்புலம், ஐயனார் திடல், புத்தர் திடல், பத்தினிமுத்தம் போன்ற இடப் பெயர்கள் சமயத் தொடர்புகளைச் சுட்டுவன. ஐரோப்பியர் ஆட்சிக் காலங்களிலே கிறிஸ்தவசமயம் இங்கு அறிமுகம் செய்யப்பட்டது.

வேலணை மேற்கிலே சோனகன் தோட்டம் என்ற இடப்பெயர் அங்கு நிலவிய முஸ்லீம் தொடர்பைச்சுட்டும். ஆனால் மண்கும்பான் மேற்குப் பகுதியிலுள்ள வெள்ளைக்கடற்கரை யையடுத்துள்ள பகுதி களிலே மசூதிகளும், முஸ்லீம் குடியிருப்பு களும் உள்ளன. இதே போன்று நயினா தீவிலும் தெற்குப்பகுதியிலே முஸ்லிம் பள்ளி வாசலும், சிறு குடியிருப்பும் உள்ளன. தீவுப்பகுதிகளிலே சிறு காடுகள் இடையிடையே இருந்தன. இதனாற் போலும் சில இடங்கள்பெருங்காடு கோட்டைக்காடு, மணற்காடு என அழைக்கப்பட்டன. இத்தீவுகளின் கரையோரமாகச் சிலதுறைமுகங்கள் பழைய காலம் தொடக்கம் இருந்து வந்துள்ளன. அவற்றுட்பல இன்று பயன்படுத்தப்படுவது இல்லையெனலாம். இப்பொழுது யாழ்ப்பாணமும் வேலணை யும், வேலணையும் புங்குடுதீவும், இரண்டு தெருக்களாலே ஒன்றிணைக்கப் பட்டுள்ளன.

20ம் நூற்றாண்டின் முற்பகுதியில் இங்குள்ள மக்களில் ஒருசாரார் மலேசியா, சிங்கப்பூர் சென்று செல்வம் சேகரித்துக் கொண்டு வந்தனர். அல்லது அவ்விடங் களிலேயே தங்கிவிட்டனர். சென்ற நூற்றாண்டின் பிற்பகுதியிலேற்பட்ட நெருக்கடியான சூழ்நிலைகாரணமாக பலர் இவ்விடங்களைவிட்டு யாழ்ப்பாணத் திற்கும், இலங்கையின் பிற இடங்களுக் கும் குறிப்பாக இங்கிலாந்து, பிரான்ஸ், ஜேர்மனி, இத்தாலி, டென்மார்க், நோர்வே, சுவீடின், கொலண்ட் முதலிய ஐரோப்பிய நாடுகளுக்கும், கனடா, அவுஸ்திரேலியா முதலிய நாடுகளுக்கும், இந்தியாவுக்கும் குறிப்பாக 1991ன் பின்னர் புலம் பெயர்ந்துள்ளனர். இதனால் இங்கு நிலவிய உட்கட்டுமானங்கள் நன்கு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சீர்குலைந்துவிட்டன. தற்போது நிலைமை சிறிது சிறிதாகச்சீரடைந்து வந்தாலும், பழைய நிலைமை எப்பொழுது திரும்புமோ தெரியாது. ஆனால் இத்தீவக மக்கள் இலங்கையின் பல்வேறுதுறை களிலும் கல்வி, சமயம், அரசியல், பொருளாதாரம், நிருவாகம் முதலியன வற்றிலே குறிப்பிடத்தக்க பங்களிப்பு களைச் செய்துள்ளனர் என்பது குறிப்பிடற்பாலது. இந்துக்கள், கிறிஸ்த வர்கள், இஸ்லாமியர், பௌத்தர் எனப்பல மதத்தவரும் வாழ்ந்துள்ளனர்.

தொகுத்து நோக்கும்போது இத்தீவு கள் தனித்தனியாக இருந்தாலும் அவற்றிடை யிலே தரைத்தோற்றம் முதலியனவற்றில் மட்டுமன்றி அவ்விடங் களில் வாழ்ந்த மக்களிடையிலும் ஒருவகையான ஒருமைப்பாடு நிலவி வந்துள்ளது. இங்கு வாழ்ந்தோர் தங்களுக்கிடையில் மட்டுமன்றி, யாழ்ப் பாணக்குடாநாடு, வன்னிப்பிரதேசம் முதலிய பகுதிகளோடும், வெளியே இந்தியா குறிப்பாகத் தமிழகம், மேற்காசிய நாடுகள் குறிப்பாக அராபியா, சீனா முதலிய நாடுகளுடன் தொடர்புகள் கொண்டிருந்தனர். அவர்களில் பலர் தற்போது வெளியே இருந்தாலும் தங்களுடைய தாயகத்தினை நினைவு கூர்ந்து சில சேவைகளைச் செய்து வருவது பாராட்டுதற்குரியதே. மேலும் தீவக வரலாறு முழுமையாக விரைவில் எழுதப்படவேண்டிய தேவையும் உள்ளது.

## பொன்மொழித் துளிகள்

இட்ட பணியைச் செய்து முடித்தால் இன்பமான தூக்கம் தான்
- இங்கிலாந்து

துன்பம் இல்லாமல் வெற்றி இல்லை முயற்சி இல்லாமல் பெருமை இல்லை
- பென்

கல்விதான் நமக்குரிய அரசியல் பாதுகாப்பு
- ஹொரஸ்மான்

செல்வம் வாழ்க்கையின் இரகசியமன்று. ஒரு கருவி மட்டுமே
- ஹன்றி பீச்சர்

தன் மனமே ஒழுக்கத்திற்கு அடிப்படை
- ஷெர்வெல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தீவகம் தெற்குப்பிரதேசம் : மீள் இடப்பெயர்வும் அதனோடு தொடர்புடைய பிரச்சினைகளும்



பேராசிரியர் கா. குகபாலன்
தலைவர், புவியியற்துறை,
யாழ் பல்கலைக்கழகம்.

யாழ்ப்பாணக் குடாநாட்டின் வட மேற்கே லைடன்தீவு (வேலணைத்தீவு) மண்டைதீவு காரைநகர், புங்குடுதீவு, நெடுந்தீவு, நயினாதீவு, அனலைதீவு, எழுவைதீவு ஆகிய மக்கள் வாழும் தீவுகளும் பருத்தித்தீவு, கண்ணாத்தீவு, பாலைதீவு, கற்கடகத்தீவு, நரையான் பிட்டி, சிறுத்தீவு, கச்சதீவு போன்ற மக்கள் வாழாத தீவுகளும் காணப்படுகின்றன. மக்கள் வாழும் தீவுகளை "சப்ததீவுகள்" எனவும் அழைப்பதுண்டு. மக்கள் வாழ்ந்து வரும் தீவுகள் எட்டாகவிருப்பினும் மண்டைதீவும் லைடன்தீவும் கோடை காலங்களில் தொடர்ச்சியான நிலப்பகுதி யாகவும் மாரிகாலங்களில் இரு தீவுகளையும் பிரிக்கக் கூடிய வகையில் நீர் நிரம்புவதாலும் இவ்விருதீவுகளையும் ஒன்றாகக் கொண்டே சப்ததீவுகள் என எம்முன்னோர் அழைத் துள்ளனர் போலும்.

தீவகம் வரலாற்றுக் காலங்களில் பொருளாதார, சமூக, பண்பாட்டு ரீதியில் சிறப்பிடம் பெற்றுக் காணப்பட்டதாக பல்வேறு தொல்லியல், வரலாற்று மற்றும் செவிவழிச் செய்திகள் கூறிச்செல்கின்றன. புவிவெளி யுருவவியல் ரீதியாக நான்கு பக்கமும் கடலால் சூழப்பட்டு தனித்தனிக் கூறுகளாக இருந்த போதிலும், பௌதிக பண்பாட்டு ரீதியில் வேற்றுமையிலும் ஒற்றுமைப் பண்புகளைக் கொண்டி ருக்கின்றன எனலாம். கடல்வழிப்

போக்குவரத்தினை மேற்கொண்டு நாட்டின் ஏனைய பிரதேசங்களோடு தொடர்பினை ஏற்படுத்த வேண்டிய சூழ்நிலை காணப்பட்டிருந்தபோதிலும் புங்குடுதீவு, லைடன் தீவு, மண்டைதீவு, காரைநகர். ஆகியதீவுகள் யாழ்ப்பாணக் குடாநாட்டு டன் தாம்போதிப்பாலங்களினூடாக தரைவழியாகச் சென்று வரக்கூடிய வாய்ப்புக்கள் 1950 களைத் தொடர்ந்து ஏற்படுத்தப்பட்டன குறிப்பாக புங்குடுதீவு-வேலணைப்பாலம் (வாணர்பாலம்) அல்லைப்பிட்டியையும் பண்ணையையும் இணைக்கும் பாலம் (பண்ணைப்பாலம்) மக்கள் பாவனைக்காகத் திறந்துவிடப்ப ட்டதன் பின்னர் யாழ்ப்பாணக் குடாநாட்டு டன் விரைவான தொடர்பினை ஏற்படுத்திக் கொள்ளும் வாய்ப்புகள் உருவாகின. காரைநகரையும் பொன்னாலை யையும் இணைக்கும் பொன்னாலைப் பாலம் மிக நீண்டகாலத்திற்கு முன்னரே திறந்து விடப்பட்டது. எனினும் நெடுந்தீவு, நயினாதீவு, அனலைதீவு, எழுவைதீவு, ஆகியன தொடர்ந்தும் கடல்வழிப் போக்குவரத்தின் மூலமே பிறபிரதேசங் களோடு தொடர்புகொள்ள வேண்டி யுள்ளது.

தீவக மக்கள் மிக நீண்டகாலமாக பண்டமாற்றினை அடிப்படையாகக் கொண்ட சுயதேவைப் பொருளாதார முறைமைக்குட்பட்டிருந்தது. நெல் மற்றும் சிறுதானியங்கள் பனையுடன் தொடர்பு டைய உணவுப் பொருட்கள், அத்துடன் குடிசை மற்றும் சிறுகைத்தொழில் பொருட்கள், கடல் வளம் போன்றனவே உற்பத்திப் பொருட்களாக இருந்துள்ளன. இவற்றில் சில பொருட்களை யாழ்ப்பா ணக்குடாநாட்டுக்கும் தென்னிந்தியாவுக் கும் எடுத்துச் சென்று பண்டமாற்று வர்த்தகம் நடைபெற்றதற்கான சான்றுகள் நிறையவே உண்டு. பௌதிக ரீதியாக வளவாய்ப்புக்கள் மட்டுப்படுத்தப்பட்ட தீவகத்தில் குடித்தொகை விரைவாக அதிகரித்துக் கொண்டு செல்வது ஒரு புறமிருக்க தேசிய பொருளாதார அமைப்புடன் நெருங்கிய தொடர்புகள் ஏற்படவே படிப்படியாக யாழ்குடாநாட்டி னதும் நாட்டின் ஏனைய பகுதிகளினதும் தொடர்பு இப்பிரதேச மக்களுக்கு கிடைக்கப்பெற்றது. 1950 களுக்கு முன்பு இப்பிரதேசத்தில் கல்வி வளம் தாழ்ந்த நிலையில் காணப்பட்டிருந்தது. 1950 களின் முற்பகுதி வரை போக்குவரத்துப் பிரச்சினைகளால் யாழ்ப்பாணக் குடாநாட்டில் உள்ள பாடசாலைகளில் கல்விகற்கும் சூழல் மிக அரிதாகவே காணப்பட்டிருந்தது. ஆனால் காலப்போக் கில் யாழ்ப்பாணப் பிரதேசங்களில் கல்விகற்கும் சூழ்நிலை அதிகரிக் கலாயின. அத்துடன் 1960 களிலிருந்து இப்பிரதேசங்களில் காணப்பட்ட சில பாடசாலைகள் மூலமாகவும் மாணவர் களின் கல்வி விருத்தி செய்யப்பட்டது. இவற்றினால் தீவகத்தில் உயர்கல்வி கற்பவர்களும், அரச தொழில்களில் ஈடுபடுபவர்களும் அதிகரிக்கலாயினர்.

குடித்தொகை வளர்ச்சிக்கு ஏற்ப இயற்கை வளப்பற்றாக்குறை காணப்படு கின்றமையால் பொருளாதார நடவடிக்கை யில் சகலரையும் போசிக்கக்கூடிய நிலையில் தீவகப் பிரதேசம் இருந்திருக்க வில்லை. எனவே சென்ற நூற்றாண்டின் ஆரம்பத்திலிருந்து சுதந்திரத்தையடுத்த



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காலப்பகுதி வரை சிறு தொகையினர் வர்த்தகத்தில் ஈடுபடவும் அரசுதுறைகளில் தொழில் புரியவும் கடைகளில் சிப்பந்தி களாக பணிபுரியவும் வெளிமாவட்டங் களை நாடிச் சென்றுள்ளனர். இவர்களில் பெரும்பாலானோர் ஆண்களாவர். எனினும் அவர்களது பொருட்தேட்டங்கள் சொந்தப் பிரதேசங்களுக்கே வந்தடைந்தன. இக் காலப்பகுதியினை "மணியோடர் பொருளாதாரம்" அமைப்புக்குட்பட்டிருந்த தாகக் கொள்ள இடமுண்டு.

1960களைத் தொடர்ந்து யாழ்ப்பா ணக்குடாநாட்டுடன் நெருங்கிய தொடர் பினைக் கொண்டு தற்காலிக, மற்றும் தற்காலிக நிரந்தர இடப்பெயர்வு அரச ஊழியர்கள், வர்த்தகர்களிடையே காணப்பட்டது. இந்நிலை 1980 களின் இறுதி வரை காணப்பட்டிருந்தது. எனினும் சொந்த ஊர்த்தொடர்பு இறுக்கமாகப் பேணப்பட்டு வந்ததைக் காண முடிந்தது. பொருட் தேட்டமுடையோரில் கணிச மானவர்கள் சொந்த ஊர்களிலும் சென்றடைந்த பிரதேசங்களிலும் இருபக்க வாழ்விடங் களைக் கொண்டிருந்தனர்.

இவ்வாறாக பொதுமைப்படுத் தப்பட்ட தீவகத்தின் பௌதிகப் பண்பு களை உள்வாங்கித்தமக்கேயுரிய சிறப்பான பண்பாட்டுடன் வாழ்ந்து வந்த மக்களுக்கு 1991 ஆம் ஆண்டு பேரதிர்ச்சி காத்திருந்தது. இலங்கை இராணுவம் தீவகத்தைத் தனிமைப்படுத்தி விடுதலைப் புலிகளின் செயற்பாட்டைக் கட்டுப் படுத்துவதற்காக தீவகப் பிரதேசங்களை கைப்பற்ற முனையவே தமது பொருள் பண்டங்கள் யாவற்றையும் இழந்து பண்ணைப் பாலத்தினூடாக விரைவாக வெளியேற வேண்டியேற்பட்டது. இதனால் பெரிதும் பாதிக்கப்பட்ட பகுதிகளில் தீவுப்பகுதி தெற்குப் பிரதேசம் முதன்மை பெறுகின்றது.

1970களின் முற்பகுதி வரை தீவகப் பிரதேசமானது நெடுந்தீவு மற்றும் ஊர்காவற்றுறை உதவி அரச அதிபர் பிரிவு என இரு நிர்வாக அலகுகளைக் கொண்டிருந்தது. ஊர்காவற்றுறை அரச ணை, சரவணை, மண்கும்பான் அல்லைப்பிட்டி, மண்டைதீவு, புங்குடுதீவு, நயினாதீவு ஆகிய பிரதேசங்கள் உள்ளடக்கப்பட, தீவுப்பகுதி வடக்குப் பிரிவில் கரம்பன், சுருவில், ஊர்காவற்று றை, காரைநகர், அனலைதீவு, எழுவைதீவு ஆகியன உள்ளடக்கப்பட்டன. 2003 ஆம் ஆண்டு காரைநகரினைத் தனியாகப் பிரித்து தனியானதொரு பிரதேச செயலகம் அமைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. இவை ஒரு புறமிருக்க மக்களை பிரதிநிதித்துவப்படுத்தும் வகையில் ஒவ்வொரு பிரதேச செயலக எல்லைக்குள் பிரதேச சபைகள் உருவாக்கப்பட்டன. இவற்றின் மூலம் அவ்வப்பிரதேசங்களை விருத்தி செய்ய லாம் என்பதற்கேயாகும். அந்த வகையில் தீவக தெற்குப்பிரதேசத்தின் எல்லைக் குள் வேலணைப் பிரதேசசபை தோற்றுவிக்கப்பட்டது

**குடித்தொகை மாற்றம்**

தீவகம் தெற்குப்பிரதேசம் 84.0 சதுரகிலோமீற்றரைக் கொண்ட பெரிய



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிலப்பரப்பாகும். இப்பிரதேசத்தில் 1990 ஆம் ஆண்டு குடித்தொகை மதிப்பீட்டின் பிரகாரம் 52688 மக்கள் வாழ்ந்து வந்ததுள்ளனர் 2003 ஆம் ஆண்டு 16154 மக்கள் வாழ்ந்திருக்க வேண்டும் என மதிப்பீடு செய்யப்பட்டுள்ளது.

**அட்டவணை : 1 தீவகம் - தெற்குப்பிரதேச சபையின் குடித்தொகை (1990 - 2003)**

| பிரதேசம் | 1990 | 1994 | 1996 | 2002 (மார்கழி) | 2003 (வைகாசி) |
|---|---|---|---|---|---|
| மண்டைதீவு | 5030 | 43 | 41 | 876 | 1131 |
| அல்லைப்பிட்டி | 1840 | | 64 | 1138 | 1318 |
| மண்கும்பான் | 1804 | 255 | 18 | 551 | 643 |
| வேலணை | 15365 | | 1172 | 5097 | 5284 |
| சரவணை | 3663 | | 122 | 736 | 792 |
| புங்குடுதீவு | 20012 | 857 | 979 | 3678 | 3898 |
| நயினாதீவு | 4974 | 4232 | 3233 | 3188 | 3088 |
| மொத்தம் | 52688 | 5388 | 5629 | 15214 | 16154 |

**ஆதாரம்: தீவகம் தெற்குப்பிரதேச செயலக அறிக்கைகள் 1990 - 2003**

1991 ஆம் ஆண்டு துண்டாடப்பட்ட இடப்பெயர்வின் விளைவாக தீவகம் தெற்குப்பிரதேசத்தில் நயினாதீவு தவிர்ந்த ஏனைய பிரதேசங்களில் வாழ்ந்து வந்த மக்களில் 90.0 சதவீத மக்கள் வெளியேற வேண்டிய துர்ப்பாக்கிய நிலையேற்பட்டது. இவர்கள் யாழ்குடாநாடு, வன்னிப்பிரதேசம், நாட்டின் ஏனைய பிரதேசங்களிலும் சிதறி வாழ நேரிட்டது. இவர்களில் கணிசமானோர் ஏற்கனவே சர்வதேச இடப்பெயர்வினை மேற்கொண்டவர்களுடன் இணைய சர்வதேச இடப்பெயர்வினை மேற்கொண்டனர். இப்பிரதேசத்திலிருந்து 1990களில் சர்வதேச இடப்பெயர்வினை மேற்கொண்டவர்களின் உண்மையான எண்ணிக்கை பற்றிய தகவல்களைப் பெற்றுக் கொள்வது கடினமானதேயாயினும் இப்பிரதேச மக்களில் 25,0-30.0 சதவீதத்தினர் சர்வதேச இடப் பெயர்வுக்குட்பட்டிருக்கலாம். என்பதனை ஆரம்ப இடத்தின் குடித்தொகையினை மதிப்பிட்டு செய்வதன் வாயிலாகவும் சர்வதேச நாடுகளில் கிராம ரீதியான சங்கங்களில் இணைந்துள்ள அங்கத்தவர்களின் எண்ணிக்கையும் கொண்டு அனுமானிக்க முடிகின்றது.

ஏற்கனவே கூறப்பட்டுள்ளது போல சுதந்திரத்திற்கு முன்னரான வெளியிடப் பெயர்வு, 1950 களின் முற்பகுதியிலிருந்து குடியேற்றத்திட்டத்தினூடான வெளியிடப் பெயர்வு, அரசுதொழில் மற்றும் வர்த்தகத்தில் ஈடுபாடு கொண்டவர்களின் வெளியிடப்பெயர்வு, கல்வியுடன் கூடிய வெளியிடப்பெயர்வு எனப்பல நிலைகளில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வெளியிடப் பெயர்வுகள் இப்பிரதேசங் களிலிருந்து மேற்கொள்ளப்பட்ட போதிலும் குடித்தொகை வேறுபாட்டில் பெரியளவில் மாற்றங்கள் ஏற்படவில்லை என்றேகூறல் வேண்டும். எனினும் 1991ஆம் ஆண்டு மேற்கொள்ளப்பட்ட துண்டாடப் பட்ட இடப்பெயர்வானது இப்பிரதேசத்தில் குடித்தொகைப் போக்கில் பாரியளவிலான வீழ்ச்சியை ஏற்படுத்தியுள்ள துடன் பொருளாதார மற்றும் சமூகத் தேட்டங்கள் அழிவுக்குட்பட்டும் அழிக்கப் பட்டும் காணப்படும் துர்ப்பாக்கிய நிலை யினை இப்பிரதேசம் தற்போது கொண்டிருப் பதைக் காணமுடிகிறது. 1990 இல் 52688 மக்கள் வாழ்ந்திருக்க 1994 இல் 5388 மக்களே வாழ்ந்துள்ளனர். அதாவது 1990ஆம் ஆண்டுக் குடித்தொகையில் 10.2 சதவீதத்தினர் மட்டுமேயாகும் இடப்பெயர் விற்குட்படாது வாழவேண்டிய நிலையிலி ருந்த நயினாதீவு மக்களின் எண்ணிக்கை படிப்படியாக குறைவடைந்து செல்வதனை அட்டவணை 1 காட்டி நிற்கின்றது. 1990ஆம் ஆண்டில் நயினாதீவு தவிர்ந்த தீவுப்பகுதித் தெற்கில் 47714 மக்கள் வாழ்ந்திருந்தனர். ஆனால் 1994ஆம் ஆண்டில் மேற்குறித்த பிரதேசங் களில் 1155 மக்களே வாழ்ந்து வந்துள்ளனர்.

நயினாதீவு தவிர்ந்த ஏனைய தீவகம் தெற்குப் பிரதேசத்தில் 1990இல் 47714 மக்கள் வாழ்ந்திருக்க 2001ஆம் ஆண்டு மேமாதம் 13066 மக்கள் அதாவது 1991ஆம் ஆண்டுக் குடித்தொகையில் 27.3 சதவீதத் தினரே வாழ்ந்து வந்துள்ளனர். அதாவது 1994இல் 2.4 சதவீத மக்களே வாழ்ந்துள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது. நயினாதீவுக் குடித் தொகையையும் சேர்த்துக் கணிப்பிடின் 30.6 சதவீதத்தினர் வாழ்ந்து வருகின்றனர். அதாவது 69.4 சதவீத மக்கள் வெளிஇடப் பெயர்வுக்குள்ளாகியுள்ளனர் என்பது புலனாகின்றது. எனவே கடந்த 13 ஆண்டு களுக்கு பின்னர் இப்பிரதேசத்திற்கு மீள் இடப்பெயர்வினை மேற்கொள்ளாமைக் கான காரணிகளைக் கண்டறிதல் அவசிய மானதும் காலத்துக்குகந்ததுமாகும்.

### மீள் இடப்பெயர்வுப் பண்புகள்

பெரும்பாலான தீவக மக்கள் தாம் பரம்பரையாக வாழ்ந்து வந்த பிரதேசங் களை விட்டு நாட்டின் ஏனைய பிரதேசங்களிலும் வெளிநாடுகளிலும் வாழ்ந்து வருகின்றனர். இவர்கள் தமது சொந்தப் பிரதேசங்களுடன் அன்பும், விசுவாசமும் கொண்டிருக்கின்ற போதி லும் மீள் இடப்பெயர்வில் பெருமளவு அக்கறை கொண்டவர்களாக விருக்க வில்லை. தீவுகளடிப்படையில் 1990 ஆம் ஆண்டு மதிப்பீட்டோடு ஒப்பிடும் போது 2003ஆம் ஆண்டு மேமாதத்தில் வாழ்ந்து வந்த மக்களின் எண்ணிக்கை அட்டவணை 2 இல் தரப்பட்டுள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**அட்டவணை 2**

**இடப்பெயர்வு நிலை - 1990 - 2003 (*)**

| பிரதேசம் | 1990 | 2003 (மே) | சதவீதம் |
|---|---|---|---|
| மண்டைதீவு | 5030 | 1131 | 22.5 |
| அல்லைப்பிட்டி | 840 | 1318 | 71.6 |
| மண்கும்பான் | 1804 | 643 | 35.6 |
| வேலணை | 15365 | 5284 | 34.4 |
| சுரவணை | 3663 | 792 | 21.6 |
| புங்குடுதீவு | 20012 | 3898 | 19.5 |
| நயினாதீவு | 4974 | 3088 | - 62.1 |
| மொத்தம் | 52688 | 16154 | 30.7 |

**ஆதாரம்:** தீவகம் தெற்குப்பிரதேச செயலக அறிக்கைகள்:1990-2003

* இயற்கை அதிகரிப்பு, உள்வெளி இடப்பெயர்வு பற்றிக் கருத்திற் கொள்ளாது கணிப்பீடு செய்யப்பட்டது.

அட்டவணை 2 ஐ கருத்தில் கொள்ளின் 1990 ஆம் ஆண்டுக் குடித்தொகையில் 71.6 சதவீதத்தினர் அல்லைப்பிட்டிக் கிராமத்திற்கு வருகை தந்துள்ளனர். நயினாதீவில் 1990 ஆம் ஆண்டுடன் ஒப்பிடும் போது அண்மைக்காலங்களில் குடித்தொகையில் வீழ்ச்சி நிலையையே காட்டியுள்ளது. இங்கு 1990 ஆம் ஆண்டுக் குடித்தொகையில் 62.1 சதவீதத்தினரே 2003 ஆம் ஆண்டு வாழ்ந்துள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது. இங்கிருந்து படிப்படியாக கருவள செயற்பாடுள்ளவர் களிடையேயான வெளியிடப் பெயர்வு அதிகரித்துக் காணப்படுகின்றது. காலப் போக்கில் இயற்கை அதிகரிப்பு குறைவடையும் சாத்தியக்கூறுகள் காணப் படுவதால் நயினாதீவின் எதிர்காலக் குடித்தொகை தொடர்ந்தும் குறைவடைய வாய்ப்புண்டு. புங்குடுதீவு கிராமத்திலேயே மக்கள் மீள் இடப்பெயர்வு மிகவும் மட்டுப்படுத்தப்பட்டுள்ளதாக அதாவது 19.5 வீதத்தினராகவுள்ளது.

1996 ஏப்ரல் மாதத்திலிருந்து இப்பிரதேசங்கள் நோக்கிய உள் வரவினை அரசாங்கம், பிரதேச செயலகம், பிரதேசசபை போன்றன ஊக்குவித்து வருகின்ற போதிலும் மக்களின் மீள் இடப்பெயர்வு மிகக் குறைவாக இருப்பதற்கான காரணிகளைக் கண்டறிதல் அவசியமானது அதனைப் பின்வரும் தலைப்புகளில் நோக்குதல் சிறப்பானது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அ) பௌதீக வளவாய்ப்புக்கள் மட்டுப் படுத்தப்பட்டிருத்தல்

ஆ) பாதுகாப்பு உத்தரவாதமின்மை

இ) சேரிடம் வசதிவாய்ப்புக்களைப் பெற்றி ருத்தல்

ஈ) சர்வதேச இடப்பெயர்வு

**அ) பௌதீக வளவாய்ப்புக்களை மட்டுப் படுத்திருத்தல்**

தீலகத்தின் பௌதீக வளம் மிகவும் மட்டுப்படுத்தப்பட்டதாகவேயுள் ளது. வளம் குறைந்த நரைமண் தொகுதியைக் கொண்டிருப்பதுடன் வருடாந்த மழைவீழ்ச்சி 50.0 அங்குலத் திற்கும் குறைவானதேயாகும். தரைகீழ்நீர் வளம் குறிப்பாக நன்னீர் வளம் மிகவும் மட்டுப்படுத்தப்பட்ட நிலையில் காணப்ப டுகின்றது. குறிப்பாக வேலணை, புங்குடுதீவு, மண்டைதீவு, நயினாதீவு ஆகிய பிரதேசங்களில் நன்னீர் வளம் முறையே 19.0, 12.0, 30.0, 25.0 சதவீதமா கவேயுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது. நன்னீர் வளப்பற்றாக்குறையினால் இப்பிரதேச மக்கள் சொல்லொண்ணாத் துயரத்தினை அனுபவித்து வருகின்றனர். மேலும் விவசாய நிலங்கள் குடியிருப்பு நிலங்களாக்கப்பட்டுள்ளது மட்டுமல்லாது தொடர்ச்சியாக விரைவாக தரிசு நிலங்களாக மாற்றமுற்று வருகின்றன. பதின்மூன்று வருடங்களுக்கு முன்னர் பயிற்செய்கைக்குட்பட்டிருந்த நிலங்களில் பெரும்பாலானவை வறள்வலயத்துக்கு ரிய வளரிகளினால் மூடப்பட்டுக் காணப்ப டுகின்றன. எனவே விவசாயப் பொருளா தார முறைமையை மீள உருவாக்க முடியாததாகவுள்ளதுடன் விவசாயிகளாக இருந்தவர்களில் பெரும்பாலோனோர் விவசாயத் தொழிலை விட்டு வெளியி டப்பெயர்வினை மேற்கொண்டுள்ளனர். மீன்பிடித்தொழில் புரிந்தவர்களைவிட ஏனைய தொழில் புரிந்தவர்களிடையே வேலைவாய்ப்பு பெருமளவில் ஸ்தம்பித்த நிலை வெளியிடப் பெயர்வின் விளைவாக ஏற்பட்டுள்ளது. உதாரணமாக புங்குடுதீ வுக் கிராமத்தில் கணிசமான அளவில் வாழ்ந்து வந்த தச்சுத்தொழில் புரிந்தவர் களுக்கு அத்தீவில் வேலைவாய்ப்பினை பெற்றுக் கொள்ள முடியாத நிலையில் அவர்கள் தூண்டப்பட்ட இடப்பெயர்வின் விளைவாக புதிய இடங்களைத் தெரிவு செய்து அவ்வவ் விடங்களை நிரந்தரப் பிரதேசங்களாக்கிக் கொண்டுள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது. எனவே பௌதிக வளவாய்ப்பற்ற பிரதேசத்தினை விரும்பாத நிலையும் உள்வரவு மட்டுப் படுத்துவதற்குரிய காரணிகளில் ஒன்றாகக் கொள்ளவேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதாரணமாக புங்குடுதீவுக் கிராமத்தில் கணிசமான அளவில் வாழ்ந்து வந்த தச்சுத்தொழில் புரிந்தவர்களுக்கு அத்தீவில் வேலை வாய்ப்பினை பெற்றுக் கொள்ள முடியாத நிலையில் அவர்கள் தூண்டப்பட்ட இடப்பெயர்வின் விளைவாக புதிய இடங்களைத் தெரிவு செய்து அவ்வவ் விடங்களை நிரந்தரப் பிரதேசங்களாக்கிக் கொண்டுள்ளனர் என்பது குறிப்பிடத் தக்கது. எனவே பௌதிக வளவாய்ப்புற்ற பிரதேசத்தினை விரும்பாத நிலையும் உள்வரவு மட்டுப்படுத்துவதற்குரிய காரணி களில் ஒன்றாகக் கொள்ள வேண்டும்.

### ஆ) பாதுகாப்பு உத்தரவாதமின்மை

தீவகத்தில் குறிப்பாக தீவகம் தெற்குப் பிரதேசம் வளவாய்ப்பற்ற நிலையில் காணப்பட்டிருந்த போதிலும் தாம் பிறந்து, வாழ்ந்த சொந்த மண்ணில் தற்போது பாதுகாப்புக்கு உத்தரவாத மின்மையை கருத்திற்கொண்டு மீள் இடப்பெயர்வினை மேற்கொள்ளத் தயங்கும் நிலையும் முக்கியத்துவம் பெறுகின்றது. குடியிருப்புக்கள் பல வெறுமையாகவிருத்தல், பாதுகாப்புப் படையினர் முகாமிட்டிருத்தல், காலத்துக் காலம் நிகழ்ந்துவரும் அசம்பாவித சம்பவங்கள், போக்குவரத்துக்களில் பாதுகாப்புப் படையினரின் மேலாண்மை மக்கள் நடமாட்டம் குறைவாகவிருத்தல், மிகவும் மட்டுப்படுத்தபட்ட போக்குவரத்து முறைமைகள், மாணவர்களின் கல்வி நிலை வாய்ப்பற்றிருத்தல் போன்ற பல காரணிகள் மீள் இடப்பெயர்வில் மக்கள் ஆர்வம் கொண்டிருக்கவில்லை.

### இ) சேரிடம் வசதிவாய்ப்பினைக் கொண்டி ருத்தல்

தீவகம் தெற்குப் பிரதேசத்தி லிருந்து தூண்டப்பட்ட இடப்பெயர்வு மேற்கொள்ளப் பட்டு ஏறத்தாழ 13 ஆண்டுகள் கடந்து விட்டது. இது மிக நீண்ட காலப் பகுதியாகும். சேரிட வாழ்க்கை அமைப்புக்குள் இறுக்க மாகப் பிணைக்கப்பட்டுள்ளதாலும் ஆரம்ப இடத்தில் உள்ள குடியிருப்புக்கள் உட்பட சகல வசதி வாய்ப்புக்களும் செயலிழந்த அல்லது அழிவுக்குட் பட்டதாக காணப்படுவத னாலும் மீள் இடப்பெயர்வினை மேற்கொள் வதில் மக்கள் பின்னிற்கின்றனர். தாம் சென்றடைந்த பிரதேசங்களில் தமது சொந்தப் பிரதேசங்களில் காணப்படாத வளவாய்ப்புகள் காணப்படுகின் றமையாலும் அவ்வவ்விடங்களை நிரந்தரமாக்கிக் கொண்டுள்ளனர் என லாம். குறிப்பாக புதிய சேரிடங்களில் நன்னீர்வளம் இருப்பதும் அவ்வவ்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விடங்கள் கவர்ச்சிக்குரியதாக காணப் படும் காரணிகளில் ஒன்றாகும்.

இடப்பெயர்வாளர்களைப் பொறு த்தவரை தமது பிள்ளைகளின் கல்விக் கான வாய்ப்பு சேரிடங்களில் காணப் படுவதால் அவ்வவ்விடங்களில் பிள்ளை களுக்கு கல்வி வாய்ப்பினை குறிப்பாக நகரப் பாடசாலைகளில் பெறக் கூடியதாக விருக்கின்றது. கணிசமான பெற்றோர், மற்றும் வயது வந்தவர்களுக்கு தமது சொந்த இடங்களில் சென்று வாழ விருப்பமிருந்தபோதிலும் பிள்ளைகளின் அன்புக் கட்டளையை ஏற்கவேண்டிய நிலையில் இருப்பதால் மீள் இடப் பெயர்வுக்கு பின்னிற்கின்றனர். குறிப்பாக வெளிநாடுகளில் உள்ள உறவினர்கள் தமது உறவினர்களை மீண்டும் சொந்த இடத்திறகுச் சென்று வாழ்வதற்கு விருப்பம் கொண்டவர்களாகவிருக்க வில்லை. இதனால் சேரிடங்களில் குடியிருப்புக்களை வாங்கியோ அல்லது வாடகைக்குப் பெற்றோர் அங்கேயே தங்கவைத்துள்ளனர். யாழ்ப்பாணக் குடா நாட்டுப் பகுதிகள், மற்றும் நாட்டின் ஏனைய பகுதிகளில் வாழ்ந்து வருகின்றவர்களிடையே இத்தகைய பண்பினைக் காணமுடிகின்றது.

கணிசமான பெற்றோர், மற்றும் வயது வந்தவர்களுக்கு தமது சொந்த இடங்களில் சென்று வாழ விருப்பமிருந்த போதிலும் பிள்ளைகளின் அன்புக் கட்டளையை ஏற்கவேண்டிய நிலையில் இருப்பதால் மீள் இடப்பெயர்வுக்கு பின்னிற்கின்றனர். குறிப்பாக வெளிநாடு களில் உள்ள உறவினர்கள் தமது உறவினர்களை மீண்டும் சொந்த இடத்திறகுச் சென்று வாழ்வதற்கு விருப்பம் கொண்டவர்களாகவிருக்க வில்லை. இதனால் சேரிடங்களில் குடியிருப்புக்களை வாங்கியோ அல்லது வாடகைக்குப் பெற்றோர் அங்கேயே தங்கவைத்துள்ளனர். யாழ்ப்பாணக் குடா நாட்டுப் பகுதிகள், மற்றும் நாட்டின் ஏனைய பகுதிகளில் வாழ்ந்து வருகின்றவர்களிடையே இத்தகைய பண்பினைக் காணமுடிகின்றது.

இடப்பெயர்வாளரின் ஆரம்பப் பிரதேசங்களில் அடிப்படை வசதிகளற்ற நிலை தொடர்ந்தும் நிலவுகின்றது. குறிப்பாக மருத்துவவசதிகளைப் பொறுத்தவரை அரசு இது வரை மீள செயற்படுத்தவில்லை. அண்மைக் காலங்களில் பலர் இப்பிரதேசங் களில் மீள் இடப்பெயர்வினை மேற்கொண்டி ருந்த போதிலும் அவர்களில் சிலர் வேறுபிரதேசங்களைச் சென்றடைந்த சம்பவங்களையே காணமுடிகின்றது. அத்துடன் மீள்இடப்பெயர்வினை மேற் கொள்ளும் பட்சத்தில் வேலை வாய்ப்புக் கிடைக்கும் எனக் கூறுவதற்கில்லை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**சர்வதேச இடப்பெயர்வு**

1970 களின் பிற்பகுதியிலிருந்து சர்வதேச இடப்பெயர்வில் தீவக மக்கள் குறிப்பாக இளைஞர்கள் ஆர்வம் கொண்டவர்களாக இருந்துள்ளனர். தீவகம் தெற்குப் பிரதேசத்திலிருந்து கணிசமானவர்கள் சர்வதேசங்களைச் சென்றடைந்தனர். அப்பிரதேசத்திலிருந்து 25.0-30..0 சதவீதத்தினர் சர்வதேச இடப்பெயர்வுக்குட்பட்டுள்ளனர் என மதிப்பிடப்பட்டுள்ளது. இவ்வாறாக காலத்துக்காலம் இடப்பெயர்வினை மேற் கொண்டவர்கள் அவ்வவ்நாடுகளின் சட்டத்திற்கமைய தங்கள் உறவினர்களை யும் தங்களுடன் இணைத்துக் கொள் வதில் ஆர்வம் கொண்டவர்களாக இருந்து வருகின்றனர். குறிப்பாக கனடாவில் வாழ்பவர்களிடையே இத்தகைய பண்பு கள் மேலோங்கிக் காணப்படுகின்றது. இதனால் சர்வதேச இடப்பெயர்வு தொடர்கின்றது. இந்நிலையில் இடம் பெயர்ந்து வெளி நாடுகளில் வாழ்ந்து வருபவர்களிடையே மீள்இடப்பெயர்வு என்பது சாத்தியப்படாது என்றே தோன்று கின்றது. ஒருவேளை நாட்டில் அமைதி நிலை உருவானால் அவ்வவ் நாடுகளி லிருந்து திருப்பியனுப்பப்படும் பட்சத்தில் கூட வளவாய்ப்பற்ற தமது சொந்தப் பிரதேசங் களுக்கு திரும்புவர் எனக் கொள்ள முடியாது. அவர்கள் யாழ்ப்பா ணக்குடாநாட்டிலோ அன்றில் நாட்டின் ஏனைய பிரதேசங்களிலோ வாழ முற்படுவர். அதாவது வெளிநாடுகளில் இப்பிரதேசத்தைச் சார்ந்தோர் யாழ்ப் பாணம், கொழும்பு போன்ற நகரங்களில் குடியிருப்புக்களை அண்மைக் காலங் களில் கொள்வனவு செய்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

சர்வதேச இடப்பெயர்வுக்குட் பட்டோர் தமது சொந்தப்பிரதேசங்களை நேசிக்கின்றனர். அதாவது தத்தம் சொந்த ஊரவர்களை ஒன்றிணைத்து சங்கங்கள் அமைத்து தமது ஊரில் போரினால் நொந்து போயிருக்கும் கல்வியுட்பட அடிப்படைத் தேவைகளுக்கு உதவி புரிந்து வருகின்றனர் இவை வரவேற்கத் தக்கது. ஆனால் அவர்களது வாரிசுகள் தமது பிரதேசங்களை நேசிப்பர் எனக் கூறமுடியாது. பெரும்பாலான சிறுவர்கள், குழந்தைகள் யாவரும் சென்றடைந்த நாடுகளின் மொழிகளிலேயே கல்வி கற்பதுடன் தமிழ்மொழியை இரண்டாம் மொழியாகவே கருதுகின்றனர். அதுமட்டு மல்லாது ஊரோடு இணைந்து வாழ்ந்தவர் வயதாகிவிட்ட நிலை ஒரு புறமிருக்க பலர் இறப்பினையும் தழுவிக் கொள்கின்றனர். இதனால் தமது ஊர்த்தொடர்பினை விரும்பியோ, விரும்பாமலோ விலக்கிக் கொள்ளும் நிலை ஏற்படவும் ஏதுவாகின்றது. அத்துடன் வெளிநாடு களிலுள்ளவர்களுக்கு தமது சொந்தப் பிரதேசம் கவர்ச்சியைக் கொடுக்க மாட்டாது. மேலும் சொந்தப் பிரதேசங் களில் உள்ள நிலபுலங்கள், குடியிருப்புக் களை அறியாதவர் களாகவும் இருக்கும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிலை இளஞ்சமுகத்தி னருக்கு ஏற்படலாம். அவற்றிற்கான பெறுமதியும் அவர்களுக்கு மிகச் சிறிய தாகவே தோன்றலாம். இந்நிலையில் சர்வதேச இடப்பெயர்வுக்குட்பட்டவர்களின் மீள் இடப்பெயர்வு பெருமளவிற்கு சாத்தியப் படாத நிலையே தொடரும் என நம்பலாம்.

**ஏ 9 பாதை திறப்பும் உள்வரவும்**

இலங்கை அரசுக்கும் விடுதலைப் புலிகளுக்குமிடையில் ஏற்பட்ட புரிந்து ணர்வு ஒப்பந்தத்தையடுத்து புலிகளின் கட்டுபாட்டில் உள்ள ஏ9 பாதை மக்கள் பாவனைக்கு திறந்து விடப்பட்ட பின்னர் வன்னிப்பகுதியிலும் தென்னிலங்கை யிலும் தற்காலிகமாக வாழ்ந்து வந்தவர் களில் கணிசமானவர்கள் யாழ் குடா நாட்டுக்கு வந்துள்ளனர். இவர் களில் சிறு தொகையினர் தீவகத்தைச் சேர்ந்தவர் கள். தீவகம் தெற்குப்பிரதேச செயலகப் பிரிவுக்கு ஏறத்தாழ 5000 மக்கள் நாட்டின் ஏனைய பிரதேசங்களிலிருந்து உள் வரவை மேற்கொண்டுள்ளனர் என்பதை புள்ளிவிபரங்கள் மூலம் காணமுடிகின்றது. 2001ஆம் ஆண்டு தை மாதம் இப்பிர தேசத்தில் 11000 மக்கள் வாழ்ந்த வந்த வேளை 2003 ஆம் ஆண்டு மே மாதம் 16000 மக்களாக அதிகரித்துள்ளமை குறிப்பிடத் தக்கது. இந்நிலையில் வன்னிப் பிராந்தியத்திலிருந்து உள் வரவை மேற்கொள்ளவிருந் தவர்களில் பெரும்பாலானோர் வந்து விட்டனர் எனலாம். மேலும் சிறு எண்ணிக்கையினர் சமாதானம் ஏற்படின் மீளவாய்ப்புண்டு. தென்னிலங்கையில் வாழ்பவர்கள் மீண்டும் தமது பிரதேசங்களுக்கு மீள வருவர் எனக்கூறமுடியாது. அவர்களில் பலர் அவ்வவ் பிரதேச சூழ்நிலைக்கேற்ப தம்மை இயல்பாக்கிக் கொண்டுள்ளனர் என்பதை நேரடியாக அறியமுடிகின்றது. 1990ஆம் ஆண்டுடன் ஒப்பிடுமிடத்து தற்போது 30.6 சதவீத மக்களே வாழ்ந்து வருகின்றனர். எதிர்காலத்தில் இயற்கை அதிகரிப்புடன் எஞ்சிய உள்வரவும் இணைந்தாலும் 40..0 சதவீதத்துக்கு மேற்பட வாய்ப்பில்லை என்றே கூறல் வேண்டும்.

தென்னிலங்கையில் வாழ்பவர்கள் மீண்டும் தமது பிரதேசங்களுக்கு மீளவருவர் எனக்கூறமுடியாது. அவர் களில் பலர் அவ்வவ்பிரதேச சூழ்நிலைக் கேற்ப தம்மை இயல்பாக்கிக் கொண்டுள் ளனர் என்பதை நேரடியாக அறிய முடிகின்றது. 1990ஆம் ஆண்டுடன் ஒப்பிடுமிடத்து தற்போது 30.6 சதவீத மக்களே வாழ்ந்து வருகின்றனர். எதிர்காலத்தில் இயற்கை அதிகரிப்புடன் எஞ்சிய உள்வரவும் இணைந்தாலும் 40..0 சதவீதத்துக்கு மேற்பட வாய்ப்பில்லை என்றே கூறல் வேண்டும்.

**எதிர்காலம்**

தீவகம் தெற்குப் பிரதேசத்தின் வளவாய்ப்புக்கள் மட்டுப்படுத்தப்பட்டதாக விருப்பதுடன் ஏற்கனவே வாழ்ந்து வந்த



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மக்களின் உள்வரவும் மட்டுப்படுத்தப்பட்ட தாகவேயுள்ளது. இது ஒரு வழிக்கு ஆரோக்கியமானதாக இருக்கலாம். எனினும் இப்பிரதேசங்களில் உட்கட்டு மான அமைப்பு, வாழ்விடங்கள், கல்விக்கூடங்கள் மற்றும் வணக்கத் தலங்கள், பொது அமைப்புக்களின் கட்டிடங்கள் என்பவற்றில் பெரும்பா லானவை பயன்பாட்டுக்குட்படாதனவா கவும், சமூகவிரோதிகளின் கையாலா காத நிலையினாலும் அழிவுக்குட்பட்டு வருகின்றன. இவற்றினைப் பாதுகாக்கும் பொறுப்பு பிரதேச செயலகம், பிரதேச சபை ஆகியவற்றினது பாரிய கடமை யாகும். தனிப்பட்டவர்களின் குடியிருப் புக்களை அவரவர்களின் அனுமதியுடன் குழுமம் குழுமமாக வகுத்து பாதுகாப்ப துடன் அவற்றைப் பயன்பாட்டுக்குக் கொண்டு வருதல் அவசியமானது. குறிப்பாக இக்கட்டிடங்களை ஆடைக் கைத்தொழில், கைத்தொழில் பேட்டை களை அமைத்தல், தகரத்தில் மீன் அடைத்தல் கைத்தொழில், உல்லாசப் பயணிகளைக் கவரக்கூடிய கைவினைப் பொருட்களை உற்பத்தித் செய்தல் போன்றன மேற்கொள்வதற்குப் பயன்படுத் தலாம். இவற்றைப் புனரமைப் பதற்கும், பயன்படுத்துவதற்குமாக பிரதேச மட்டத் தில் சமூகத்தை உண்மையாக நேசிக்கும் சமூக சேவகர்களை உள்ளடக்கிய குழுக்களின் மூலம் செயற்படுத்த லாம். இதற்கான நிதி பிரதேசமட்டத்தில் காணப்படாமலும் இருக்கலாம். அவ்வவ் குடியிருப்பாளர்களுடன் தொடர்பு கொள்ளும் பட்சத்தில் நிச்சயம் உதவுவர். ஏனெனில் தமது குடியிருப்புக்கள் பாதுகாக்கப்படும் என்பதனாலேயாகும். எனவே இப்பிரதேசத்தை விட்டு வெளியேறியவர்கள் யாவரும் வருவார்கள் என்பதை விடுத்து தற்போதைய களநிலவரத்துக்கு ஏற்பசெயற்படல் வேண்டும். இதுவே இப்பிரதேசம் தொடர்ந்தும் நிலைபெற வழிசமைக்கும்.

"என் மகனே உறுதியாக நில். பிறர் உதவியை எதிர்பாராதே வேறு மனிதர்களின் உதவியைக் காட்டிலும் ஆண்டவனுடைய உதவி எவ்வளவோ பெரிதல்லவா? பரிசுத்தனாயிரு. பகவானை நம்பு, அவரை நம்பியுள்ளவரை நீ நோ வழியில் செல்கிறாய், உன்னை எதுவும் எதிர்த்து நிற்க முடியாது"

- ஸ்ரீ விவேகானந்த சுவாமிகள்




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உள்ளூராட்சி மன்றங்களில் சித்தமருத்துவ சேவை

சுதேச மருத்துவம் இலங்கையில் பல்வேறுபட்ட நிர்வாகக் கட்டமைப்பின் கீழ் செயற்பட்டுவருகின்றது. மத்திய அரசாங்கத்தின் நேரடிக் கண்காணிப்பின் கீழ் போதனா வைத்தியசாலையும், மாகாண சபையின் கீழ்மாகாண வைத்திய சாலைகள் மாவட்ட வைத்திய சாலைகள் மற்றும் மத்திய ஆயுள்வேத மருந்தகங் களும் உள்ளூராட்சிச் சபைகளின் கீழ் இலவசசித்த ஆயுள்வேத வைத்திய சாலைகளும் இயங்கி வருகின்றது. ஆயுள்வேத திணைக்களம் சகல வைத்தியசாலைகளுக்குமான நியமனங் களை பொறுப்பேற்று செயற்படுகின்றது. நிர்வாகக் கட்டமைப்பு மேற்கூறப்பட்டவாறு இருக்கின்ற போதும் மத்திய அரசாங் கத்தின் அல்லது ஆயுள்வேத திணைக் களத்தின் பணிப்புரைகள், சுற்றறிக் கைகள் தகுந்தவாறு உள்ளூராட்சி சபைகளின் கீழ் நிர்வகிக்கப்படும் இலவச சித்தஆயுள்வேத வைத்தியசாலைகளை, சென்றடைவதில்லை, இதனால் வைத்திய உத்தியோகத்தர்களும் சம்பந்தப்பட்ட பிரதேசசபைகளும் பல்வேறு பிரச்சனை களை எதிர்நோக்குவது தவிர்க்க முடியாததொன்றாகி விடுகின்றது.

உள்ளூராட்சி சபைகளின் நிர்வா கத்தின் கீழ் வடகிழக்கு மாகாணத்தில் 50க்கு மேற்பட்ட இலவச ஆயுள்வேத வைத்தியசாலைகள் இயங்குகின்றன. சித்த மருத்துவத்தை இலவச சித்த



**பேராசிரியர் சுப்பிரமணியம் பவானி.**

*சித்தமருத்துவத்துறை,*
*யாழ். பல்கலைக்கழகம்.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அயுள்வேத வைத்தியசாலைகள் மூலமாக மக்கள் மத்தியில் பேணி பாதுகாத்து வந்ததில் உள்ளூராட்சிச்சபையின் பங்களிப்பை நாம் மறக்க முடியாது. அதாவது வைத்தியசாலைக்குரிய கட்டடம், ஆளணி, மருந்துகள் மற்றும் தளபாடங்கள் போன்றவற்றை ஒவ்வொரு பிரதேசசபையும் தங்கள் நிதி வசதிக்கேற்ப வழங்கிவந்துள்ளதை நாம் நினைவுகூர கடமைப்பட்டுள்ளோம். அண்மையில் தான் வைத்திய உத்தியோகத்தருக்கான சம்பளம் மத்திய அரசாங்கத்தால் வழங்கப்பட்டது. அத்துடன் மருந்துகள் கொள்வனவு செய்வதற்கான நிதியும் ஓரளவு வழங்கப்பட்டது.

சித்த மருந்துவத்தின் நோக்கம் யாதெனில் ஒரு சிறந்த சுகாதார சேவையை மக்கள் ஆரோக்கியமாக வாழ்வதற்கு நல்ல முறையில் வழங்கவேண்டுமென்பதாகும். இந்த நோக்கத்தை நிறைவேற்றுவதற்கு வைத்தியர்கள் மற்றும் ஆரோக்கிய சாலையில் கடமையாற்றும் துணை உத்தியோகத்தர்கள், பிரதேச சபையின் நிர்வாக உத்தியோகத்தர்கள் ஆகியோர் ஒருங்கு சேர்ந்து செயற்படுதல் அவசியம். மக்களுக்கு திருப்திகரமான சேவையை நாம் வழங்காவிடில் எமது துறை மக்கள் மத்தியில் பிரபல்யமடைவது காலதாமதமாகும். உள்ளூராட்சி மன்றங்களில் இலவச சித்தாயுள்வேத வைத்தியசாலைகளின் சேவைத்திறனை அதிகரிக்கவும் சித்த மருந்துகளை தயாரித்து வழங்கவும், பொது மக்களின் கவனத்தை சித்த மருத்துவத்தின் பால் ஈர்க்கவும் பின்வரும் நடைமுறைகளை கையாளுதல் மிகவும் அவசியமானதும் தவிர்க்க முடியாதது மான ஒன்றென நான் கருதுகின்றேன்.

1. உள்ளூராட்சிசபை ஆணையாளர் சகல இலவச சித்தஆயுள்வேத வைத்தியசாலைகளையும் பரிபாலிப்பதற்கான ஒரு பொதுவான நிர்வாகக் கட்டமைப்பை ஏற்படுத்துதல்.

2. சகல வைத்தியசாலைகளுக்கும் ஒரேவிதமான அடிப்படை வசதிகள், ஆளணி வசதிகள் ஏற்படுத்திக் கொடுப்பதுடன் சகல உத்தியோகத்தர்களும் நேரம் தவறாது கடமையைச் செய்வதனை உறுதிப்படுத்த வேண்டும்.

3. இயலுமான அளவிற்கு ஆயுள்வேத மருந்துகள் பாவிப்பதை தவிர்த்து பொதுவாக காணப்படும் 15 அல்லது 20 ரோகங்களுக்கு சித்தமருந்துகளை தயாரித்து விநியோகிக்க நடவடிக்கை எடுக்க வேண்டும். சகல வைத்தியசாலைகளிலும் குறிப்பிட்ட அவசியமான மருந்துகள் கையிருப்பில் இருத்தல் அவசியமானது.

4. ஒவ்வொரு சித்தவைத்திய சாலையும் 20,000 மக்கள் செறிவுள்ள இடத்தில் அமைவதை உறுதிசெய்ய வேண்டும். குறிப்பிட்ட பிரதேசத்தில் பொதுவாக காணப்படும் ரோகநிலைகளை இனம் கண்டு அதை சிகிச்சிப்பதற்கான ஒழுங்குகளை மேற்கொள்ள வேண்டும்.

5. ஒரு வைத்திய உத்தியோகத்தர் குறிப்பிட்ட வைத்தியசாலையில் வாரத்தின் 6 நாட்களும் வேலை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செய்தல் அவசியமானது. கிளை வைத்தியசாலைகள் நிறுவி ஒரு வைத்தியரை ஒவ்வொரு கிளைக்கும் வாரத்தில் இரண்டு நாட்கள் வேலை செய்யும் முறையை தவிர்த்தல் வேண்டும். ஆளணி இல்லாதவிடத்து ஒரு வைத்தியசாலையை சிறப்பாக பரிபாலிப்பது சிறந்தது.

6. இலவச சித்தஆயுள்வேத வைத்திய சாலைகளில் ஒரு குறிப்பிட்ட ரோக நிலையை மாற்றமுடியாவிடில் அந்த நோயாளியை தகுந்த ஆரோக்கிய சாலைக்கு சிகிச்சைக்காக சிபார்சு செய்யும் நடைமுறையை பேண வேண்டும்.

7. வைத்தியசாலையை அண்டியுள்ள பகுதிகளில் காணப்படும் மூலிகைப் பரம்பலை இனம்கண்டு அவற்றைத் தகுந்த முறையில் சிகிச்சைக்காகப் பயன்படுத்த முயற்சித்தல் வேண்டும். அவசியம் ஏற்படுமிடத்தில் மூலிகைத் தோட்டம் அமைக்க நடவடிக்கை எடுக்கலாம். வைத்திய சாலைக்கு அருகாமையிலுள்ள பாடசாலைக்கு வாரத்தில் ஒரு நாள் சென்று (2 மணித்தியாலங்கள்) சுகாதார சம்பந்த மான விடயங்களை அதிபரின் அனுமதியுடன் கல்விப் பொதுத்தராதர மற்றும் உயர்தர மாணவர்களுக்கு போதிக்கலாம். இதுதவிர உணவுப் பழக்கவழக்கங்கள் பற்றியும் விளக்கம் அளிக்கலாம்.

8. குறிப்பிட்ட பிரதேசத்தில் உள்ள பாரம்பரிய வைத்தியர்களையும் அவர் களின் விஷேட சிகிச்சை முறை களையும் அறிந்து அவர்களுடன் கலந்து பேசி நோய் தீர்ப்பதில் அவர்களின் அனுபவத்தையும் பகிர்ந்து கொள்ளலாம்.

9. மருந்துகள் செய்வதற்கான நிதி பற்றாக்குறை இருப்பின் சில அரச சார்பற்ற நிறுவனங்கள் மற்றும் நலன்விரும்பிகள் ஊடாக நிதியைப் பெற்று மக்களின் மக்களின் சுகாதார சேவைகளை பூர்த்திசெய்ய ஒழுங்கு கள் செய்தல் வேண்டும். இதற்கான கருத்தரங்குகளை ஒழுங்கு செய்தல் வேண்டும்.

10. வைத்திய உத்தியோகத்தர்களுக் கான பட்டப்படிப்பின் படிப்பை மேற்கொள்வதற்கான வசதிகளை ஏற்படுத்திக் கொடுத்தல் வேண்டும். இந்தியாவில் சித்தமருத்துவம் சம்பந்தமாக ஏற்படும் முன்னேற்றங் களை நாங்களும் பின்பற்றக் கூடிய முறையில் தொடர்புகளை ஏற்படுத்திக் கொள்வது அவசியமானது.

உள்ளூராட்சி வாரம் கடைப்பிடிக்கும் சமயத்தில் குறிப்பிட்ட பிரதேசத்தில் இயங்கும் வைத்தியசாலைகளில் சித்த மருத்துவ சேவையினால் ஏற்பட்ட அபிவிருத்தி பற்றிய மதிப்பீட்டு அறிக்கை ஒன்றையும், மக்களுக்கு ஏற்பட்ட நலன்கள் பற்றியும் தெளிவு படுத்துதல் வேண்டும். இப்படியான செயற்பாடுகள் ஒரு ஆய்வினை ஏற்படுத்த அடிப்படையாக அமையும். எந்தத்துறையும் முன்னேற்ற மடைவதற்கு ஆரர்ச்சியும், வெளியீடுகளும் அவசியம். ஆரம்பசுகாதார சேவைகளில் நோய்வராமல் தடுத்தல், தகுந்த ஆகாரங்களை உட்கொள்ளல், பழக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வழக்கங்களை மாற்றுதல் (புகைத்தல், மதுபானம்) போன்றவற்றை சித்தமருத்த வத்தின் பால் ஈர்க்கலாம். சித்தவைத்தியம் மக்கள் மயப்படுத்துவது இன்றைய காலத்தின் தேவையாகும்.

வைத்தியசாலைகளில் சித்தமருத்துவ சேவையினால் ஏற்பட்ட அபிவிருத்தி பற்றிய மதிப்பீட்டு அறிக்கை ஒன்றையும், மக்களுக்கு ஏற்பட்ட நலன்கள் பற்றியும் தெளிவு படுத்துதல் வேண்டும். இப்படியான செயற்பாடுகள் ஒரு ஆய்வினை ஏற்படுத்த அடிப்படையாக அமையும். எந்தத் துறையும் முன்னேற்றமடைவதற்கு ஆராச்சியும், வெளியீடுகளும் அவசியம். ஆரம்ப சுகாதார சேவைகளில் நோய் வராமல் தடுத்தல், தகுந்த ஆகாரங்களை உட்கொள்ளல், பழக்கவழக்கங்களை மாற்றுதல் (புகைத்தல், மதுபானம்) போன்றவற்றை சித்தமருத்தவத்தின் பால் ஈர்க்கலாம். சித்தவைத்தியம் மக்கள் மயப்படுத்துவது இன்றையகாலத்தின் தேவையாகும்.


1. இலங்கையின் முதல் ஜனாதிபதி யார்?
   வில்லியம் கோபல்லாவ
2. சமரேகையால் இரு சமபாதிகளாகப் பிரிக்கப்படும் கண்டம் யாது?
   ஆபிரிக்கா
3. உலகின் மிகப்பெரிய மாளிகை எது?
   ரோமாபுரியில் உள்ள வத்திக்கான் மாளிகை
4. தொலைபேசியைக் கண்டுபிடித்தவர் யார்?
   அலெக்ஸ்ண்டர் கிரகாம்பெல்
5. இலவசக்கல்வியை அறிமுகஞ்செய்தவர் யார்?
   சீ. டபிள்யூ. டபிள்யூ. கன்னங்கரா
6. இந்தியாவின் பூந்தோட்டம் என அழைக்கப்படுவது?
   பெங்களூர்.
7. இலங்கையில் பறவைகளின் சரணாலயம் எது?
   குமணக்காடு
8. முதல் விண்வெளி வீராங்கனை யார்?
   வலன்டீனா தெரஸ்கோவா
9. மனிதனைப்போல் அழும் மிருகம் எது?
   கரடி
10. உலகில் மிகப்பெரிய வளைகுடா எது?
    மெக்சிக்கோ



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஈழத் தமிழ் இனத்தின் கடந்த காலகட்டம் எதனை உணர்த்தி நிற்கின்றது

ஈழத்தமிழினத்தின் வரலாறு தொடர்ச்சியாக பல ஏற்ற இறக்கத்தையும் ஏமாற்றத்தையும் கண்டுள்ளது. எனினும் இன்றைய சூழ்நிலைக்கேற்ப தமிழன் வாழ்வில் 19ம் நூற்றாண்டின் இறுதிப் பகுதியிலும் இருபதாம் நூற்றாண்டிலும் ஏற்பட்ட மாற்றங்களை குறிப்பாக 1956 - 1972 காலப் பிரிவில் ஏற்பட்ட மாற்றங் களில் கூடிய கவனம் செலுத்தி நடந்த வரலாற்று நிகழ்ச்சிகளைத் தொகுத்துப் பார்த்தல் பயன் பல அளிக்கும் என்று கருதுகின்றோம்.



**சேர் முத்துக்குமாரசாமி**

19ம் நூற்றாண்டின் ஏறக்குறைய நடுப்பகுதியில் சட்ட நிருபணசபையில் (Legislative Council) உலகப்புகழ் படைத்த கலைக்குருசில் ஆனந்தக் குமாரசாமியின் தந்தை சேர். முத்துக்குமாரசாமி அவர்கள் அங்கம் வகித்து தனது கவர்ந்திழுக்கும் ஆங்கிலச் சொல்லாட்சியால் தமிழின் பெருமையை நிலைநாட்டியதோடு தமிழில் எழுந்த சில தகைசான்ற இலக்கியங்களையும் ஆங்கிலத்தில் ஆக்கம் செய்த பெருமை யும் இவரைச் சாரும். தாயுமானவர் பாடல்களால் கவரப்பட்ட இவர் அதனை ஆங்கிலத்தில் தந்த பெருமையும் இவரையே சேரும். இவரின் புகழ் அன்றைய இங்கிலாந்தின் அரசி விக்டோரியா வரை எட்டியது. பிரித்தானி யப் பேரரசர் புகழ்பெற்ற தலைமை அமைச்சர்கள் பாமஸ்டன் (Palmerston)

மா.க.ஈழவேந்தன்,
60, புங்கங்குளம் வீதி,
கொழும்புத்துறை,
யாழ்ப்பாணம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

டிஸ்ரேலி (Disraeli) ஆகியோர் இவரின் நண்பர்களாக விளங்கியதையும் வரலாறு எடுத்துரைக்கிறது. ஆசியக் கண்டத்தில் முதல் "சேர்" பட்டம் பெற்ற பெருமை இவரையே சாரும். 'The foremost man of the twenty millions or more of the dradidian race" (200 இலட்சத்துக்கு மேற்பட்ட திராவிட இனத்தின் மாபெரும் தலைவர்) என்று 'The Ceylon Observer" இன் ஆசிரியர் Ferguson (பேர்கஸன்) அவர்களால் வாழ்த்தப்பெற்ற செய்தியும் இங்கு குறிப்பிடத்தக்கது.

சேர்பொன் இராமநாதன், சேர் பொன் அருணாசலம்

சேர் முத்துக்குமாரசாமியை அடுத்து இவரின் மருமக்கள் சேர் பொன் இராமநாதன், சேர் பொன் அருணாசலம் ஆகியோர் ஏறக்குறைய அரைநூற்றாண்டுக் காலம் இலங்கை அரசியலை ஆட்டிப் படைத்ததையும் வரலாறு ஏற்றமுற எடுத்துரைத்துள்ளது.

## சிங்கள மக்களைக் காப்பாற்றிய இராமநாதன்

சிங்கள மக்கள் தம் இன உணர்வு, மொழி, உணர்வு அற்ற நிலையில் - தம் தனித்துவத்தை இழக்கும் ஆபத்துக்கு ஆளாகி உள்ள போது 'If Sinhala lips will not speak the Sinhala language who else there to speak it" (சிங்கள நாக்குகள் சிங்களத்தைப் பேசாதுவிடின் யார் சிங்களத்தை பேச உள்ளனர்?) என்ற வினாவை 1904ம் ஆண்டு ஏப்ரல் நான்காம் திகதி ஆனந்தா கல்லூரியில் சேர் பொன் இராமநாதன் முழங்கிய முழக்கம் தான் சிங்களவர்களை இன உணர்வும், மொழியுணர்வும் கொள்ளச் செய்தது. இதே இராமநாதன் அவர்கள் அகில இலங்கை அடிப்படையில் படித்தோர் தொகுதிக்கு 1911ல் சிங்களப் பெருந்தகை (பிரபு) பொன்னாந்து தோற்கடிக்கப்பட்ட நிலையில் இராமநாதன் பெருவெற்றி ஈட்டியத்தையும் இலங்கை வரலாற்று ஏடுகள் உரிய முறையில் பதிவு செய்துள்ளன. இதே இராமநாதன் அவர்கள் 1915இல் சிங்கள முஸ்லிம் மக்களிடையே ஏற்பட்ட இனக்கலவரத்தின் போது - முதலாம் போர் நடைபெற்ற வேளையில் தம் உயிரைத் துச்சமென மதித்து நீர்மூழ்கிக் கப்பலில் இங்கிலாந்து சென்று மார்ஷல் (Martial) சட்டத்தை எதிர்த்து சிங்கள வர்களைக் காப்பாற்றியதும் இவரின் வீரதீர செயல் களைப் பாராட்டிய சிங்களத் தலைவர்கள் இவர் இலங்கை திரும்பியபோது கொழும்பு துறைமுகத்திலிருந்து இவரின் மாளிகை சுகஸ்தான் வரை தாமே குதிரைகளாக மாறி இவரைத் தேரில் வைத்து இழுத்துச் சென்ற காட்சியை வரலாற்று ஆசிரியர்கள் வரையத் தவறவில்லை. யாழ்ப்பாணத்து பரமேஸ்வ ராக்கல்லூரியின் (இன்றைய யாழ்ப்பாணக் பல்கலைக் கழகத்தின்) சுவரில் இந்நிகழ்ச்சி ஓவியமாக வரையப்பட்டிருக்கிறது. இன்று அதன் நிலை யாதோ நாம் அறியோம். "In the dire our of our need a valiant son of the north came to our rescue, if not for him the Sinhala race may have been wiped out from the of the earth" (எமது நெருக்கடியான காலகட்டத்தில் வடக்கிலிருந்து வந்த இவ்வீர மகன் எமக்குத் துணை போகாது விட்டால் சிங்கள இனமே பூண்டோடு அழிந்திருக்கும்) என்று சிங்களத் தலைவர்கள் தமக்குள் போட்டியிட்டுக் கொண்டு இராமநாதனை வாழ்த்தி வழித்திய செய்தியும் வரையப்பட்டுள்ள பெருமை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மிக்க செய்தியாகும் என்பதை எவரும் மறுப்பதற்கில்லை.

## சேர் பொன் அருணாசலம்

இதே இராமநாதன் 1919இல் தன் தம்பி சேர் பொன் அருணாசலம் தேசியக் காங்கிரஸின் தலைவராகத் தெரிவு செய்யப்பட்ட நிலையில் தன்னிடம் வாழ்த்துப்பெற வந்தபோது 'Thambi you go ahead, but be careful you may be hauled off the chair" (தம்பி முன்னேறு, ஆனால் உன் நாற்காலியில் இருந்து நீ தூக்கி எறியப்படும் ஆபத்து உண்டு) என்று எச்சரித்ததற்கு அமைய மேற்கு மாகாணத் தொகுதிக்கு போட்டியிட நியமிக்கப்பட்ட அருணாசலம் சேர்.ஜேம்ஸ் பீரிஸிற்கு இரகசியமாக அத்தொகுதி ஒதுக்கப்பட் டதன் காரணமாக தூக்கி எறியப்பட்ட துரோகம் மிக்க - துன்பம் நிறைந்த கசப்பான வரலாற்று நிகழ்ச்சிகளையும் வரலாற்று ஏடுகள் வரையத் தவறவில்லை. எளிதில் ஆத்திரத்திற்கு ஆளாகாத அருணாசலம் அவர்கள் சிங்களத் தலைவர்களால் ஏமாற்றப்பட்ட நிலையில் சினத்தின் உச்சநிலைக்குச் சென்று சிங்களவரிடமிருந்து பிரிந்து 1923இல் தமிழர் பேரவையைத் (Ceylon Tamil League) தோற்றுவித்த அவர் "We desire to preserve our individuality as a people to make our-selves worthy of our inheritance. We are not enamoured of the cosmopolitanism which would make of us, neither fish, flesh, fowel nor red herring. That does not mean that we are to be selfish and wish only for the Tamil Community. We have done more for the welfare of all Ceylon than for the Tamils...We do object, however strongly to being under dogs. We mean to make ourselves strong to defend ourselves and strong also to work for the common good" (எமது மரபுக்கேற்ப எம் இனத்தின் தனித்துவத்தை நாம் பேண விரும்பு கின்றோம். எம்மை காயுமற்ற, கறியுமற்ற, பூவுமற்ற சாம்பார் நிலைக்கு, அனைத்து லகக் கோட்பாடு என்ற பெயரில் நாம் சீரழிந்து போவதை எம்மால் ஏற்க முடியாது. ஆனால், அதேவேளையில் தமிழர் நலன் கருதி மட்டும் பாடுபடும் தன்னலவாதிகளாக நாம் வாழ விரும்ப வில்லை. தமிழர்களைவிட முழு இலங்கையின் நலனுக்காக உழைத்த வர்கள் வேறு யார்? எனினும் இதுகொண்டு எவரின் ஏவலையும் நிறைவேற்றும் அடிமைகளாக நாம் வாழ மறுக்கின்றோம். பொதுநலனைப் பேணுவதற்கும் எம்மைப் பாதுகாப்பதற்கும் எம்மை வலுவுடைய வர்களாக ஆக்க நாம் உறுதி பூண்டுள்ளோம்)

## இராமநாதனின் இறுதிக்காலப் பணி

1924இல் சேர் பொன் அருணாசலம் தனது எழுபதாவது அகவையில் மதுரையில் மறைந்து இங்கு அவர் உடல் கொண்டுவரப்பட்டு, எரியூட்டப்பட்ட தையிட்டு இவரின் அண்ணன் சேர் பொன் இராமநாதன் பணி தொடர்கிறது. 1920இல் இறுதிப் பகுதியில் டொனமூர் ஆணைக்குழு இலங்கைக்கு வருகை தந்தபோது அனைத்துலக மக்களுக்கும் வாக்குரிமை வழங்குவதை (Universal Franchise) விதந்துரைத்தது. அப்பொழுது சேர் பொன் இராமநாதன் "Donoghmore means Tamils no more we are handing over the power to the vulgar mob. If we accept this constition without due safeguards it will be a death-knell to the Tamils" (டொனமூர் எனின் இனிமேல் தமிழர் இல்லை. போதிய



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாதுகாப்பற்ற நிலையில் இவ்யாப்பினை நாம் ஏற்போமாயின் எம் அழிவை நாமே அரவணைப்பதாகும்) என்று அவர் எச்சரித்ததையும், அவரின் எச்சரிப்பை வெறிகொண்ட சிங்கள இனம் ஏற்க மறுத்து அறளை பெயர்ந்த கிழவனின் பிதற்றல் என்று எள்ளிநகையாடியதும், தம்மை அறிவாளிகள் என்று கருதிய அன்றைய தமிழ்த் தலைவர்கள் பலர் இவரின் எச்சரிக்கையை ஏற்க மறுத்தபோது யாழ்ப்பாண இந்துக் கல்லூரியில் நடைபெற்ற கூட்டத்தில் அவர்களை நேரில் பார்த்து "முத்திநெறி அறியாத மூர்க்கரொடு முயல்வேனை" என்ற திருவாசகச் சொற்றொடரை மேற்கோள் காட்டி புலம்பியதை இன்று நாம் நினைக்கின்றபோது கூட எம் கண்கள் கலங்குகின்றன.

## ஜி.ஜி.பொனம்பலத்தின் தலைமை

இந்நிகழச்சியை அடுத்து சில மாதங்கள் உருண்டோடிய நிலையில் சேர் பொன் இராமநாதன் தனது எழுபத்தொன்பதாவது அகவையில் 1930 நவம்பர் 26இல் இவ்வுலக வாழ்வை நீத்தார். இவர் மறைவை அடுத்து தமிழரை வழிநடத்த ஒரு தலைவன் அற்ற நிலையில் சில ஆண்டுகள் வெற்றிடமாக உருண்டோடின. அவ்வெற்றிடத்தை நிரப்புகின்ற முறையில் "தமிழன் என்று சொல்லடா, தலை நிமிர்ந்து நில்லடா" என்று திரு.ஜி.ஜி.பொன்னமபலம் அவர்கள் தமிழனைத் தட்டி எழுப்புகின்ற காட்சி உருவானது. சோல்பரி ஆணைக்குழுவை எதிர்த்து சோல்பரி அவ்வாணைக் குழுவையே அப்படியே ஆட்கொள்ளுகின்ற முறையில் அவர் நிகழ்த்திய ஆங்கிலப் பேருரை வரலாற்றில் இடம்பெறும் நிகழ்ச்சியாக விளங்கியது. இவர் தம் உரையில் "Soulbury has come to bury the soul of the Tamils" (சோல்பரி தமிழினத்தின் ஆன்மாவைப் புதைக்க வந்துள்ளார் என்று கூறிய கூற்றும், தமிழ் மக்களுக்கு மேலும் புரிய வைக்கின்ற முறையில் சோல்பரி ஒன்றைக் கண்உடையவராக விளங்கியதால் ஒற்றைக் கண்ணன் தந்த ஒற்றையாட்சி தமிழினத்தை ஒழித்துக்கட்டும்) என்று முழங்கிய முழக்கம் பல்லினம், பல்மொழி, பல்சமயம் உள்ள நாட்டில் ஒற்றையாட்சி தமிழினத்தை ஒழித்துக்கட்டும் என்று கூறிய கூற்று நூற்றுக்கு நூறு உண்மை என்பதை காலம் உணர்த்தியுள்ளது. எனினும் எம் இனத்திற்கு ஏற்பட்ட சாபக்கேடு என்னவெனில், ஒரு தலைவனுக்குரிய அனைத்து ஆளுமையும் படைத்திருந்த திரு.ஜி.ஜி.பொன்னம்பலம் அவர்கள் இந்திய வம்சாவழி மக்களுடைய குடியுரிமை, வாக்குரிமை பறிபோவதற்குத் துணை நின்றதும், ஒரு அமைச்சர் பதவிக்காக தமிழினத்தை அடிமைப்படுத்திய நிகழ்ச்சியும் வரலாற்றில் மன்னிக்க முடியாத கறை படிந்த நிகழ்ச்சிகளாகும்.

## செல்வாவின் தலைமை

"திரு.பொன்னம்பலம் அவர்களிடம் தலைமைக்குரிய அனைத்துப் பண்புகளும் இருந்தது. ஆனால் மருந்தளவும் நேர்மை அவரிடம் இல்லாததால் "Tincture of Honesty" அவரிடம் இருந்து நான் பிரிய நேரிட்டது. திரு.பொன்னம்பலத்தை விட எனக்கு வயது இரண்டு கூட. எனினும், அவரது தலைமையை நான் ஏற்றேன். ஆனால் அவர் கொள்கை தடம்புரண்டதைக் கண்டபோது, அவருடன் நான் கூடி வாழ முடியவில்லை என்று தந்தை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செல்வா எனக்கு நேரிற் கூறிய செய்தி எம் நினைவிற்கு வருகின்றது.

**இந்திய விடுதலை பற்றி பெரியார் கூறியதும், இலங்கை விடுதலை பற்றி பொன்னம்பலம் கூறியதும்.**

இந்தியத் துணைக்கண்டத்திற்கு 1947 ஆகஸ்ட் 15இல் விடுதலை கிடைத்த தாகச் சொல்லப்பட்டது. இலங்கைக்கு 1948இல் பெப்ரவரி 4இல் விடுதலை கிடைத்ததாகவும் சொல்லப்பட்டது. இந்தி யாவுக்குச் சுதந்திரம் கிடைத்தபோது, "இப்போது வெள்ளையன் வெளியேறி விட்டால், இனிமேல் வட இந்தியன் ஆட்சிக்கு வர இருக்கின்றான். ஆபத்துக் கள் சூழ இருக்கின்றனர்" எனவே சுதந்திர நாளைத் துக்க நாளாகக் கொண்டாடு வோமென பெருமுழக்கம் செய்தார் பெரியார்". ஆனால் பல தியாகங்கள் செய்து பெறப்பட்டு இந்திய விடுதலையை குறைத்து மதிப்பிடக்கூடாது எனவே, இந்திய விடுதலையை வரவேற்போம். தமிழர் விடுதலைக்காகத் தொடர்ந்து போராடுவோம்" எனக் கூறினார் அறிஞர் அண்ணா. இன்று இந்தியாவில் தமிழரை ஒட்டி நடக்கும் நிகழ்ச்சிகளைப் பார்க்கின்றபோது "ஆவது அறிந்த" அறிவாளிகளாக - தீர்க்கதரிசிகளாகப் பெரியார் விளங்கியதை நாம் அறியத் தக்கதாக இருக்கிறது. மாறாக அறிஞர் அண்ணாவின் பெருந்தன்மை எம் அழிவிற்கே வழிவகுத்துள்ளதை நாம் காணக்கூடியதாக இருக்கின்றது. "பெரு மனத்தால் கெட்ட பேயன் தமிழன்" என்று அன்று கவிஞன் காசி ஆனந்தன் கூறிய கூற்று மெய்ப்பிக்கப்பட்டதை இங்கு காண்கின்றோம். இது போன்றே இலங்கை யிலும் வெள்ளையன் வெளியேற சிங்களவன் ஆட்சிக்கு வந்தபோது அன்று இனஉணர்வோடு வாழ்ந்த திரு.ஜி.ஜி.பொன்னம்பலம் அவர்கள் "There is only a change of leadership from white to black or brown, but we are in store of greater dangers" (வெள்ளையன் ஆட்சி வெளியேற கறுப்பன் ஆட்சி தலைதூக்கியுள்ளது. ஆபத்துக்கள் பல சூழ இருக்கின்றன) என்று அவர் எச்சரித்தது எம் நினைவிற்கு வருகின்றது.

## ஜின்னாவின் தொலைநோக்கு

இந்தியா விடுதலைக்குப் போராடிய பொழுது முஸ்லிம்கள் பாதுகாப்பு இல்லை எனக் கூறிய ஜின்னா நாடு பிரிய வேண்டுமெனப் போராடினார். ஈழத் தமிழ்த் தலைவர்கள் எவருக்கும் இல்லாத தீர்க்கதரிச உணர்வோடு ஜின்னா இருந்ததனால் வெள்ளையன் வெளியேற முனைந்தபோது அவனைக் கட்டிய ணைக்க முனையாது, "Quit India alright but divide and quit India" வெள்ளையனே வெளியேறு ஆனால் நாட்டைப் பிரிந்த பின்பு வெளியேறு என்ற தொலை நோக்கோடு கூறிய உள்ளம் எம் தலைவர் களிடம் இல்லாததனால் நாம் இன்றைய இழிவுநிலைக்கு ஆளாகி உள்ளோம் என்பதை நாம் மறக்காது இருத்தல் நலம். மற்றும் காந்தியும், நேருவும் பெருமக்கள். அவர்களிடம் குறுகிய மனப்பான்மை இல்லை. அவர்கள் அனைத்திந்திய அடிப்படையில் சிந்திக்கின்றார்கள். அப்படிப்பட்ட தலைவர்களிடமிருந்து ஏன் நாட்டைப் பிரிக்க விரும்புகிறீர்கள் என்று ஜின்னாவிடம் ஒரு செய்தியாளர் கேட்டபோது "காந்தியும் நேருவும் பெருமக்கள் என்பதை நான் ஏற்கிறேன். ஆனால் அவர்கள் சாகா வரம் பெற்றவர்களா? சாகும் நிலையிலுள்ள எந்தத் தலைவரிடமும் சாகாது நிலைத்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிற்க வேண்டிய என் சமுதாயத்தை யாரிடமும் ஒப்படைக்க நான் தயாரில்லை என்று அவர் கூறியது இன்று ஆழ்ந்து சிந்திக்கத் தக்க பொருள் பொதிந்த கூற்றாகும். "Gandhi and Neru are greatmen; They think of India as a whole. They are above narrow parochialism. Are they immortal beings for me to entrust the future of my community. I do not" என்று அவர் அன்று ஆங்கிலத்தில் கூறியது அப்படியே இங்கு தரப் பட்டுள்ளது.

## ஆளுங்கட்சிகள் மாறின, ஆளும் தலைவர்கள் மாறினர், ஆனால் ஆளும் இனமாக சிங்கள இனமே விளங்குகிறது

1948 இல் டி.எஸ்.சேனநாயக்கா நாட்டின் முதல் தலைமை அமைச்சராகத் தலைமை ஏற்றார். அவரை அடுத்து அவரின் மகன் டட்லி சேனநாயக்கா, சேர் ஜோன் கொத்தலாவெல, எஸ்.டபிள்யு. ஆர்.டி.பண்டாரநாயக்கா, தயநாயக்கா, சி.பி.டி.சில்வா, சிறிமாவோ பண்டார நாயக்கா, ஜே.ஆர்.ஜெயவர்த்தனா, பிரேமதாசா, சந்திரிக்கா, ரணில் விக்கிரமசிங்க போன்றோர் சிங்களத் தலைமைப்பீடத்தை ஏற்றுள்ளனர். காலத்திற்குக் காலம் சிங்களக் கட்சிகள் மாறின. தலைமைப்பீடம் மாறியது. வேறு சொற்களில் விளம்பின் ஆளும் கட்சிகள் மாறியபோதும், ஆளும் தலைவர்கள் மாறியபோதும் ஆளும் இனமாக சிங்கள இனமும், ஆளப்படும் இனமாகத் தமிழினமும் தொடர்ந்து இருக்கின்ற வரையில் நோய் தொடர்வதை நாம் காணக்கூடியதாக இருக்கின்றது. எனவே தான் வள்ளுவன் கூற்றின்படி "நோய்நாடி நோய் முதல் நாடி, அது தணிக்கும் வாய் நாடி வாய்ப்பச் செயல்" என்பதற்கமைய நோயின் மூலகாரணமாக விளங்குவது ஆளும் இனமாகச் சிங்கள இனமும் ஆளப்படும் இனமாகத் தமிழினமும் இருப்பதுவே. எனவே, நோயின் மூல காரணத்தை அறிந்த நம் சிந்தனைச் சிற்பி சி.கதிரவேற்பிள்ளை கூறியதற்கமைய "தமிழன் வாழ வேண்டின் தமிழன் தன்னை ஆள வேண்டும்" என்னும் தலையாய மறைமொழியைத் தாரக மந்திரத்தை ஏற்றி தமிழனை வாழ்விக்க முயல்வோமாக.

### முதற்கோணல் முற்றும் கோணல்

1948இல் ஆட்சிக்கு வந்த ஐக்கிய தேசியக் கட்சி முதல் "கோணல் முற்றுங் கோணல்" என்பதற்கமைய தமிழனின் கொடியுரிமையைப் பறித்ததோடு. இந்திய வம்சாவழித்தமிழின மக்களின் குடியுரிமையையும் வாக்குரிமையையும் பறித்து அவர்களை இரவோடு இரவாக அரசியல் அனாதைகளாக்கியது. அத் தோடு நிறைவடையாது, ஈழத்தமிழ் மக்களின் மரபுவழித் தாயகத்தையும், அரசின் ஆதரவோடு, திட்டமிட்டுப் பறிக்க வித்திட்டவர் திரு.டி.எஸ்.சேனநாயக்கா என்பதை நடுநிலை வரலாற்று ஆசிரியர்கள் நவின்று சென்றுள்ளனர். "Land is not only necessary for the self expression - of an ethnic group, but also for its physical security" (நிலம் என்பது ஒரு இனம் தன்னைத் தானே உணர்த்துவதற்கு மட்டுமல்ல. தன் உயிர் உடலோடு ஒட்டி வாழ்வதற்கு மிக இன்றியமையாதது) நாம் எதனையும் இழக்கலாம். மீண்டும் வாழ்வு பெறலாம். ஆனால் ஒரு இனம் தன் மண்ணைத் தன் தாயகத்தை இழந்து விட்டால், வேரறுந்த சமுதாயமாக மாறிவிடும். இன்றைய ஈழத் தமிழனின் நிலை அதுதான். நாளைய சிங்கள



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அரசுகள் மொழி உட்பட அனைத்து உரிமைகளையும் தருவதாக நாம் கற்பனை செய்தாலும், எமது நில உரிமையை அவர்கள் தரமறுப்பின், விவிலியத்தில் கூறியதற்கமைய எம் ஆன்மாவை இழந்து உலகைப் பெற்று என்ன பயன்? விவிலியத்தின் ஆங்கில ஆக்கத்தில் "What is the use of gaining the world and losing the soul" என்று விவிலியம் வலியுறுத்தி உள்ள கூற்று எம்மை ஆழ்ந்து சிந்திக்க வைக்கின்றது.

விவிலியத்தின் ஆங்கில ஆக்கத்தில் "What is the use of gaining the world and losing the soul" என்று விவிலியம் வலியுறுத்தி உள்ள கூற்று எம்மை ஆழ்ந்து சிந்திக்க வைக்கின்றது.

**24 மணி நேரத்தில் சிங்களம் என முழங்கிய பண்டாரநாயக்காவின் ஆட்சி**

ஐக்கிய தேசியக் கட்சி வீழ்ந்ததை அடுத்து 1956இல் எஸ்.டபிள்யு. ஆர்,டி.பண்டார நாயக்கா 24 மணிநேரத்தில் தனியே சிங்களத்தை ஆட்சிமொழி ஆக்குவேன் என்று வெறி கொண்ட உணர்வோடு கொக்கரித்த நிலையில் ஆட்சிப்பீடம் ஏறினார். ஆட்சிப்பீடம் ஏறிய அவர் 1956யூன் மாதம் 5ம் நாள் சிங்கள மட்டும் சட்டத்தை ஆட்சி மொழியாக்கத் தீர்மானம் கொண்டு வந்தார். இதுவே, ஈழத் தமிழர் வரலாற்றில் ஒரு திருப்பு முனையாக அமைந்தது. ஆட்டைக் கடித்து, மாட்டைக் கடித்து, மனிதனைக் கடிக்குமாம் வெறிநாய் என்பதற்கமைய தமிழனின் கொடியுரிமை, குடியுரிமை, வாக்குரிமை, நிலவுரிமையை அடுத் தடுத்துப் பறித்த சிங்கள அரசு எம் மொழியிலும் கைவைத்தது. மொழி என்பது எம் விழி மட்டும் அல்ல. அது எம் இனத்தின் உயிராய் அமைகிறது. மொழியழிகையில் இனமும் அழிக்கப் படும். அதன் தனித்துவம் சீர்குலைக் கப்படும். காலப்போக்கில், தணிக்கப்பட்ட மொழிக்கு அடிமையாகி, அம்மொழி பேசுகின்ற இனத்தோடு இரண்டறக் கலக்கின்ற ஆபத்து ஏற்படும். இவற்றை யெல்லாம் நன்குணர்ந்து ஆங்கில அரசியல் ஆய்வாளர்கள் 'language is the soul of the nation. If it is destroyed the nation is dead" (ஒரு தேசிய இனத்தின் உயிராக விளங்குவது மொழி. அந்த மொழி அழிக்கப்படும் பொழுது அந்தத் தேசிய இனமும் அழிந்தே தீரும்) 'If you want to destroy a nation first destroy it's language" (ஒரு தேசிய இனத்தைஅழிக்க விரும்பின் முதலில் அவ்வினத்தின் மொழியை அழி) எனும் கூற்றுக்கள் பொருள் பொதிந்தவையாகும். இதனைத் தான் நம் பாவேந்தன் பாரதிதாசன் தனக்கே உரிய உணர்ச்சி நிலையில் தமிழ் அழிக்கப்படும்பொழுது தமிழர் அழிந்தே தீருவர் என்பதை தம் உணர்ச்சியின் உச்சநிலையிலிருந்து பின் வருமாறு பாடிச்சென்றுள்ளார். "தமிழுக்கு அமுதென்று பெயர். அந்தத் தமிழ் இன்பம் தமிழ் எங்கள் உயிருக்கு மேல்", குழந்தைகள் மழலைப் பேச்சும், பெண்கள் கொஞ்சிடும் இதழின் வாய்ப்பும், விழை குவனேனும், மெய்யாய்த் தமிழும் நானும் உடல் உயிர் கண்டீர்" என்ற அவர் பாடல் வரிகள் "தமிழ் எம் இனத்தின் உயிர்" என்பதை ஆணித்தரமாக அறைந்து செல் கின்றது. சிங்களமே தனி ஆட்சி மொழி யாக இருக்க வேண்டுமென்று 1940களில் முழங்கியவர் திரு.ஜே.ஆர்.ஜெயவர்த்தனா. ஆனால் தமிழும் சிங்களத்தோடு ஆட்சி மொழியாக இருக்க வேண்டுமென்று பண்புடமையின் திருவுரு வமாக அன்று விளங்கிய பண்டாரநாயக்கா 1956 இல் வெறி கொண்ட சிங்களவனாக மாறி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிங்களம் மட்டுமே ஆட்சிமொழி என்று வெறியாட்டம் ஆடியது வேதனைக்குரிய நிகழ்ச்சியாகும்.

**சிங்களத்தை எதிர்த்த தமிழனின் அறப்போர்**

இத்தனிச் சிங்களச் சட்டத்தை நாடாளுமன்றத்தில் யூன் 5ம் திகதி கொண்டு வரப்பட்டபோது காந்தியத்தில் தோய்ந்த நம் தந்தை செல்வா அவர்கள் தலைமையில்

***'கத்தியின்றி இரத்தமின்றி யுத்தமொன்று வருகுது***

***சத்தியத்தின் நித்தியத்தில் நம்பும் யாரும் சேருவீர்'***

என்று நாமக்கல் கவிஞர் இராமலிங்கம்பிள்ளை பாடிய பாடலைப் பாடி, அறப்போரில் ஈடுபட்ட தலைவர்கள் மீதும், தொண்டர்கள் மீதும் சிங்கள வெறியர்கள் தாக்கிய தாக்கல் "வேரா ஏரியில் தூக்கியெறிந்த நிகழ்ச்சிகளை நாம் எளிதில் மறக்க முடியாது. தலைவர் கு.வன்னியசிங்கம், டாக்டர்.இ.எம்.வி.நாகநாதன், அமிர்தலிங்கம் ஆகியோர் காயப்படுத் தப்பட்ட நிகழ்ச்சி யையும் அவர்களை பண்டாரநாயக்கா எள்ளிநகையாடி யதையும் நாம் எளிதில் மறக்க முடியாது. தமிழால் உலகாண்ட தனிநாயக அடிகளாரும் இவ்வறப் போராட்டத்தில் பங்குகொண்டு உலகின் கவனத்தை குறிப்பாகக் கத்தோலிக்க உலகத்தின் கவனத்தை ஈர்க்கச் செய்த பெருமை அடிகளாரையே சாரும்.

**டாக்டர் என்.எம்.பெரேரா இடித்துரைத்த உண்மை**

தனிச்சிங்களச் சட்டம் 1956இல் நிறைவேற்றப்பட்ட போது முனைவர் (டாக்டர்) என்.எம்.பெரேரா அவர்கள் தமிழ் மக்கள் தொடர்ச்சியாக ஏமாற்றப் பட்டுள்ளனர் என்பதை உள்ளம் உருகப் பின்வருமாறு கூறுகிறார்.

"In point of fact if you go back to the history of this country you will find that the minorities have been betrayed at every possible turn. From the time of Mr.D.S.Senanayake when the Donoghmore constitution came up the monorities particularly the Indian community were given certain promises which were broken. Then again when the Soulbury constitution too came up similar concession which were promised were broken right along. In the Indian immigrants and emigrants bills various promises were made over and over again with regard to the treatment to be given to the Indians. Every one of these promises were broken in the implementation of the bill. In the light of that are we surprised that the minorities are gibbling at the acceptance of these assurance?" (Hansard Language Debate 1956) (இலங்கையில் ஒவ்வொரு திருப்பத்திலும் சிறுபான்மையோர், பெரும்பான்மைத் தலைவர்களால் துரோகம் இழைக்கப்பட்ட வர்களாகவே காணப்படுகின்றனர். டொனமூர் அரசியற் திட்டம் வெளிவந்த திரு.டி.எஸ். சேனநாயக்கா காலம் தொட்டு குறிப்பாக இந்திய வம்சாவழியினருக்குச் சில வாக்குறுதிகள் அளிக்கப்பட்டு காலப் போக்கில் அவை காற்றோடு கலந்து பறக்கவிடப்பட்டன. மீண்டும் சோல்பரி அரசியல் உருவாகிய காலத்தில் அவர்களுக்குக் கொடுக்கப்பட்ட வாக்கு றுதிகள் இறுதியில் முறியடிக்கப்பட்டன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்திய குடியேற்றச் சட்டத்திலும் மீண்டும் மீண்டும் எத்தனையோ உறுதிமொழிகள் அளிக்கப்பட்டு நடைமுறையில் அனைத்தும் அவருக்கெதிராகவே நடைமுறைப் படுத்தப் பட்டுள்ளன. இந்நிலையில் சிறுபான்மை மக்கள் எங்கள் உறுதி மொழியை இட்டு எள்ளிநகையாடுவது வியப்புக்குரியதாகுமா? (நாடாளுமன்றப் பதிவேடு, சிங்கள மட்டும் சட்டம் விவாதம் 1956).

**திருமலை மாநாடு**

1956இல் தனிச்சிங்களச் சட்டம் நிறைவேற்றப்பட்டதை அடுத்து தமிழரசுக் கட்சியின் தலைமையில் வரலாறு காணாத அளவு திருமலை யாத்திரை நிகழ்ச்சி திருமலை மாநாட்டில் வரலாற்றில் இடம்பெறும் தமிழரின் தனித்துவம் பேணும் குறிப்பாகத் தமிழரின் தாயகம் காத்தல் - இணைப்பாட்சியில் இனிய வாழ்வு காணல் போன்ற தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டு தமிழர் வாழ்வில் ஒரு திருப்புமுனை ஏற்பட்டதும் நாம் நினைவில் கொள்ள வேண்டிய நிகழ்ச்சியாகும். தமிழரசுக் கட்சியின் மூளை என்று வர்ணிக்கப்பட்ட திரு.வ.நவரத்தினம் இம்மாநாடு வெற்றிபெற ஆற்றிய பணி அழியாப் புகழ் வாய்ந்த பணியாகும்.

**பண்டா - செல்வா ஒப்பந்தம் கிழித்தெறியப் படுகிறது, 1958இல் இனப்படுகொலை நிகழ்கிறது**

இம்மாநாட்டில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்களை நிறைவேற்றாது பண்டாரநாயக்காவின் ஆட்சி தட்டிக் கழித்தபோது தமிழ் மக்கள் போர்க் கோலம் பூண்டனர். இந்நிலையைத் தவிர்க்க பண்டா - செல்வாவுடன் 1957இல் ஒரு ஒப்பந்தம் செய்ய முன்வந்தார். பண்டா-செல்வா ஒப்பந்தம் ஓரளவு தமிழனுக்கு மாநில சுயாட்சி வழங்க வந்த உலகறிந்த ஒப்பந்தம். எனவே அதனின் உள்ளடக்க விரிவினை இங்கு கூறத் தேவையில்லை. எனினும் சிங்கள, பௌத்த வெறியாட்டத்திற்கு அடிபணிந்த பண்டாரநாயக்கா இவ்வொப்பந்தத்தை கிழித்தெறிந்ததும் இதை அடுத்து சிங்கள சிறி எதிர்ப்புப் போராட்டத்தை தமிழர் தொடங்கியதும் வவுனியாவில் நடைபெற்ற தமிழரசு கட்சி மாநாட்டை அடுத்து நாட்டில் இனக்கலவரம் வெடித்ததும் நாம் அறிந்த செய்திகளே. எம் வழித் தோன்றல்கள் படித்து அறிய வேண்டிய வரலாற்றுக் குறிப்புக்களாகும்.

**1958 இனப்படுகொலை**

1956ஐ அடுத்து 1958இல் ஏற்பட்ட தமிழினப் படுகொலை தமிழ்ப் பெண்கள் பாலியல் வல்லுறவுக்கு ஆளாக்கப்பட்ட நிலை துயர் தாங்காது தற்கொலை செய்த நிகழ்ச்சிகள், கோடிக்கணக்கில் தமிழர்களின் உடமைகள் சூறையாடப் பட்டமை போன்ற நிகழ்ச்சிகள் இனிமேல் சிங்கள கொலையாளிகளுடன் தமிழர்கள் கூடிவாழ முடியாது என்ற நிலையை உருவாக்கியது. இக்கொடிய நிகழ்ச்சி யைக் கண்டு பொறாத ஏரிக்கரை செய்தி இதழ் நிறுவனத்தின் மூத்த செய்தி இதழாசிரியராகப் பணியாற்றிய தாசிவித் தாச்சி (Tazivittachi) அவர்கள் "We have come to the parting of our ways" என்று எழுதிய நூல் ஈழத்தமிழரின் எல்லை மீறிய இன்னலை உலகிற்கு ஏற்றமுறை யில் எடுத்துரைத்துள்ளது. வாழ்வகத் தைக்காத்து வண்டமிழை வாழ்வித்த வன்னியசிங்கம் இக்காலகட்டத்தில் ஆற்றிய பணி அளவிடற்கரியது. வேறு சொற்களில் சொல்லின் தியாகத்தின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உச்சிநிலையில் அவர் பணி அமைந்திருந்தது.

### 1961இல் தமிழர் தாயகத்தில் அறப்போர்

சிங்களம் மட்டும் சட்டத்தை தமிழர் தாயகமாம் வடகிழக்கு மாநிலத்தில் 1961இல் திணிக்க முயன்றபோது தமிழர்கள் தந்தை செல்வாவின் தலைமையில் கொதித்து எழுந்து ஏறக்குறைய 60 நாட்கள் நடாத்திய அறவழிப் போராட்டத்தில் தலைவர்களும் தொண்டர்களும் தாக்கப்பட்டு சிறையில் அடைக்கப்பட்ட நிகழ்ச்சி உலகின் கவனத்தை அப்படியே ஆட்கொண்டது. தமிழரசுக் கட்சியின் இரும்பு மனிதன் டாக்டர். இ.எம்.வி.நாகநாதன் காவற் துறையின் குண்டாந்தடியால் தலையிற் தாக்கப்பட்டு செங்குருதி பீறிட்ட நிலையும், குண்டாந்தடி இரண்டு துண்டாக உடைந்த கதையையும் எவரும் மறக்க முடியாது. எம்மை எப்படியும் அடக்கி ஒடுக்குவோம் என்ற சிறிமாவோ அம்மையார் சீறிப்பாய்ந்த போது தமக்கே உரிய புன்னகையை வருவித்த தந்தை செல்வா அவர்கள் "We are helpless like the late Bandaranayake aganist assasinal is own residenc" (தன் வதிவிடத்திலேயே தன்னைக் காப்பாற்ற முடியாது கொலை யாளிக்கு எப்படி பண்டாரநாயக்கா பலியானாரோ, நாமும் நீங்கள் தாக்குதல் நடத்துகின்றபோது செயலற்ற நிலைக்கு ஆளாகியுள்ளோம் என்ற உள்ளம் தொடும் முறையில் நொந்த உள்ளத்தோடு செல்வா கூறிய சொற்கள் வரலாற்றில் இடம்பெறும் சொற்களாகும்).

### 1965 டட்லி சேனநாயக்காவின் ஆட்சி அமைகிறது, மாவட்ட சபை வழங்கப் படுமென வாக்குறுதி அளிக்கப்படுகின்றது.

இதனை அடுத்து 1965இல் டட்லி சேனநாயக்காவின் ஆட்சி அமைகிறது. மாவட்டசபை தமிழருக்கு வழங்கப் படுமென அவர் உறுதி அளித்ததன் அடிப்படையில் டட்லி செல்வா ஒப்பந்தம் உருவாகியது. இவ்வொப்பந்தமும் வழமை போல் மூன்றாண்டுகள் உருண்டோடிய நிலையில் தூக்கி எறியப்படுகிறது. எனினும், டட்லி ஆட்சிக்கு வந்த காலகட்டத்தில் Tamil Language Special Provisions Act (தமிழ்ச் சிறப்புச் சட்ட ஏற்பாட்டின் கீழ்) ஒழுங்கு விதிகள் (Regulations) நிறைவேற்றப் பட்டபோது டட்லியின் வயிற்றில் தமிழனின் தோசையும் வடையும் நிறைந்துள்ளது. ஆகவே தான் சிங்கள மக்களை தமிழருக் குத்தாரை வார்த்துக் கொடுத்துள்ளார் என்று டாக்டர் என்.எம்.பெரேராவின் தலைமையில் இடதுசாரி இயக்கத்தினர் கொக்கரித்து பேரணி நடாத்தி, கல வரத்தில் ஈடுபட்டதை நாம் மறப்பதற் கில்லை. இச்சூழ்நிலையிற் தான் இரட்டை முனைவர் (டாக்டர்) பட்டம் பெற்ற என்.எம்.பெரேரா அரசியலிற் குத்துக்கரணம் அடித்து தமிழர்களைக் கைவிட்டபோது "Double Doctrate with double toungue treachery" (இரட்டை டாக்டர் பட்டம் பெற்று இரட்டை நாக்குடன் பேசும் துரோகி) என்று சுந்தரலிங்கம் அவர்களால் டாக்டர் என்.எம்.பெரேரா வர்ணிக்கப்பட்டதையும் நாம் மறப்பதற் கில்லை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தமிழ்மொழியின் சிறப்பு ஏற்பாட்டு விதியில் உயிர் இருக்கவில்லை. அதற்கு ஓரளவு உயிர் கொடுக்க முனைந்த முயற்சியே தமிழ் ஒழுங்கு விதிகளாகும். இதைக்கூட எதிர்த்தே மார்க்ஷிய சிங்கள வாதிகள் வெறியாட்டம் ஆடியதை நாம் எப்படி மறக்க முடியும்,?

**1971இல் ஜே.வி.பி.தலைதூக்கல்**

1971இல் சிங்கள மக்கள் விடுதலை இயக்கம் (J.V.P) கிளர்ந்து எழ இந்திய கூர்க்காக்களின் உதவியுடன் சிறிமாவோ பண்டாரநாயக்கா பல்லாயிரக் கணக்கான சிங்கள இளைஞர்களைச் சாகடித்து வெறியாட்டம் ஆடியதையும் நாம் மறப்பதற் கில்லை.

**1972இல் சிறிமாவோ ஆட்சியின் குடியரசுப் பிரகடனம்**

1972இல் ஆட்சிக்குவந்த சிறிமாவோ பண்டாரநாயக்கா பிரித்தானியாவுடன் நமக்கு இருக்கும் தொடர்பை முற்றாகத் துண்டித்து, இலங்கைக்கு சிறிலங்கா என்ற பெயர் சூட்டி குடியரசாக பிரகடனம் செய்ய இருப்பதாக அறிவித்தார். இக்குடியரசு யாப்பை உருவாக்கும் பொறுப்பு முனைவர் (டாக்டர்) கொல்வின் ஆர்.டி.சில்வாவிடம் ஒப்படைக்கப் பட்டது. **அவர் தமிழருக்குச் செய்த மிகப்பெரிய தொண்டு சோல்பரி யாப்பில் தமிழருக்கு இருந்த சிறுசிறு சலுகைகளையும் இல்லாது செய்ததேயாகும்.** குறிப்பாக மாற்ற முடியாத பிரிவு (Entrenched Clause) என்று இருந்த 29ம் பிரிவை முற்றாக நீக்கி சிங்களவர்களிடம் தமிழருக்கிருந்த சிறு நம்பிக்கையையும் சின்னாபின்னப்படுத்திய தேயாகும். “If it is two languages, it is one nation. If it is one language it will be two nations” (இரு மொழிகள் எனின் ஒரு நாடு ஒரு மொழியெனின் இரு நாடு அமையும்) என்று தனிச் சிங்களச் சட்டம் 1956இல் நிறைவேறியபோது ஆவது அறிதல் (தீர்க்கதரிசனம்) நோக்கோடு பேசிய கொல்வின் ஆர்.டி.சில்வாவை ஏதோ ஒரு விதத்தில் தமிழர்களின் அரசியல் வேட்கைகளை நிறைவேற்றத் துணை புரியும் படி முன்னாள் மேலவை உறுப்பினர் (செனட்டர்) திரு.நடேசன் அவரை நேரில் கண்டு பேசியபோது "Politics is the art of the possible" (இயலத் தக்கதைச் செய்வதே அரசியற் கலையாகும்” என்று கூறி தமிழருக்கு இருந்த சிறு நம்பிக்கையையும் சிதறடித்தவர் மார்க்ஷியவாதி கொல்வின் ஆர்.டி.சில்வா என்பதை நாம் என்றும் மறவாதிருத்தல் நலம். சுருங்கக் கூறி விளங்க வைக்கின் 1972 வரை தமிழன் வரலாறு இதுவேயாகும். இதிலிருந்தும் பாடம் படிக்கத் தமிழன் தவறின் அது அவனின் தலைவிதி என்று கூறி அமைதி காண்போமாக. இக்காலகட்டத்தில் தான் கவிஞர் காசி ஆனந்தன், மாவை சேனாதிராஜா, வண்ணை ஆனந்தன் ஆகியோர் நீண்ட சிறைவாசத்திற்கு ஆளாகி, துன்பம் பல உற்றனர் என்பதையும் நாம் நினைவு கொள்வோமாக.

**1974இல் நடைபெற்ற அனைத்துலகத் தமிழாராய்ச்சி மாநாடு**

1974இல் எதுவித அரசியற் கலப்புமற்று, நான்காவது அனைத்துலகத் தமிழாராய்ச்சி மாநாடு யாழ்ப்பாணத்தில் நடைபெற்றபோது, தமிழ்மக்களின் இயல்பான தமிழ் உணர்ச்சியைக் கண்டு, பொறுக்க முடியாத சிறிமாவோவின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிங்கள அரசு காவற்துறையினரை ஏவி ஒன்பது தமிழ் உயிர்களைப் பழி வாங்கியது மன்னிக்க முடியாத மானிடக் கொலையாகும். ஒரு பண்பாட்டு நிகழ்ச்சியிலேயே இத்தகைய பாதகக் கொலை நிகழமுடியும் என்றால் இனிமேல் கொலையாளிகளாகிய சிங்கள மக்களுடன் கூடிவாழ முடியாது என்று தமிழ் இளைஞர்கள் கிளர்ந்து எழுந்தனர். இதில் மாவீரன் சிவகுமாரின் தோற்றம் காவற்துறையினரிடம் தன்னை மாட்டிக் கொள்ள மறுத்து தற்கொலை செய்த நிகழ்ச்சி தமிழர்களிடையே மிகப்பெரும் கிளர்ச்சியை ஏற்படுத்தியது. தம் **உறவினர்** சாவிற்கே படலை தாண்டிச் செல்லாத யாழ்ப்பாணத் தமிழ்ப் பெண்கள் சிவகுமார் செத்தபோது சுடுகாட்டிற்கே நேரிற் சென்று கண்ணீர் விட்டுக் கதறிய வரலாறு தமிழன் வரலாற்றை மாற்றிய வரலாறாகும்.

**வட்டுக்கோட்டையில் எடுக்கப்பட்ட விட்டுக்கொடுக்க முடியாத தீர்மானம்.**

தாங்க முடியாத நெருக்கடிகளை தமிழன் எதிர்நோக்கியபோது இனிமேல் நாம் ஒன்றுபட்டே ஆகவேண்டும் என்ற தூண்டுதலால் உந்தப்பட்ட தமிழ்த் தலைவர்கள்தம் கட்சி வேறுபாடுகளைக் களைந்து, தமிழரசுக் கட்சியும் தமிழ்க் காங்கிரஸும், தொண்டமான் தலைமையில் இயங்கிய இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸும், மற்றும் சில கட்சிகளும் ஒன்றுபட்டு தமிழர் விடுதலைக் கூட்டணியை அமைத்து வட்டுக்கோட்டையில் விட்டுக் கொடுக்காது எடுத்த தீர்மானம் தான் இழந்த எம் உரிமையை நிலைநாட்ட எமக்குள்ள ஒரே வழி - ஒரே குறிக்கோள் - ஒரே இலட்சியம் தமிழீழத்தை அடைவதே என்ற முடிவுக்குத் தமிழர் வந்தனர்.

வட்டுக்கோட்டையில் தமிழீழத்தை அடைவது என்று எடுத்த தீர்மானம் சிறிமாவோவை கதிகலக்கச்செய்தது. பாகிஸ்தான் அடைய 1942இல் லாகூரில் ஜின்னா எடுத்த தீர்மானத்தை ஒத்ததாய் இது விளங்கியது. ஆத்திரத்திற்கு ஆளாகிய சிறிமாவோ அரசு தமிழ்த் தலைவர்களை நாட்டிற்குத் துரோகம் செய்தவர்கள் என்ற பெயரில் நடுவரற்ற நீதிமன்றத்தில் (Trial at Bar) முன் நிறுத்தியது. தமிழர்கள் சார்பில் 65 வழக்கறிஞர்கள் வாதிட்டனர். 3 நீதிபதிகள் தலைமை தாங்கினர். இந்நீதிமன்றத்தில் வழக்கறிஞர் திரு.முருகேசு திருச்செல்வம் அர்கள் அரச வழக்கறிஞர் (Q.C) அவர்கள் "The Sinhalese never conquered us, nor did we give our consent, nor there was a continutiy of the Sinhala rule. Therefore what we ask is not separation. The word separation is a misnomer. What we had, what we lost, we want to regain, therefore what we really ask is restoration or reconstitution" (சிங்களவர்கள் எம்மை என்றும கைப்பற்றியதில்லை. நாம் அதற்கு இசைவு கொடுத்ததுமில்லை. தொடர்ந்து அவர்கள் எம்மை ஆண்டதாகவும் வரலாற்றில் நிகழ்ச்சிகள் இல்லை. ஆகவே, நாம் கேட்பது பிரிவினை அல்ல. பிரிவினை என்ற சொல் தப்பாகக் கையாளப்படும் ஒரு சொல்லாட்சி. இருந்ததை இழந்ததை மீண்டும் பெறுவதற்காகவே தான் எமது போராட்டம் அமைகிறது. இதை மீள அமைத்தல் அல்லது மீள உருவாக்கல் என்று கூறலாம்) என்று திருச்செல்வம் முழங்கிய முழக்கம் எம் வரலாற்றில் ஏற்பட்ட திருப்புமுனையாகும். இதனையடுத்து தமிழ்த் தலைவர்கள் திரு.ஜி.ஜி.பொன்னம்பலம், திரு.முருகேசு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருச்செல்வம், தந்தை செல்வா ஆகியோர் அடுத்தடுத்து மறைந்தனர். மாதங்கள் சில உருண்டோட 1977 இல் தமிழர்களின் எதிர்காலத்தை நிர்ணயிக்கும் தேர்தல் நடைபெற்றது. தேர்தல் என்ற சொல் பொது வழக்கில் கையாளப்பட்டாலும் மக்களின் கணிப்பு (Referendum) என்ற சொல்லாட்சி ஏற்புடையதாகுமே. இதில் மக்கள் அளித்த தீர்ப்பு தமிழீழம் என்ற முடிவு எமது முடிந்த முடிவே என்பதாகும்.

## M.K.Eelaventhan on Aspirations of the Eelam Tamils

There should be a sincere approach to the problem. Intellectual and Academic exercises should be side lined. The two ethnic groups sincerely wish that their, language, culture and way of life should remain intact. I speak here not as an academic but as one who can claim a vast experience, in the agitation for out to achieve the aspirations from the Tamil side. We must refrain from self-deception.

Sir Ponnampalam Ramanathan and Sir Ponnamplam Arunachalam were disheartened and disappointed in the later part of their careers. I do not want to go into history. What are the factors that compelled Arunachalam who formed the Ceylon National Congress to break away from it and form the Tamil League? What factors drove Sir P.Ramanathan to oppose the Donoghmore reforms. He said Donoghmore means "Tamils on more". We are handing over power to the vulgar mobs and if we accept these reforms, without due safeguard for the Tamils. It would be the death knell to the Tamils. We now experience his prophecy. Mr.G.G.Ponnampalam said that Soulbury has come to bury the souls of the Tamils. A unitary constitution in a multinational state will never find the solution to the problem. The question of majority and minority does not arise at all. It will only worsen the situation. Tamils demand the right to self-determination. They want the recognition of their homeland. They are prepared to give up their demand for Eelam if there is going to be a meaningful Federal



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

structure. What I mean by a Federal structure is that the powers are clearly defined and the question of the Central Government ever dissolving the states should be totally ruled out. The powers of Foreign affairs and Defence may be left with the Central Government. The rest of the powers must be allocated to the autonomous states. Federalism is not division or disintegration, it is only a device for the distribution of powers, preserving the essential unity of the country and allowing a free play for ethnic groups to establish their identity.

Unity does not mean "Unitary" and Federalism does not mean division let us be clear about it. It was not Chelvanayagam but the late lamented Bandaranayake who made it very, very, clear that for thousands of years the Kandyan Singhalese, the Low country Singhalese and the Tamils lived in clearly demarcated areas of their own, preserving their language and their culture intact. It is only a rash man who will envisage the merger of these two communities. This is what I would like to say beyond doubt. I finally conclude by saying whether we like it or not India has to play a part and Tamil Nadu being inseparably linked to it, India cannot make a decision that is opposed to Tamil Nadu interess.

In conclusion, I would like to say that I love the Singhalese more than anybody else does; does but the constitution is our enemy number one. A unitary constitution will result in counting of heads that will eventually lead to the cracking of heads. We have learned bitter lessons and let us realise that Federalism is the ideal solutaion to live as equal partners and co-exist without confrontation.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# Language and Power
# The Role of English in Sri Lanka

**"......... Once Britannia ruled the waves, now it is English Which rules them. The British Empire has given way to the Empire of English"**

If we look at the spread of English historically, in order to ascertain whether the language has been actively promoted as an instrument of the foreign policy of the major English speaking states, and if so, in what ways, the fact remains as far as the third world countries are concerned; we have a colonial legacy where these countries were left with no option. They had to fall in line with the declared official policy of the colonial masters. The English language has been associated with the British rule in Sri Lanka, then known as Ceylon. Sri Lanka has been subjected to foreign powers even before the Britishers invaded Sri Lanka in 1796. (namely the Portuguese and the Dutch)

During British rule in Sri Lanka, English was used as the official language of the colonial masters. English was used in all domains such as, family, religion, education and employment. As a



**S.G.Sivagurunathan,**
**Head,**
**English language teaching centre,**
**University of Jaffna.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

declared policy of the British government even a village headman was *not appointed without* a proper knowledge of English. English was the dominant language of the British administration. Since English was associated with the rulers, it enjoyed official status. Whoever aspired to become a government servant had to learn the language. During British rule, English learning was an incentive for a government job. So the people of Jaffna, in order to get a government job started learning English, for not only did it give them the job but they also had social prestige. During the British regime a good number of English educated Jaffna Tamils were employed in other British colonies like Malaysia, Singapore and Burma. Mostly they were in the Malaysian railways as station masters, clerks and storekeepers.

The foreign employment opportunities gave the Tamils of Sri Lanka a sense of job security as government jobs gave them the benefit of pension rights. During the British rule in Sri Lanka, on an ethnic proportion more number of Tamils were in government jobs as they were more proficient in English. More English schools were established in the North, more Christian missionaries were involved in opening schools. Especially, the contribution of the American Missionaries in the North cannot be underestimated. They opened more schools in the North. The Britishers had political ambitions in Sri

Lanka whereas the American Missionaries gave better English education though they were interested in propagation of Christianity.

Prof. K. Sivathamby has very rightly summed up the situation of Jaffna as the Tamils were ready to accept "English education minus the Bible". We are aware that Language and Religion are two very sensitive issues in any culture and society. Yasmine Goonaratna states that the Jaffna was very sensible in adopting what is worth adopting, unlike the people in the South.

English was a symbol of power during the British regime. The situation continued even after independence. It was in 1956when the Sinhala only act came into force, that gradually in the administrative and educational spheres that swabasha started dominating. The medium of education started changing and the first batch of Tamil and Sinhala medium students entered the University of Ceylon in 1960.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

This marked the change in the medium of education. There was bilingual media for professional courses like, medicine, engineering, law and science and the other courses like arts, humanities, commerce had their courses in the Tamil and Sinhala medium.

Now after 45 years (starting from 1956 with the Sinhala only act) the world order has changed, the ground reality in our politics has changed, whereas the changes in the medium of education at the tertiary level have led us nowhere. Our youths with their Tamil and Sinhala medium degrees are unable to find suitable jobs. As the country is moving towards privatization and the job market lies in the hands of multinationals, the result is that there is an indirect compulsion to learn English.

There is a wrong notion among people that now people don't use English and the standard has gone down. But the fact remains that more people use English now than ever before. Earlier during British rule only the professionals. Like administrators, doctors, engineers, lawyers and teachers knew English but now people at lower level also use English. To quote from David Crystal, out of the world's population one third speak English and out of this number only fifth is the native speakers of English (whose mother tongue is English) the rest more than four fifth, are second language speakers. This figure clearly states that more people speak English than ever before. The number is steadily increasing every year. This is due to expansion of communication, information technology, developments in science and technology.

On the functions of English in Sri Lanka Prof. Thiru Kandiah says that it functioned as a major instrument of the jealously guarded at these higher levels. No doubt, there was an immediate practical reason for this : the bilingual elite who manned these higher level positions had always carried on their activities there in English, and they found that they could nor perform at all effectively at these levels but in that language. The main factors was, however power. It was the English language that had raised these people to the position of power, and it was the English Language that, by separating them as a social class from the rest of the people of the country, ensured that they would remain in these positions to the exclusion of the latter. The point is that



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

since English functioned as something very different from a utilitarian secondary language at these levels as, in fact, a badge of privilege, the ordinary people, to whom English could at best be nothing more than just a utilitarian secondary language found themselves, ipsofacto, shut out of these levels, and for the same reason, only the social class to whom English was more then simply a utilitarian second language but something of a social accomplishment too had access to those levels. This ensured, incidentally, that it would be they who would provide, in a self-perpetuating manner, the personnel to fill the position at these levels.

Though the official language act of 1956 did replace English with Sinhala and Tamil and were used in more and more in government offices, public places, communication, education, entertainment, and social activities and so on English did not lose considerable ground to these languages.

Prof. Thiru Kandiah says that English continued to be the dominant language at the higher levels in many of the most important spheres of society. The de Lanerolle committee, which investigated the teaching of English in the island around 1972, reported that a knowledge of English was considered to be necessary for effective action, at least at the higher levels, in several important spheres of society, such as commerce and industry, banking, transport, the postal services, medicine, science and technology, law, broadcasting, international transport and communication and in a considerable number of fields in tertiary education.

This situation is quite understandable as Sri Lanka was struggling to recover from the disastrous effects of four and a half centuries of foreign rule and to build itself into a truly strong and independent modern nation that could take its place on a footing has, it seemed to be entirely right that it should be given a place of significance, particularly in those areas in which it would facilitate the realization of the aspirations of the nation.

In the seventies, the colloquial Sinhala word Kaduva which means 'sword" got into usage to refer to the English language and Kadu panti was used to refer to "English classes". Thiru Kandiah says that this term Kaduva crystallizes the socio - political. psychological attitudes of the underdog



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

to all this, of the man who has no chance of beating the English-dominated system and of rising by means of the language to the position that, in the kind of society he finds himself in, will help him realize himself and preserve his self-esteem. To him, the English language is only too evidently a sword, the symbol of power. But this is not all; there is a further dimension to this awareness. The sword he knows, if grasped firmly in his own hands, will endow him with the power to be truly free, to be himself and to live with dignity on terms of equality with other men, in someone else's hands, it remains the instrument of his oppression, the means of his subjugation.

The term Kaduva emerged out of frustration of rural students learning English and how they struggled to cope with their language needs. Mervyn de Silva's interpretation of the relationship between the social revolution of 1956 and the insurgency of 1971 throws crucial light on this point : the martyrs of 1971 were indeed the children of 1956; and it is to these children that English first became the Kaduva, just as it has remained the Kaduva to those of their background who continue to share their expectations.

There was a turn events in 1977 when there was a change of regime and the new rules to reverse the processes, to undo the change which were introduced two decades before. These change paved the way for the reintroduction of English in tertiary education. This was necessitated in order to cater to the job market as the economy of the country had started being dominated by the multinationals.

In 1980, the universities started thinking of introducing English medium education, giving prominence to English language education - with the changing world economic order, business and trade, the English language started gaining ground.

A government minister from Sri Lanka has suggested that the teaching of English throughout Asia, Africa and the Pacific should be placed on the same level as the World Health organization or UNESCO. We might presumably then see the UN move on from proclaiming 'Education for all" to "English for all". Phillipson says that a large demand has been created for English and for teachers of the language. As the director of the



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

dynamic world circle chain of English language schools puts it; "once we used to send gun boats and diplomats abroad; now we are sending English teachers".

The spread of English has become a world wide phenomenon and it has become an inevitable force and we, as a small nation cannot resist it, we can only fall in line with the developing trend for our own betterment. The time has come for us to hold weapon in our own hands or else we will be subjected to further oppression - we should understand that Language is Power.

## References


1. David Crystal, 1995
   The Cambridge Encyclopedia of the English language. (C.U.P.)
2. David Crystal, 1997
   English as a global language. (C.U.P.)
3. Robert Phillipson, 2000
   Linguistic Imperialism (O.U.P)
4. Thiru Kandiah. 1984
   Honoring E.F.C.Ludowyk
   Felicitation essays.
5. Sivagurunathan G.S., 1993
   Teaching of English as a second languagein university level in Sri Lanka - A case study.
6. Sivathamby. K. 1979
   English and the Tamil writer - 3 - 1979
7. Yasmine Goonaratna, 1968
   English literature in Ceylon 1815 - 1878
   Tisara Prakasakayo. Sehiwala



### அறங்கள் ௩௨ ஐயும் தெரிந்து கொள்ளுங்கள்

ஆதுலர்க்குச் சாலை, ஓதுவார்க்குணவு, அறுசமயத்தார்க் குண்டி, பசுவுக்கு வாயுறை, சிறைச்சோறு, ஐயம், தீன்பண்டநல்கல், அறவைச் சோறு, மகப்பெறுவித்தல், மகப்பால் வார்த்தல், அறவைப் பிணஞ்சுடுதல், அறவைத் தூரியம், சுண்ணம், நோய்க்கு மருந்து, வண்ணர், நாவிதர், கண்ணாடி, காதோலை, கண்மருந்து, தலைக்கெண்ணெய், பெண்போகம், பிறர்துயர் காத்தல், தண்ணீர்ப்பந்தல், மடம் தடம், சோலை, ஆவுரிஞ்சுதறி, விலங்கிற்குணவு, ஏறுவிடுத்தல், விலை கொடுத்துயிர் காத்தல், கன்னிகாதானம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொது நூலகமும் மக்கள் வாழ்க்கையும்

"வாசிப்பதால் மனிதன் பூரணம் அடைகிறான்" இன்றைய உலகத்தின் பல்கூறு வளர்ச்சிப் பெருக்கத்தை மனதில் இருத்தி நூலகங்கள் என்றால் என்ன? அவை யாவை? அன்றாட மனித வாழ்வியலில் என்ன பங்கு? இவை வைத்திருக்கும் விலை மதிப்பற்ற பொக்கிசங்கள் என்ன? மனித வாழ்வில் எப்பருவங்களில் பயன்களை வழங்கி வழமான வாழ்வுக்கு வழிகாட்டுகிறது. இவ்வாறாக நூலகம் என்று கூறும் காப்பகம் எவ்வாறு தன்னை தயார் பண்ணி நிமிர்ந்து நிற்கிறது? எனவே பல கோணங்களில் நாம் ஆராய்வோம்.



இங்கே நாம் எடுத்துசீர் தூக்கி பார்க்க வேண்டியது பொதுசன நூலகம். இந்நூலகம் மனித வாழ்வில் பிறப்பு முதல் குழந்தை ஜனனம் கணிப்பு, ஜாதகம், நாள்கோள், நட்சத்திரம் வரையிலும் தனது சேவையை வழங்கி தானும் வையகமும் உய்ந்து நிற்கும் தன்மையது.

ஒரு கோணத்தில் வரையறைகளை எடுத்து நோக்குவோம் ஆயின் சேவையை பெற்றுக்கொள்வோர்

01) குழந்தைகள்

02) சிறார்கள்

03) இளைஞர்கள் / இளையவர்கள்

04) மாணவர்கள் பல படிநிலைகளில்

05) உயர்கல்வி தொழிற்கல்வி...

க.சண்முகநாதன்,
நூலகர்,
பிரதேசசபை,
வேலணை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

06) தொழில்புரிவோர் துறையியலில்

07) ஆராச்சியாளர் மனித வளவி யலாளர்...

08) ஓய்வூதியர், முதியோர்....

09) இயலாதோர் இயற்கையில் வாழ்ந்து வாழும்...

10) தண்டனை பெற்று அதனை அனுபவிப்பவர்கள்...

இது போன்ற மனித வாழ்வுப்படி நிலைகள் பலவற்றிலும் "வருக! வளம் பெறுக" எனநின்று சேவை செய்வது பொதுநூலகம் என்று கூறினால் மிகையா காது.

முன்பெல்லாம் இந்துசமயம் முதி யோர் பேதம் கூறியது. "கோயில் இல்லா ஊரில் குடியிருக்க வேண்டாம்" என்று, ஆனால் இப்போது "நூலகம் இல்லா ஊரில் குடியிருத்தல்" ஆகாது என்று நாம் அனுபவரீதியில் காண்கின்றோம். இவ்வா றாக எடுத்துக்கூறும் நூலகங்கள் தனக் கென சில கோட்பாடுகளை வகுத் தது. உதாரணமாக நூலகத்தின் தந்தை எனப் போற்றப்பட்டு வரும் எஸ்.ஆர்.இரங்கநாதன் அவர்களது அனுபவக்கூற்றின் பிரகாரம்

01) "நூல்கள் அனைத்தும் பாவ னைக்கே"

02) "ஒவ்வொரு நூலுக்கும் ஒரு வாசகர்"

03) "ஒவ்வொரு வாசகருக்கும் ஒரு நூல்"

04) "வாசகர் நேரம் பேணுதல்"

05) "நூலகம் வளரும் தன்மை உடையது"

என்ற பஞ்ச சீலக் கொள்கையை தாரக மந்திரமாகக் கொண்டு நூலகங்கள் இயங்க வேண்டும் என்றார். இவ்வாறாக வரையறைகளைக் கொண்ட ஒரு நூலகம் உலகில் பல்வேறு கோணங்களில் சேர்ந்தும் சிதறியும் இருந்த, இருக்கின்ற, வரப்போகின்ற தகவல்களை, செய்தி களை, முடிவுகளை, எதிர்பார்ப்புகளை தாங்கி வெளிவரும் நூலுருவில், நூலுருவில் இல்லாத பிற வடிவில் வெளிவந்த, வெளிவந்து கொண்டிருக்கும், வெளிவரப் போகும் சாதனங்களை தன்னகத்தே சேமித்து நுகர்வோர் வேண்டும் பொழுது தாமதமின்றி வாழவிடுவதே தனக்குரிய சிறப்பம்சம்.

இச்செயற்பாட்டிற்கு பலமுறை ஆராய்ந்து பரீட்சித்து முடிவாக்கி சர்வதேச ரீதியில் ஏற்றுக்கொள்ளக்கூடிய நூலக வைபிள் எனப்படும் (டி.டி.சி என அழைக்கப்படும்) டுயி தசாம்ச பகுப்பாக்க வழிகாட்டியை மெல்வின் டுயி அவர்கள் உருவாக்கி, அவராலேயே அறிமுகமாக் கப்பட்டபின் எல்லோரும் ஏற்று கடைப் பிடிக்கின் றார்கள். இவ்வழிகாட்டி உலகில் வெளியாகும் முழுமையான அறிவாற்றல் தகவல்களையும் பத்துப் பெரும் பிரிவுகளாக்கி அவை அனைத்துள் ளும் பல நுணுக்க உட்பிரிவுகளைக் கொண்ட நெகிழ்ச்சிகளைக் கொண்ட திட்டத் தொகுதியாகும்.

இந்த டி.டி.சி தனது உட்பிரிவுகள், குறிப்பம்சங்களால் சிறப்புப் பெற்று விளங்குகிறது. தனது சிறப்புச் செயற்பாடுகளை அவ்வப்போது மேலும் மேலும் மெருகூட்டி 21 ஆவது பதிப்பாக தற்போது மிளிர்கிறது. பெரும்பிரிவுகள், உபபிரிவுகள் இதற்குள் தசமபிரிவுகள் என உள்நோக்கிய நுணுக்கமான உள் நெகிழ்ச்சிகள் நூலக சேர்க்கையை வலுவாக்குகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவ்வொழுங்கமைப்புக்கு அமைய டி.டி.சி பற்றி சற்று ஆழ்ந்து நோக்கு கையில் உலகில் உள்ள அறிவு சாதனங்கள் அனைத்தையும் பத்துப் பெரும் பிரிவுகளாக பிரித்துள்ளார். அவை வருமாறு.

01. 000 - பொது

02) 100 - தத்துவம்

03) 200 - சமயம்

04) 300 - சமூகவில்

05) 400 - மொழி

06) 500 - தூய விஞ்ஞானம்

07) 600 - தொழில் நுட்பம்

08) 700 - கவின்கலைகள்

09) 800 - இலக்கியம்

10) 900 - வரலாறு, வாழ்க்கைச் சரிதம், புவியியல், பிரயாணக் கட்டுரைகள்.

தொடர்ந்து இப்பிரிவுகள் ஒவ் வொன்றை யும் மேலும் பத்துப்பிரிவாக பிரித்து அதில் வரும் விடயங்களுக்கு நுணுக்கமாக தசமஎண்களை வழங்கி வகுத்துத்தந்துள்ளார். உதாரணமாக தமிழ்மொழிக்கு 494.811 என வழங்கி யுள்ளார். இப்படி உலக அறிவு சானங்களில் குறித்த ஒரு விடயத்தை தேடும் வாசகனுக்கு இலகுவில் அதைப் பெறவழிவகுக்கிறது. அத்துடன் வானொலி, தொலைக்காட்சி, கம்பியூட்டர், இன்றநெற், நிழற்பிரதி என்று எத்த னையோ நவீனதகவல் தொடர்புகளை வகுத்து வழங்குகிறது.

மேலும் நூலகத்துக்கு தேடலுக்காக வரும் ஒரு மாணவன்/ ஏனையோர் தாம் நூலகத்தில் உள்ள ஒவ்வொரு புத்தகத்தையும் இலகுவில் கண்டறிய நாம் பட்டியலாக்கம் செய்து வைக்கிறோம். ஒரு புத்தகத்துக்கு ஆசிரியர் /வகுப்பெண் /தலையங்கம் இப்படி மூன்று தபால் அட்டையளவில் தயாரித்த அட்டையில் தேவையான தகவல்களைப் பதிந்து பேழையில் பார்வைக்கு வைக்கிறோம். இது ஒரு வாசகனுக்கு நூலகம் வழங்கும் சேவையாகும்.

இனி நூலக உட்பிரிவுகளை பார்க்கும் இடத்து

01) உடன் உதவும் பகுதி

02) வாசகர் பகுதி

03) சஞ்சிகைகள் பகுதி

04) சிறுவர் பகுதி

05) இரவல் வழங்கும் பகுதி

06) கேட்போர் கூடம்

07) களஞ்சியப் பகுதி

என வகுத்துள்ளனர்.

## வாசகர் பகுதி

இது ஒரு கட்டுப்பாடு இல்லாது சகலரும் வாசிக்கும் பகுதியாகும். ஒரு பாடசாலை மாணவன் முதல் சமுதா யத்தில் உள்ள சகலரும் வர்க்க பேதம் இன்றி இப்பகுதியை பாவிப்பர். ஏன் எனில் இதன் முக்கிய இடத்தை வகிப்பது பத்திரிகைகளே இங்கு செய்திகள் உட்பட பலவிடயங்களை சொற்ப நேரத்தில் அறிந்து கொள்வர். அக்கறை யுடன் வந்து தேவைகள் நிறைவுற்றதும் சென்றுவிடுவர்.

## சஞ்சிகைகள் பகுதி

இப்பகுதி நூலகத்தில் பத்திரிகை கள் எவ்வளவு முக்கியம் பெறுகிறதோ



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதேபோல் சஞ்சிகைகளும் முக்கியம் பெறுகிறது. சஞ்சிகைகள் எனப்படும் பொழுது ஒரு குறித்த பெயருடன் பல பொது விடயதகவல்களை தன்னகத்தே அடக்கி சமகால இடைவெளியில் ஒழுங்காக வெளிவரும் எழுத்துருவிலான வெளியீடாகும். சஞ்சிகை படிக்க வருவோர் தம் நேரத்தை ஒதுக்கி பொழுதுபோக்காகவும் சினிமா, அறிவியல் துணுக்குகள், பலதரப்பட்டதொடர் கதைகள், சிறுகதைகள் எனப் பொறுமையுடன் இருந்து படிப்பர். நூலகர்கள் புதிய பிரதிகள் வர பழையவற்றைக் கட்டி தொகுத்து வைப்பர்.

## சிறுவர் பகுதி

இப்பகுதியை சிறுவர்கள் மட்டுமே பாவிப்பர். இங்கு கண்கவர் படங்கள் சில விளையாட்டு உபகரணங்கள், சதுரங்கம், கரம், தாயம், படஉருவாக்கம், அம்புலி மாமா, வண்டுமாமா போன்ற அறிவுசார் நூல்களும் இடம்பெறும்.

அத்துடன் சிறுவர் பூங்கா போன்றனவும் அமைந்திருக்கும். இங்கே சறுக்கி, ஊஞ்சல், றாட்டணம் போன்ற விளையாட்டு சாதனங்களும் அமைந்திருக்கும். மரநிழல்களில் திண்ணை, வாங்கு போன்றன கட்டியிருக்கும். அங்கே பெற்றோர் தம்சிறுவர்களுடன் வந்து பொழுதை இன்பமாக கழிப்பர். வயோதிபர்கள் மாலைப்பொழுதில் இங்கு வந்து பொழுதை தம் சகாக்களுடன் கதைத்து மனச்சுமையை இறக்கி இன்புறுவர்.

## இரவல் வழங்கும் பகுதி

நூலகத்தில் ஒருவர் தாம் விரும்பும் ஒரு நூலை இரவலாக பெற வேண்டுமாயின் அவர் அந்த நூலகத்தில் ஓர் அங்கத்துவ விண்ணப்பப்படிவத்தை பெற்று அதை முறைப்படி பூர்த்தி செய்து வைப்புப் பணம் செலுத்திய பின்தான் அங்கத்தவர் ஆக முடியும். அவர்தான் புத்தகம் இரவல் பெறமுடியும். அப்படிப் பட்ட ஒருவர் நூலகத்துக்கு வந்து தான் விரும்பும், அல்லது தேடும் ஓர் நூலை உள்ளதா என்பதை அறிய பட்டியலாக்கம் செய்யப்பட்ட பேழையில் பார்வையிட வேண்டும். அங்கே வாசகர் ஒருவரின் நலன்கருதி மூன்று விதமான அட்டைகளை பதிந்து வைத்திருப்பர். ஒரு புத்தகத்தின் ஆசிரியர் பதிவு, அப்புத்தகத்தின் தலையங்கப் பதிவு அப்புத்தகத்தின் வகுப்புப் பதிவு என மூன்று அட்டையில் அவர் தனக்குத் தெரிந்தபடி பார்த்து புத்தகத்தைப் பெறுவதற்கு வசதியாகவே பட்டியலாக்கம் செய்து வைக்கப்பட்டுள்ளது.

மேற்படி வாசகர் நூலகரின் உதவியுடன் டூவிதசதம்ச முறைப்படி பகுப்பு ஆக்கம் செய்து எளிய முறையில் றாக்கைகளில் அடுக்கிவைக்கப்பட்டிருக்கும் புத்தகங்களில் நூலகரின் வழிகாட்டலில் குறித்த இடத்திற்கு நேரே சென்று தான் விரும்பிய புத்தகத்தை மிக இலகுவில் பெற்றுக்கொள்ள முடிகிறது. பெற்றுக் கொண்ட புத்தகத்தை நூலகத்தில் உரிய முறைப்படி பதிந்து வீட்டுக்கு எடுத்துச் செல்ல முடிகிறது. அங்கத்தவர் பெற்றுச் சென்ற புத்தகத்தில் தனக்கு வேண்டிய தகவல்களைப் பெற்றுக்கொண்டு ஆகக்கூடிய பதின் நான்கு நாட்களில் திரும்ப நூலகத்தில் ஒப்படைக்க வேண்டும். இதுவே நூலக விதி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கேட்போர் கூடம்:-

கேட்போர் கூடம் நூலகத்தில் முக்கிய இடத்தை வகிக்கிறது. இப்பகுதியில் சாதாரண மாணவர்கள், வசதி குறைந்த மாணவர்கள் மற்றும் கல்வியில் ஆர்வம் மிக்க மாணவர்களும் தனித்தும், கூடியிருந்தும் (கொம்பயின் ஸ்ரடி) தமது பாட விதானத்தோடு கூடிய நூல்களை நூலகத்தில் பெற்று அமைதியான சூழலில் தமது கற்றலின் தேடுதலைப் பெற்றுக்கொள்வர். கிராம வரைபடம், புள்ளி விபரம் என்பன பெற்றுக்கொள்ளலாம்.

ஒரு நூலகத்திற்கு வரும் இளைஞர் யுவதிகளுக்கு, வாசகர், சிறுவர்கள் பலதரப்பட்ட கருத்தரங்குகள் பூரணை நிகழ்வுகள், நாடகம், பேச்சு போன்ற கலைநிகழ்ச்சிகளை நடத்துதல். இன் நிகழ்ச்சிகளில் சுகாதாரம், சுற்றுச் சூழல் பாதுகாப்பு, வீதிப்போக்குவரத்து போன்ற நல்ல விடயங்களில் கருத்தரங்குகள் நடைபெறுவதால் அறியாத பல விடயங்களையும் குறுகிய நேரத்தில் கேட்பதன் மூலம் பெற்றுபயன் பெறமுடியும். உள்ளூர் கலைஞர்களை அழைத்து அவர்களின் நிகழ்வுகள் மூலம் மக்கள் மத்தியில் கலை ஆர்வத்தை ஊக்குவித்தல்.

வானொலி, தொலைக்காட்சி, கணணி, செய்மதி, போட்டோ பிரதி, தொலைபேசி போன்றவற்றினூடாக விடயங்களை வெளிக்கொணர்ந்து அங்கவீனர்கள், மற்றும் கட்புல, செவிப் புலனற்றோர், படிப்பறிவு குறைந்தவர்களுக்கும் இவற்றினூடாக சேவையை வழங்குதல். உதாரணமாக சுகாதார படக்காட்சிகள், சமூக கலாச்சார விழுமியங்களை பிரதிபலிக்கும் தொலைக்காட்சி சேவை, செய்தி, விளையாட்டு செய்தி போன்றவற்றை குறித்த நேரத்தில் மாத்திரம் வழங்குதல் இவற்றுக்கு உதவியாக நூலக வாசகர்களுக்கிடையே ஒரு கலாச்சாரக் குழுவை அமைப்பதன் மூலம் நூலகம் இவர்களின் உதவியைப் பெறுகிறது. இப்பேற்பட்ட நிகழ்வுகளினூடாக வாசகர்களும் ஏனையோரும், பலரும் உளரீதியாகவும், அறிவுரீதியாகவும் அறிவை மேலும் பெருக்கிக் கொள்ள முடிகிறது.

## உடனுதவும் பகுதி:-

பொது நூலகத்தினுள்ளே சென்றதும் நாம் உடனுதவும் பகுதியை அவதானிக்கலாம். அங்கே நாம் தேடற்கரிய மற்றும் வேறு எங்கும் பெற முடியாத ஏடுகள் போன்றவற்றையும், அகராதிகள், கலைக்களஞ்சியம் மற்றும் விற்பனை முகவர் நிலையங்களிலும் பெற முடியாத அறிவுச் சாதனம் எங்கு கிடைத்தாலும் அங்கு சேமித்து வைப்பர். இப்பகுதி சற்று வித்தியாசமாகத் தோன்றும். இங்குள்ள எந்த பொருளையோ, நூலையோ வெளியே எடுத்துச் செல்ல எவரும் அனுமதிக்கப்பட மாட்டார்கள். வகுத்து வைக்கப்பட்டிருக்கும் புத்தகங்களில் தேவையானவற்றை வாசகர் நூலகரின் உதவியுடன் பெற்று அங்கேயே தமக்குத் தேவையான தகவல்களைப் பெற்றுக் குறிப்பெடுத்துக்கொண்டோ போட்டோ கொப்பி எடுத்துகொண்டோ செல்வர்..



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இங்கே ஆராய்ச்சியாளர்கள், புத்த கங்கள் எழுதுவோர் துறைசார் வல்லுனா கள், மற்றும் அகராதியிலுள்ள கருத்துக்களைத் தெளிவாக அறிய விரும்புவோரும் இப்பகுதியிலேயே தம் தேவையை பூரணமாகப் பூர்த்தி செய்வர்.

**களஞ்சியப் பகுதி :-**

களஞ்சியம் பொதுவாக நூலகத்தில் பாதுகாப்பானதுமான, ஒதுக்கமான ஓர் இடத்தில் அமைக்கப்படும். இங்கே புதிதாகக் கொள்வனவு செய்யப்படும் நூல்களோ மற்றும் சாதனங்களோ கொண்டுவந்து வைக்கப்படும். அதன் பின்னர்தான் கொள்வனவு சிட்டையுடன் சரி பார்த்து பகுப்பாக்கம் செய்யப்பட்டு, பதிவுகள் மேற்கொள்ளப்பட்டு கட்டப்பட்டு (பையிண்டிங்) நூலகப் பாவனைக்காக றாக்கைகளில் அடுக்கப்படுகிறது. நூலக பாவனையிலுள்ள பழுது அடைந்த புத்தகங்களைப் புதுப்பித்து கட்டுவதற் காக களஞ்சியத்தில் பட்டியல் தயாரித்து பாதுகாத்து கட்டுவதற்கான ஒழுங்குகள் மேற்கொள்ளப்படுகின்றன.

பத்திரிகைகள், பழைய பத்திரி கைகள் அந்தந்த தலைப்புகளின் (வீரகேசரி, தினகரன், உதயன்) இவ்வகை யான பத்திரிகைகளை தேதி ஒழுங்கில் மாதம் மாதம் சேமித்து கட்டி வைத்தல்.

பழைய சஞ்சிகைகள் - வார, மாத, காலாண்டு, அரையாண்டு சஞ்சிகைகள் முறையே வெளிவருகின்றன. இவற்றைத் தொகுதியாகக் கட்டி சேமித்தல். இவற்றைவிட நூலகத்தில் மேல் மிச்சமாக உள்ள தளபாடங்களும் ஏனைய வெற்றுப் பொருட்களும் சேமிக்கப்படும்.

**நூலகங்களின் வகைகள்:**

1. இலங்கை தேசிய நூலகம்.
2. பொது நூலகம்.
3. பாடசாலை நூலகம்.
4. பல்கலைக்கழக நூலகம்.
5. ஆராட்சி நூலகம்.
6. சட்டத்துணை நூலகங்கள்.
7. தோட்டத் தொழில்சார் நூலகங்கள்.
8. பாராளுமன்ற நூலகம்.
9. வாடகைக்கு நூல் இரவல் வழங்கும் நூலகம்.
10. குடும்ப நூலகங்கள் கூட உண்டு.
11. தொழில்நுட்பக் கல்லூரி நூலகங்கள்.

**நூலகங்கள் பற்றிய சில சுவை யான தகவல்கள்**

உலகில் நூலகங்கள் கி.மு. 5000 ஆண்டுகளுக்கு முதலே களிமண் தகட்டில் கூரிய ஆயுதங்களால் எழுதப்பட்ட, மரப்பட்டை, யாட்டுத்தோல் போன்றவற்றில் எழுதி இருந்தவை அரண்மனைகள், கோயில்கள், சமாதிகள் போன்ற இடங்களில் பாதுகாத்து வைத்தனர். இவை தான் அன்றைய நூலகமாகத் திகழ்ந்தன என்பது அகழ்வாராட்சியில் கண்டு எடுக்கப் பட்டுள்ளன.

பைப்பிரஸ் என்ற தாவரத்திலிருந்து கடதாசி தயாரிக்கப்பட்டதால் அத்தாவரத்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தின் பெயரை அடிப்படையாகக் கொண்டு பேப்பர் என்ற சொல் வழக்கில் வரலாயிற்று. அதன்பின் அச்சுக்கலை கண்டு பிடிக்கப்பட்டு பத்திரிகைகள், நூல்கள் உருவாகின. முற்காலத்தில் நூலகத்தில் புத்தகங்களை மிகமிக பாதுகாத்து வைப்பதையே நோக்கமாகக் கொண்டிருந்தனர். இன்று போல் இரவல் வழங்கும் சேவையை செய்ததே இல்லை. இது உயர் குலத்தவர்க்கும், அரசர்க்கும் உரியதாயிருந்தது. உலகில் முதலாவது பெரிய நூலகம் ஆரம்பமானது. 1854, 1855ம் ஆண்டு அமெரிக்காவில் ஆரம்பமாகியது. 1925ம் ஆண்டு பல தடைகளைத் தாண்டி கொழும்பு பொது நூலகம் ஆரம்பமாகியது. 1933ம் ஆண்டு யாழ் பொது நூலகம் ஆரம்பமாகியது.

இதைத் தொடர்ந்து இங்குள்ள அறிஞர்கள் கோவில்களில், சனசமூக நிலையங்கள் போன்றவற்றில் நூலகம் அமைத்தனர். (மடாலையங்களில்) முற்காலங்களில் திண்ணைப் பள்ளிகளில் படித்தோர் முற்கூறிய இடங்களில் புராண இதிகாச இலக்கியங்களை வாசிக்கும் போது கேட்டுக் கேட்டு வாசித்துப் பழகி அறிவை வளர்த்தனர். அப்படியே வளர்ந்து வந்ததுதான் எமது கல்வி வளர்ச்சியின் பாரம்பரியம் ஆகும்.

இருந்தும் இன்று வேதனைக்குரியது நூலகங்கள் வளர்ந்தும் வாசகர்கள் நூலகங்களை செவ்வனே பாவித்து பயன் பெறாமையே ஆகும். இக்கட்டுரை வாயிலாக நாம் ஒரு நூலகத்தின் செயற்பாடு, வாசகர்களின் தொழிற்பாடு பற்றி விளக்கியுள்ளோம். படித்து பயன் பெறுவீராக.

## நான்கின் பெருமை

| | | |
|---|---|---|
| 1. | நானிலம் | குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல் |
| 2. | நால்வேதம் | இருக்கு, யசுர், சாமம், அதர்வணம் |
| 3. | நால்வகை அரண் | காட்டரன், நாட்டரண், மலையரண், மதிலரன் |
| 4. | நால்வகை யாழ் | பேரியாழ், சகோடயாழ், செங்கோடியாழ், மகரயாழ் |
| 5. | நால்வகைப்பூ | கொடிப்பூ, கோட்டுப்பூ, நீர்ப்பூ, நிலப்பூ |
| 6. | நால்வகைப்பா | வெண்பா, கலிப்புா, ஆசிரியப்பா, வஞ்சிப்பா |




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாளுக்கு நாள் மாறும் நவ நாகரீக தங்க நகைகளுக்கு.......

# சாளினி

நகையகம்




229 ஏ, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

தொலைபேசி: 021-2223259

நங்கையர் மனங் கொள்ளும்
தங்க நகைகளுக்கு

# பிரசாத் நகையகம்



177 G.N கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.
[வின்சர் தியேட்டர் முன்பாக]

யாழ் நகரில் தங்க நகை உலகில்
மங்காப் புகழ் பெற்ற ஸ்தாபனம்.

# V.M.K

## தங்க மாளிகை



கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

யாழ் வீதி
சாவகச்சேரி

தொலைபேசி: 021-2222211

தரமான மளிகைப் பொருட்களை
மொத்தமாகவும் சில்லறையாகவும்
பெற்றுக் கொள்ள

# வேணி களஞ்சியம்

**பசுவதை கொடிய பாவம்
பசுவை உணவாகக் கொள்வதை
தவிர்ப்போம்**

165 கே.கே.எஸ் வீதி,
யாழ்ப்பாணம்.
கொலைபேசி: 021-2222046/ 2661

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பரக்கத் ஸ்ரோர்ஸ்



இல:6, நவீன சந்தை
ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.

## அம்பாள் ரேடர்ஸ்





324, ஆஸ்பத்திரி வீதி
யாழ்ப்பாணம்
தொலைபேசி: 021-2222812

## பெஷன் ஹவுஸ்



65. கே.கே.எஸ் வீதி
யாழ்ப்பாணம்.
தொலைபேசி: 021– 2222197

## மதனா ஜூவல்லறி



177/3, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

## நதியா ஜூவல்லறி




கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

## சரவணா ஸ்ரோர்ஸ்



இல: 05, நவீன சந்தை
ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.



## நாகராஜேஸ்வரி மோட்டோர்ஸ்

797,கே.கே.எஸ் வீதி,
யாழ்ப்பாணம்.
தொலைபேசி: 021–2222831


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உள்ளூராட்சி மன்றங்களின் வரலாறு

பிரதேச மட்டத்தில் வாழும் அப்பகுதி மக்களுக்கு தேவையான சகலதையும் நிறைவு செய்யும் ஓர் ஆட்சி அமைப்பே உள்ளூராட்சி மன்றங்கள் ஆகும். இம் மன்றங்கள் மக்களுக்கு ஆற்றும் சேவையைக் குறிப்பிடும் போது ஓர் அறிஞன் கூறிய சொற்களை நாம் நினைவு கூர்வது நாம் ஊன்றிச் சிந்திக்கத்தக்கதொன்றாகும். "அன்னையின் கருவறைதொட்டு கல்லறை வரை" சேவை செய்யும் அமைப்பு உள்ளூராட்சி மன்றங்கள் ஆகும் என்றான். ஒரு குறிப்பிட்ட வதிவிடத்து மக்களின் நிர்வாக கடமைகளை ஆற்றும் அமைப்பு இதுவாகும். உள்ளூர் நிர்வாகத்தினை ஆற்றும் ஓர் நிர்வாக அலகு. அது ஒற்றை ஆட்சி முறையானாலும் சரி கூட்டாட்சி அமைப்பு என்றாலும் சரி இந்த அலகு மக்களால் தெரிவு செய்யப்பட்ட மக்களின் பிரதிநிதிகளால் நிர்வாகம் செய்யப்படுவதாகும்.



**எஸ். சந்திரசேகரம்,**
**ஓய்வுபெற்ற செயலாளர்,**
**ஊர்காவற்துறை**
*பிரதேசசபை.*

ஓர் உள்ளூராட்சி அமைப்பானது மத்தியில் உள்ள அரசின் ஓர் திணைக் களமன்று. உண்மையான உள்ளூர் அதிகாரசபை என்பது மேலரசுக்கு கீழ்ப்படிவான அதே வேளை தனித்துவம் பெற்று மக்களால் ஆட்சிசெய்யப்படும் அமைப்பு ஆகும். இந்த அமைப்பு பல அலுவல்களை சுயாதீனமான முறையில் ஆற்றும் அதிகாரம் பெற்ற தாகும். இன்று இந்த அமைப்பு இங்கிலாந்திலும் விசேடமாக நம் நாட்டில் சிறப்பான முறையில் இயங்குகின்றது. ஆனால் நம் நாட்டில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்த அமைப்பு கிராமமட்டம், பட்டின மட்டம், நகரமட்டம், மாநகரமட்டம் எனப் பரந்து வியாபித்து அமைந்து உள்ளது ஈன்று கவனிக்கத்தக்கது.

எமது நாட்டில் இன்று நடை முறையில் உள்ள ஆட்சிமுறை 19ம் நூற்றாண்டின் பிற்பகுதியில் துரித வளர்ச்சி கண்டது. ஆனால் பண்டைய இலங்கையில் தமிழ் சிங்கள மன்னர்களது ஆட்சிக் காலத்திலும் காலத்துக்கேற்ப இந்த உள்ளூர் அமைப்பு நிலைத்து நின்றது. இலங்கையின் அரசியல் வரலாற்றில் நாம் கம்சபாக்கள், நட்ட சபாக்கள் இருந்ததை அறிய முடிகின்றது. பண்டைய இலங்கையின் அபிவிருத்தித் துறையில் அதிலும் குறிப்பாக பாசனத்துறையில் இச்சபாக்கள் அளப்பரிய சேவை செய்துள்ளதை காணக்கூடியதாக உள்ளது. இச்சபாக்கள் சுதந்திரமாக இயங்கி வந்துள்ளமை குறிப்பிடத்தக்கது. அன்று இச்சபாக்கள் எடுக்கும் முடிவு களுக்கு அந்த பகுதிமக்கள் பரிபூரணமாக கட்டுப்பட்டு நடந்துள்ளனர். இந்த அமைப்புக்களின் செல்வாக்கு ஆங்கிலே யரின் ஆட்சியின் முற்பகுதிவரை இயங் கியுள்ளது. இலங்கையில் இந்த சபாக் களின் ஆட்சி சிலகாலம் நடைபெறாது இருந்துள்ளதாக வரலாற்றைப் பார்த்தால் புரியும். எனினும் ஆங்கிலேயர் நாட்டில் நடைமுறையில் இருந்த கம் சபாக்கள் ஒத்த நிறுவனங்கள் அபிவிருத்தி கருதி நிறுவினர். இது பெரும்பாலும் 1850களுக்கு பின்பு நிகழ்ந்தன. எனினும் இந்த அமைப்புக்கள் இங்கிலாந்து நாட்டின் உள்ளூர் மன்றங்களின் சாயலை உடையதாவே இருக்கின்றன. எமது நாட்டில் அமையப் பெற்ற உள்ளூர் அதிகாரசபைகள் யாவும் சட்டசபை, பாராளுமன்றங்களின் கட்டளைச் சட்டங்கள், மசோதாக்கள் மூலம் உருவாக்கப்பட்டனவாகும்.

இவற்றில் குறிப்பிடப்பட்ட 1865ம் ஆண்டின் சட்டப் பிரகாரம் கொழும்பு மாநகரசபையும், அதே ஆண்டு கண்டி மாநகரசபையும் 1867ல் காலி மாநகர சபையும் அமைக்கப்பட்டன. இச்சபை களில் தெரிவு அங்கத்தவர்களும் நியமன உறுப்பினர்களும் அங்கம் வகித்தனர்.

மேலும் 1871ல் கிராம மட்டத்தையும் அதன் நீதி பரிபாலனத்தையும் நிர்வகிப் பதற்காக கிராமசபைகள் உருவாக்கப் பட்டு, செயற்பட்டன. அதேபோன்று சிறுபட்டினங்களின் சுகாதாரச் சேவை களை கவனிப்பதற்காக 1892ல் பட்டின சுகாதாரச் சட்டத்தின் மூலம் சிறுப்பிட்டி அலகு உருப்பெற்றன. கிராம பட்டின அலகுகளின் செயற்பாட்டினை ஆராய்வத ற்காக ஓர் ஆணைக்குழு நியமிக் கப்பட்டது.

எனினும் திரு.S.W.R.D. பண்டாரநாயக்கா உள்ளூர் ஆட்சி அமைச்சராக இருந்த வேளை பல திருத்தங்களை உருவாக்கி னார். இன்றைய உள்ளூர் ஆட்சி மன்றங்களின் கட்டமைப்பில் பாரிய மாற்றங்களை உண்டாக்கினார்.

1952ல் உருவாக்கப்பட்ட சட்டம் ஒரு பாரிய திருப்புமுனையாக அமைந்தது. உள்ளூர் அதிகாரசபைகளின் வரலாற்றில் இச் சட்டம் இச் சபைகளை சுதந்திரமாக இயங்கும் ஓர் உன்னதநிலைக்கு மாற்றியது. 1961ம் ஆண்டில் கிராமசபை எனும் செயலருடன் இச்சபை இயங்கத் தொடங்கியது. மேலும் அதன் அதிகார வரம்பும் கூடியது. கடமைகளும் கூடியது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தொடர்ந்து பல சட்டங்கள் உள்ளூர் அதிகாரசபைக்கு பாரிய உரிமைகளையும், கடமைகளையும் கொடுத்தன. இதில் முக்கிய மாற்றம் இச்சபைகளின் தலைவர்களை பதவி நீக்குவதற்கு 2/3 பெரும்பான்மை வேண்டும் என்பதேயாகும். இலங்கையின் உள்ளூர் அதிகாரசபையின் வளர்ச்சி ஒரு நூற்றாண்டில் எவ்வளவு தூரத்துக்கு மாற்றம் அடைந்துள்ளது என்பதனை பின்வரும் தரவு புலப்படுத்தும்.

| | |
|---|---|
| கிராமசபைகள் | 1931 - 399 |
| | 1970 - 540 |
| பட்டின சபைகள் | 1950 - 37 |
| | 1970 - 86 |
| நகர சபைகள் | 1931 - 11 |
| | 1970 - 34 |
| மாநகரசபை | 1931 - 03 |
| | 1970 - 12 |

இந்த உள்ளூராட்சி அதிகாரசபைகளில் பெரும் திருப்பம் 1981ல் உருவானது. இலங்கை இனப்பிரச்சனைக்கு தீர்வு காணும் நோக்கத்துடன் ஒரு மாவட்டத்துக்குள் அடங்கும் சகல கிராம சபைகளும் பட்டின சபைகளும் தனி ஓர் அலகாக மாவட்ட அபிவிருத்திச் சபை என்னும் பெயருடன் உதித்தது. அதன் உருவாக்கல் நோக்கம் எட்டப்படாமலே மீண்டும் 31.12.1987ல் பிரதேச சபைகள் என்னும் பெயர்மாற்றம் செய்யப்பட்ட புதிய உள்ளூர் அதிகார அலகு உருவானது. இந்த அலகு ஒவ்வொரு பிரதேச செயலர் மட்டத்துக்கு ஒன்றாக உருவாக்கப்பட்டது.

இன்று நமது நாட்டில் இயங்கும் உள்ளூர் ஆட்சிமன்றங்கள் மூன்று வகைகளாகும்.

1. மாநகரசபை
2. நகரசபை
3. பிரதேச சபைகளாகும்.

இச்சபைகளின் கடமைகள் கடற்பாடுகள், அதிகாரங்கள் யாவும் அவை உருவாக்கம் பெற்ற கட்டளைச்சட்டம், சட்டமூலம் விபரிக்கப்பட்டுள்ளது. இவ்வாட்சி மன்றங்களின் கடமைகள் பாரியது. முன்பு கூறியது போல் கருவறை தொடங்கி கல்லறை வரை அதன் கடமைகள் உள்ளன.

இதனைத் திறம்பட நிர்வகிக்க நிதி மத்திய அரசினாலும் தனது சொந்த மூலவளங்களினாலும் பெற்றுத் தனது வரவு செலவுத்திட்டங்களுக்கு அமைவாக நிர்வகித்து வருகின்றன.

இச்சபைகளின் செயற்பாட்டை கண்காணித்து வழிநடத்த உள்ளூர் ஆட்சி ஆணையாளர் திணைக்களம், கணக்காய்வுத் திணைக்களம் இரண்டும் பாரிய அளவில் செயற்படுகின்றன.

இன்று இந்த மன்றங்கள் நாட்டின் மக்களாட்சியை பூரணமாகச் செய்வதற்கு ஓர் பயிற்சிக்களமாக அமைந்து செயற்பட்டுக் கொண்டுள்ளது ›எனில் மிகையல்ல. எனினும் 1978ம் ஆண்டில் அரசியல் யாப்பு தேர்தல் முறையில் பாரிய மாற்றங்களை செய்துள்ளது. இன்று இம்மன்றங்கள் சம்பந்தப்பட்ட மாகாண சபைகளும் கட்டுப்படுத்தும் ஓர் நிலை உண்டு என்பதில் சந்தேகம் இல்லை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பொறுப்புணர்வுடன் பணிபுரியும் பொதுப் பணியாளரின் கூட்டு நடவடிக்கையே ஒரு தேசத்தின் இலட்சிய இலக்கை இலகுவில் எய்த உதவும் ஒன்றுபட்டால் உண்டு வாழ்வு

தற்காலச் சூழலில் பொறுப்புணர்வுடன் பணிபுரிய வேண்டிய பணியாளர்கள் பொறுப்புக்களை முழு ஆர்வத்துடன் நிறைவேற்றாது செயற்படுதலினாலேயே நமது தேசத்தின் அபிவிருத்தியும், முன்னேற்றமும் தடைப்பட்டு காணப்படுகின்றதை அவதானிக்க கூடியதாக உள்ளது.

மேற்படி கூற்றுத்தொடர்பாக அரச சேவையில் நீண்டகாலம் பணியாற்றியவரும் கணக்காய்வாளர் நாயகமாக இருந்தவருமாகிய திரு.காமினி ஆப்பா அவர்களின் அனுபவ வெளிப்பாடுகள் தொடர்பாக வவுனியா அரசஅதிபர் 31.05.1997ல் நான் பெற்ற இன்பம் பெறுக இவ்வையகம் என்னும் தலைப்பில் வடகிழக்குமாகாண உள்ளூராட்சி ஆணையாளருடாக எமக்கு அனுப்பி வைக்கப்பட்ட இக் கட்டுரை வாசகத்தை உள்ளூராட்சிமன்றங்கள் உள்ளூராட்சி வாரக் கொண்டாட்டங்களை நடாத்தும் இவ் அரிய வேளையில் உள்ளூராட்சி வார கைநூல் வாயிலாக நான் படித்து விளங்கிக் கொண்ட இவ் அரிய கருத்துக்களை சகபணியாளர்களுடன் பகிர்ந்து கொள்ளுவதில் மன நிறைவு அடைகின்றேன். பொது நிறுவனங்களில் கடைப்பிடிக்கப்பட்டு வரும் ஒழுக்க நெறிகளின் தரம் வீழ்ச்சியடைந்துள்ளதால் அவற்றினைப் பேணுவதற்குப் பொது நிறுவனங்களும் ஒவ்வொரு பிரசையும் அக்கறை காட்டுதல் வேண்டும்.



**திரு. சா. சண்முகதாசன்,**
*பிரதம எழுதுனர்*
*வேலணை பிரதேசசபை.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொது நிறுவனங்களும், பணியாளர்களும் கடமைபார்க்கும் நிறுவனங்களும் தற்போது ஒழுக்கமற்ற நிலைக்கு தள்ளப்பட்டு சமுதாயத்தில் தனிமனிதனின் சுதந்திரமும் உரிமையும் பாதிக்கப்படுவதால் சமாதானத்தையும் ஒழுக்கத்தையும் பேணும் ஒரு சிலர் கூட விரக்தியின் விளிம்புக்கு தள்ளப்படுகின்றார்கள்.

பொதுவாக ஒரு நிலைப்பாட்டின் எந்தவொரு நிறுவனமும் ஒழுக்கமான முறையீல் நிர்வகிக்கப்பட்டு அதன் பொது விவகாரங்களைச் சரியான முறையில் வெளிக்கொணர்வதே அதன் கடப்பாடாகும். ஒழுங்கான நிர்வகிப்பில் முறையான சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் நடைமுறைகள் செயற்பாடுகள் அனைத்தும் முழுமையாகவும் பூர்த்தியானவையாகவும் பொருத்தமுள்ளதாகவும் இருக்கவேண்டும்.

நடைமுறையில் எழுதப்படாத விதிகளும் உள்ளன. அவற்றினைத் திணைக்களத்தில் உள்ளவர்கள் நடைமுறைப் படுத்த கடமைப்பாடு உடையவர்கள். இவற்றினை மீறுபவர்களும் ஏற்றுக் கொள்ளாதவர்களும் பொதுவாக எதிர்பாராத விளைவுகளைச் சந்திப்பதுடன் ஒழுக்காற்று நடைமுறைக்கும் உள்ளாவார்கள்.

நாகரீகமான ஒரு ஜனநாயக நாட்டில் பாதிக்கப்பட்ட பணியாளர் ஒருவருக்கு தன்னைப் பாதுகாத்துக் கொள்வதற்கு ஏற்றதொரு சந்தர்ப்பம் வழங்கப்படுதல் வேண்டும்.

இந்நாட்டில் கடமைக்கு சேர்க்கப்படும் இளம் தலைமுறையினர் ஒழுங்கையும், நிர்வாக அதிகாரத்தையும் இழிவான முறையில் கணக்கிட்டுக் கீழ்ப்படிவின்மைக்கும் நேரடி மோதலுக்கும் தம்மை ஆளாக்கிக் கொள்ளுகின்றனர். பொதுவாக மூத்த பணியாளர்கள் பொறுமையாகவும் கடமையுணர்வுடனும் நடந்து கொள்ளுகின்றனர். ஒழுக்காற்று விதிகளின் குறைபாட்டின் காரணமாக அடிப்படை ஜனநாயக சுதந்திரமும் ஒருவரைப் பலவிதமான குறைபாடுகளைச் செய்வதற்கு ஊக்குவிக்கின்றது.

பொது நிறுவனங்களில் கடமையாற்றும் ஒருவரின் ஒழுக்கமின்மை, பொறுப்பற்ற கடமையுணர்வு நிர்வாகத்தின் பணிப்புரைகளை ஏற்கத்தயங்கும் நிலைமை ஆகியவை பணியாளர் மத்தியில் அதிகரித்து வருவதால் நிறுவனங்களின் தரம் குறைந்து வருகின்றது.

சீரற்ற மனோநிலமை வீட்டிலும், பாடசாலைகளிலும் அதன் பின்பு பல்கலைக்கழகங்களிலும் ஒழுக்கம் பற்றிய தாக்கத்தினை ஏற்படுத்தியுள்ளது. இதனால் அரச சேவைக்கு செல்லுபவர்கள் தங்கள் கடமைகளைப் பொறுப்புடன் செய்வதற்கு ஊறாக அமைந்துள்ளது. சமுதாய அரசியல் தாக்கங்களும் அரசசேவையில் ஊடுருவி யுள்ளன. எது எப்படி இருந்த போதிலும் பொது நிறுவனங்களில் ஒழுக்கக் குறைபாடு சமுதாயத்தில் ஒரு தீங்காக உருப்பெற்று அவை உச்ச நிலையையும் அடைந்துள்ளன. இந்நிலை அரச சேவையில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குறிப்பாக ஒவ்வொருவரினதும் மனத்தி லும் மனக் குழப்பத்தை ஏற்படுத்தி யுள்ளது. ஒழுக்கத்தின் தரக்குறைவினால் கடமையில் பொறுப்பின்மை, வேற்றுமை, கடமைப்பற்றின்மை, கடமையில் கவலையீனம் குறைந்த செயற்பாடு, தரம் குறைந்த உற்பத்தி, ஒழுங்கையும் நேரத்தையும் பின்பற்ற முடியாமை, நிறுவனத்தின் நடைமுறை விதிகளை பேணாமை ஆகியன இடம் பெறுகின்றன. மேலும் இக் காரணங்களினால் திட்டமிடப்பட்ட ஒரு செயற்பாட்டினை ஒரு நிறுவனம் செய்து வெற்றிகரமாக முடிப்பதற்குத் தடையாக அமைந்துள்ளன. ஒரு ஒழுக்கமான அரச ஊழியன் பற்றி அவரின் உண்மைச் செயற்பாடு நேர்மை கண்ணியம் ஆகிய பண்புகள் எடுத்து இயம்புகின்றன. மோசடிகளும் இலஞ்ச ஊழல்களும் நேர்மையின்மையினாலும் நாணயமற்ற நிலைப்பாட்டினாலுமே உருவாக்கப் படுகின்றன. ஆகையினால் பொது வாழ்வில் ஈடுபடும் அரச பணியாளர்கள் தங்கள் பதவிகளை நம்பிக்கைக்கும், நீதிக்கும் உகந்த வகையில் பேணிக் கொள்ளல் வேண்டும்.

ஒரு நேர்மையற்ற வெட்கமற்ற அரச பணியாளர் ஒருவர் எப்பொழுதும் பொய், விதண்டாவாதங்களில் தன்னை ஈடுபடுத் திக்கொள்வதுடன் தான் சார்ந்த நிறுவனத்தின் குறைபாடுகளைக் கூறிக் கொண்டேயிருப்பார்.

ஒரு படித்த அரச பணியாளர் தாம் கூறும் வார்த்தைகளில் ஏதாவது பிழைகள் இருப்பின் அவற்றினை உடனடியாக திருத்திக் கொள்வது அவரின் நிலைப்பாட்டை உயர்த்திக் கொள்ளும். மேற்பார்வை செய்யும் அரச பணி யாளர்கள் தமது கடமையைப் பொறுப் புடனும், கடமையுணர்வுடனும் செய்தல் விரும்பத்தக்கது. ஒருவர் உண்மையற்ற செயற்பாட்டினைப் பழக்கத்தில் கொண்டு வருவாரானால் ஒரு பொய்யை மறைப் பதற்குப் பல பொய்களைக் கூறவேண்டிய நிலை ஏற்படலாம். இதனால் இவர்கள் நாட்டுக்கும், சமுதாயத்திற்கும் கேடு விளைத்தவர்களாவார்கள். இவ் வரிசை யில் உள்ளவர்கள் பொதுப் பணிகளிலும் அரச பணிகளிலும் ஈடுபடத் தகுதியற்ற வர்கள் ஆவார்கள். நேர்மையற்ற வழியில் செல்லும் அரச பணியாளர்கள் எப்பொழுதும் பிழையான வழிகளில் செல்ல முற்படுவார்கள். பொதுவாக இவர்கள் நிர்வாகத்தின் அமைப்பை பாதிக்கச் செய்யும் சமூகமாக நடைமுறையில் இருக்கும் நிறுவனங்களில் எதிர் காலத்தைக் குறைக்கச் செய்யும் காரணகர்த்தாவாக இருக்கின்றார்கள்.

மேற்கூறிய சம்பவங்கள் யாவும் அனைவரினது கவனத்தையும் ஈர்க்க கூடியனவாகும்.

இந்த வகையில் பணியாளர்கள் அனைவரும் அதியுயர்ந்த தரம் உள்ள நேர்மை கடமையுணர்வு, கடப்பாடு ஆகியவற்றைக் கொண்டுள்ளவர்களாக இருக்க வேண்டும்.

இந்த நாட்டில் ஒழுக்க நெறிகளை அரச பணியாளர்கள் மத்தியில் பேணுவதற்கு ஏற்கனவே தெரிவித்தவாறு நடைமுறை விதிகள் ஒழுங்குகள் இருக்கின்றன. ஆனால் அவைகள் மீறப்பட்டு வருகின்றன. உதாரணமாகக் காரியாலய கடமை நேரங்கள் மதிய உணவுக்காக ஒதுக்கப்பட்ட நேரம், பிந்தி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வருபவர்களுக்கான சலுகை, லீவு பெறுவதற்கான ஒழுங்குகள் பேணப்பட்டு வருவதில்லை.

எப்பொழுதும் ஒருசில பகுதிப் பணியாளர்கள் ஒழுக்கு முறைகளைத் தங்கள் மேல் திணிப்புதை விரும்புவதில்லை. கடமை, ஒழுங்கு, அவர்களினால் கண்டிப்பான முறையில் கைக் கொள்ளப்படுவதில்லை.

கடமைக்கு ஒழுங்காக வருபவர்களின் நிலைமைபற்றி ஆராய்தல், பிந்தி வருபவர்கள் அனேகமானோர் திணைக் களங்களுக்கு மிக அண்மையில் வசிப்பவர்கள் என்ற உண்மை தெளிவாகின்றது.

தொலைவில் இருந்து வருபவர்கள் அனேகமாக நேரத்துக்கு கடமைக்கு வருகிறார்கள். கடமை முடிவதற்கு ½ மணித்தியாலம் முன்னதாகவே பல பணியாளர்கள் வீடு செல்வதற்காக உபகரணங்களைக் கீழே வைத்து விடுகின்றனர். ஒரு சிலர் வீடு செல்லும் நேரத்துக்கு முன்னதாகவே அலுவலக விறாந்தைகளிலும், பிற இடங்களிலும் நின்று நேரத்தை வீணடிக்கின்றார்கள்.

இந்த வீணான நேரத்துக்கு எல்லாம் அவர்களுக்கு கொடுப்பனவு உண்டு. ஒரு சிலர் பிந்திவந்து நேரடியாக தேனீர்ச் சாலைக்குச் சென்று அங்கு ½ மணித்தியாலம் அரட்டை அடிப்பதிலும், அரசியல் பேசுவதிலும் தமது நேரத்தைச் செலவிடுகின்றார்கள். அரசாங்க கடமை நேரத்தில் தனது சொந்த வேலைகளில் ஈடுபட்டுச் சம்பளமும் பெற்றுக்கொண்டு இருக்கின்றார்கள்.

பொதுமக்கள் ஒருவிடயத்தை நிறைவேற்றுவதற்குத் திணைக்களங் களுக்குப் பலமுறை செல்ல வேண்டி உள்ளது. சம்பந்தப்பட்ட பணியாளரைக் காரியாலயத்தில் சந்திக்க முடியாது இருக்கின்றார்கள். அவர் சில சமயங் களில் இளைப்பாறும் அறையில் அல்லது சிற்றுண்டிச்சாலையில் காணப்படுவார். அத்துடன் பொதுமக்கள் பலமுறை காரியாலயங்களுக்கு சமூகம் கொடுக்க வேண்டிய நிர்ப்பந்தமும் உள்ளது என்ற தகவல்களை நாம் பத்திரிகைகளில் வாசிக்கின்றோம்.

இதனால் விரக்தியடைந்த பொதுமகன் ஒருவன் மனதில் பெரும் தாக்கம் ஏற்பட்டு அரச ஊழியரின் கடமை அசட்டையீனத்தைப் பற்றி அவர் கிரகித்துக்கொள்கின்றார்.

மேலும் அரச ஊழியர் ஒருவர் விடுமுறை எடுப்பதில் ஒழுங்கு முறைகளைப் பின்பற்றுவதில்லை. விடுமுறையை விண்ணப்பித்து அங்கீகாரம் பெற்ற பின்னே உபயோகப்படுத்த வேண்டும் என்பது நியதி. ஆனால் ஒரு பணியாளரின் லீவு விண்ணப்பம் அவர் கடமைக்கு வராதவிடத்து எங்கிருந்தோ வந்து சேர்ந்துவிடுகிறது. இதனால் அத்தியாவசிய சேவைகள் பாதிப்புக்குள்ளாகின்றன.

ஒருவர் கடமைக்கு சமூகம் கொடுக்காது விடுமுறை இடமாற்றம் சம்பந்தமான விவகாரங்களுக்கு வைத்திய சான்றிதழ் ஒன்றினை ஒரு குறிப்பிட்ட தொகையினைக் கொடுத்துப் பெற்றுக் கொள்கின்றார். கடமையுணர்வற்ற நிலையில் ஒருவர் மாத முடிவில் தனது சம்பளத்தைப் பெறுவது பெரும் குற்றமாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒன்றினை ஒரு குறிப்பிட்ட தொகை யினைக் கொடுத்துப் பெற்றுக் கொள்கின் றார். கடமையுணர்வற்ற நிலையில் ஒருவர் மாத முடிவில் தனது சம்பளத்தைப் பெறுவது பெரும் குற்றமாகும்.

பணியாளர்கள் திணைக்களத்தினில் தனது நேரத்தை வீணாக்கிக் கொள்ளக் கூடாது என்றும் காரியாலயத்தில் தருமச் சம்பளப் பட்டியல் இல்லை என்பதையும் உணர்ந்து கொள்ள வேண்டும். கடமை யிலே தொய்வுநிலை இந்த நாட்டில் இருப்பதால் பொருளாதாரப் பாதிப்பு, தயக்கம், பணவிரயம் முதலியவை ஏற்படுகின்றன. இவற்றினைத் தவிர்ப்ப தால் நாட்டில் பல தொழிற்சாலைகளை நிறுவுவதுடன் வேலையில்லாப் பிரச்சினை யையும் தீர்த்துக் கொள்ளலாம். ஆகை யால் பொது நிறுவனங்கள் ஒழுங்கீனங் களை நிறுத்தி அபிவிருத்திக்கும் முன்னேற்றத்திற்கும் நாட்டின் சுபீட்சத்திற் கும் உழைக்க முன் வரவேண்டும். இதுவே எமது நேர்மை, கடமையுணர்வு, பொறுப்புணர்வுடன் கூடிய கடமைப் பங்களிப்பாகும். இதுவே பண்புள்ள அனைவராலும் எதிர்பார்க்கப்படும் ஒன்றாகும்.

"இது எங்கள் மனச்சாட்சிக்கு விடுக்கப்பட்ட தூது"

## பொது அறிவு

1. கொழும்புத்திட்டம் ஆரம்பிக்கப்பட்ட ஆண்டு
   1950இல்
2. புவியில் மிகக் கூடுதலாக உள்ள வாயு
   நைதரசன்
3. விசவாயுக்களுள் ஒன்று
   காபனீரொட்சைட்டு
4. அதிக அளவில் தங்கத்தை உற்பத்தி செய்யும் நாடு
   தென் ஆபிரிக்கா
5. சிறுகதை உலகின் மன்னன் என்று அழைக்கப்படுபவர்
   புதுமைப்பித்தன்
6. மஞ்சள்ஆறு ஓடும்நாடு
   சீனா
7. அவுஸ்திரேலிய நாட்டின் தேசிய சின்னம்
   கங்காரு
8. இருண்ட கண்டம் என்று எதனைக் கூறுவர்
   ஆபிரிக்கா
9. ஆசியாவிலேயேமிகப்பெரிய உப்புநீர் ஏரி எது
   தெற்கு புவனேஸ்வரிலுள்ள சில்பா ஏரி
10. கம்யூனிசம் என்னும் பொதுவுடமைக் கொள்கையை வகுத்தவர் யார்
    கார்ல் மார்க்ஸ்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அனைத்து வகையான மோட்டார்சைக்கிள்களுக்கும், உதிரிப்பாகங்களுக்கும்

## அருள் விநாயகர் மோட்டோர்ஸ்



**108, ஸ்ரான்லி வீதி,**
**யாழ்ப்பாணம்.**

**கிளை:**
**பிரதான வீதி,**
**சங்கானை.**

---

அசல் 22 கரட் தங்க நகைகளுக்கு குறித்த தவணையில் பெற்றுக் கொள்ள

## ஸ்ரீ வாணி நகை மாடம்



**173, கஸ்தூரியார் வீதி,**
**யாழ்ப்பாணம்.**

---

## வேலணை பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம்

(வரையறுக்கப்பட்டது)

தரமான பனந்தும்பு நியாயமான விலையில் பெற்றுக் கொள்ளவும்
பிளாஸ்ரிக் கதிரைகளை குறைந்த வாடகையில் பெற்றுக் கொள்ளவும்



**வேலணை கிழக்கு**
**வேலணை.**

---

காலத்தால் அழியாத கலை அம்சங்கள் பொருந்திய தங்க நகைகளுக்கு

## திரு பிரியங்கா நகைமாளிகை



2G, ஸ்ரான்லி றோட்,
யாழ்ப்பாணம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சரஸ்வதி விலாஸ்




தரமான சைவ உணவுகளுக்கு
நீங்கள் நாடவேண்டிய இடம்

இல: 155, கே.கே.எஸ் வீதி,
யாழ்ப்பாணம்.

உங்களுக்குத் தேவையான சகலவிதமான நுகர்வுப்
பொருட்களுக்கும் நீங்கள் நாடவேண்டிய இடம்

# அன்னராஜா களஞ்சியம்



356, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.

தரமான மளிகைப் பொருட்களுக்கு
நாடவேண்டிய இடம்

# ஐங்கரன் ஸ்ரோர்ஸ்





354, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.

தொலைபேசி:
021-2223354

நம்பிக்கை, நாணயம், உத்தரவாதத்துடன்
தங்க நகைகளுக்கு.....

# அபிநயா ஜுவல்லரி



32. கஸ்தூரியார் வீதி.
யாழ்ப்பாணம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நாமும் நமது மூலிகைகளும்



Dr. (Mrs). S. மகேஸ்வரன்
*வைத்திய கலாநிதி,*
*நல்லூர்ப் பிரதேச சபை,*

இன்று நம் மண்ணில் அளவற்ற நோய்கள் மலிந்து விட்டன. இந்நோய்கள் உண்டாவதற்கான காரணங்கள் எதுவாக வேண்டுமானாலும் இருக்கலாம். ஆனாலும், அந்நோய் தோன்றிய பின் அது எங்கிருந்து எப்படி பிறந்தது வளர்ந்தது என்று அதற்கான ஆராய்ச்சிகளைச் செய்து கொண்டு இருப்பதைவிட உண்டான நோயை உடனடியாக வெல்லவேண்டியது அவசியமல்லவா?

எனவே, பண்டைய சித்தர்கள் பல்வேறு வகையான மூலிகைகளைக் கண்டறிந்து அவற்றை முறையாகப் பயன்படுத்துவதன் மூலம் நோயைக் குணமாக்கும் ஆற்றலை மனிதர்களுக்கு உண்டாக்கினார்கள். தமிழ் மருந்துகள் வேத காலத்திற்கு முற்பட்டவை தமிழரின் வைத்தியகலை பெரும்பாலும் சித்தர்களாலே வளர்க்கப்பட்டு வந்தமையால் "சித்த வைத்தியம்" என வழங்கி வரலாயிற்று.

சித்தவைத்தியம் ஆயுள்வேத வைத்தியம் இவ் இரண்டுமே நீண்ட நெடும் காலமாக இமயம் தொடக்கம் இலங்கை வரையிலும் மக்களால் பயன்படுத்தப்பட்டு வருகின்றன. ஆகவே இவற்றை தேசிய வைத்தியங்களாகக் கருதலாம். நாட்டு வைத்தியம் என்பன எளிமையாக்கப்பட்ட நமது சித்தவைத்தியமேயாகும். நாம் அன்றாடம் உண்ணும் உணவில் இருந்து நாம் அறியாத மூலிகைகள் வரை நமது உடல் நலத்தின் பொருட்டு சித்த



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாமுனிவர்களால் கண்டறியப்பட்ட ஒன்றா கும். சித்தர்கள் கூறிய சிறப்பான மருத்துவ முறைகளில் ஒன்று தான் "மூலிகை" வைத்தியம்.

நமது மண்ணில் காணப்படும் மூலிகைகள் அனைத்துமே தாவர இனத்தைச் சார்ந்தவையாகும். தாவர இனத்தில் மரம், செடி, கொடி, புல், பூண்டு ஆகியன அடங்கும். சித்தர்கள் தாவர இனத்தைச் சேர்ந்த இலை ஒவ்வொன்றும் இவற்றின் வேர்ப்பட்டை, தண்டு, இலை, தழை, மலர், காய், கனி, விதை, பட்டை, புறணி, கொட்டை, பருப்பு ஆகிய உறுப்புக்களும் நோய் நீக்கும் தன்மையுடையதே என்பதை அறிந்துள்ளார்கள். எனவே, அவற்றை தரம் பிரித்து இந்தத் தாவரத்தின் இந்த உறுப்பு இன்ன குணமுடையது இந்த நோயைத் தீர்க்கும் என்பதை சித்தர்கள் கண்டறிந்து கூறியுள்ளார்கள்.

மூலிகையை வேருடன் பிடுங்கி முழுமையாக அதைப் பயன்படுத்தும் போது அதனை சமூலம் என்று குறிப்பிடப்படுகின்றது. ஒரு மூலிகையை முறைப்படி பயன்படுத்தினால் நோயிலிருந்து எவ்வாறு விடுபடமுடியும் என்பதன் பொருட்டே பற்பல விசயங்களை சித்தர்கள் கண்டு கூறினர். எனவே, அந்த மூலிகைகள் எவை எவை என்று நாமும் அறிந்து கொண்டால் நல்லதல்லவா? மூலிகைகளின் குணங்களைப் பிரித்து சித்தர்கள் கூறியுள்ள கருத்துக்கள் அனைத்தும் செய்யுள் வடிவில் உள்ளன. அந்த நூலின் பெயர் "பதார்த்த குண சிந்தாமணியாகும்". எண்ணற்ற இந்த மூலிகைகளில் நான் நமது மண்ணில் இன்று காணப்படுகின்ற சாதாரண மக்களும் அறிந்த எளிய மூலிகைகள் சிலவற்றின் பயன்களையே கீழே தர விழைகின்றேன்.

**1. அறுகம்புல்**

அறுகம்புல்லைநாம் அன்றாடம் சாதாரணமாகக் காணக்கூடியதான ஒரு புல் இனமாகும். இது ஒரு தெய்வீக மூலிகையுமாகும். இதை இந்துக்கள் ஆகிய நாம் விநாயக வணக்கத்திற்காக உபயோகிக்கின்றோம். இவ் அறுகம் புல்லை நாம் அதிகம் காண்பதால் தான் ஏற்கனவே நம்மில் பலர் அதை அலட்சியப்படுத்தி விடுகின்றனர். ஆயினும், அலட்சியப்படுத்துவதற்கு உரிய ஒரு மூலிகையல்ல இத் தெய்வீக மூலிகையை நாம் பயன்படுத்தும் போது அற்புத சுகம் அளித்திடும் அருமருந்தாக இருக்கின்றது.

இது ஒரு சிறந்த நோய் எதிர்ப்பு சக்தியைக் கொண்ட மூலிகையாகும். இதனை தோல் நோய்களுக்கும் வெளிக்காயங்களுக்கும் கறி மஞ்சளுடன் அரைத்து பூசிவர வெளிப்பிரயோகமாக குணமாகும். உணவு ஒவ்வாமையை நீக்கும். மாதம் ஒரு முறை அவித்துக் குடித்தால் இரத்தத்தை சுத்திசெய்து விருத்தி செய்யும். இப்புல்லை மிளகுடன் இடித்து கஷாயமிட்டு சிறிதளவு அருந்த உடலில் உள்ள விஷத்தை முறிக்கின்றது.

**2. அரசு**

இது ஒரு தெய்வீக மூலிகையாகும். இதன் துளிர் குளிர்ச்சியைத் தரும். சுக்கில சுரோனித தாதுக்களை அழிக்கும். கிருமிகளைக் கொல்லும். இதன் இலைக்கொழுந்து கஷாயம் காலை, மாலை சாப்பிட்டு வர (30 மி.லீ)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுரம் நீங்கும். அரச மரவேரின் பொடி தொண்டைப்புண் ஆற்றும் தன்மை உடையது. மரப்பட்டையை உரித்து சாம்பலை எடுத்து தேங்காய் எண்ணெயுடன் கலந்து பூசிவர சொறி, சிரங்கு வேறு புண் என்பன ஆறும். இதன்வேர் பொடியை சாம்பிராணியுடன் சேர்த்து புகைத்தால் விஷ ஜந்துக்கள் வீட்டில் தங்காது. பித்தவெடிப்பிற்கு இதன் தளிரை அரைத்துப் பூசிவர குணமாகும்.

### 3. அகத்தி

உடலின் அகத்தில் உள்ள வெப்பத்தை அகற்றும். கீரை என்பதால் அகத்திக்கீரை எனப்பெயர் ஏற்பட்டது. இதில் எல்லா உயிர்ச்சத்துக்களும் நிறைவாக உள்ளது. உடலிற்கு குளிர்ச்சியைத் தரும் குடற்புண்ணை ஆற்றும். இதன் இலை "பூ" காய், மருத்துவக்குணமுடையது. விஷத்தை முறிக்கும். இதனை வாரத்தில் ஒரு முறையாவது உணவில் சேர்த்து வந்தால் வெட்கைநோய், வயிற்றுப்புண் இடு மருந்தின் விஷங்கள் என்பவற்றை முறிக்கும்.

### 4. ஆடாதோடை

இதன் பொதுக்குணமாக புழுக்களை கொல்வதில் வேம்பின் தன்மையை ஒத்தது. இழுப்பு, இருமல், தும்மல், மார்புச்சளி, மார்பில் நீர் கோர்த்தல், காசநேய், முட்டு ஆகிய நோய்களைக் குணமாக்கும். இதன் இலைகளை உலர்த்திய பொடியை நெருப்புத்தணலில் இட்டு புகையை பிடிச்சு மூச்சுக்கோளாறு தீரும். சளிவெளியேறும். இரைப்பு குறையும் (இது ஒரு நிரந்தர மருந்தல்ல)

### 5. ஆமணக்கு

இதில்பல வகையுண்டு. இதன் எண்ணெய் குடலைத் தூய்மையாக்கும். மலச்சிக்கலை போக்கும் மூல நோயை நீக்கும்.

### 6 இஞ்சி

இது ஒரு வாசனைத் திரவியம். நாளாந்த நடைமுறையில் மக்களிடையே பெரும்பாலும் பாவனையில் உள்ளது. இதன் மருத்துவக் குணங்கள் பல உணவு செமியாமையை போக்கும். பித்தத்தை அடக்கும். பசியைத் தூண்டும். வெப்பத்தை தரும். தோல் நீக்கிய இஞ்சியை தேனில் ஊறவைத்து காலையில் 5 மி.லீற் தேனுடன் ஒரு துண்டு இஞ்சியை (2 கிராம்) எடுத்து 48 நாட்கள் மென்று சாப்பிட்டுவர ஆயுள் பெருகும். நெஞ்சு உரம் பெறும். உடலின் எதிர்ப்பாற்றல் பெருகும். இதனால் வாந்தி, மயக்கம், ஆஸ்மா, வாய்வு, ஏப்பம், இருமல், நீரழிவு, தலைவலி. ஜலதோஷம், வாதநோய்கள் குழந்தைகளின் மந்தம் போன்றவை நீங்கும்.

### 7. உள்ளி

இதை வெள்ளை வெங்காயம், பூண்டு என்றும் கூறுவர். இது இருமல் சம்பந்தமான நோய் பூச்சிக்கடி, புழுத்தொற்றுதலுக்கு சிறந்தமருந்தாகும். மேலும் சுரம், வயிற்றுளைச்சல், கொலரா ஆகியவற்றை போக்கும். இதில் உள்ள அலிசின்நெடி (மணம்) பென்சிலினை விட ஆற்றல் உள்ளது. இது இரத்த அழுத்தம்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாயுக்கோளாறு, நரம்புக்கோளாறு, நீரிழிவு, மாதவிடாய் கோளாறுகளுக்கும் சிறந்த மருந்தாகும். உடல்பருமன்குறைய உள்ளியை ஊறுகாயாகவோ, லேகியமாகவோ செய்து சாப்பிட்டு வரலாம்.

**8. உத்தமாகாணி (வேலிப்பருத்தி)**

இது வீக்கத்தை கரைக்கும். காக்கை வலிப்பைக் குணமாக்கும். கிருமி களைக் கொல்லும். சிறு குழந்தைகளின் நோய்களுக்கு ஏற்றது. வாத நோய் களுக்கு பூச்சு மருந்தாக உபயோகிக் கலாம். பெண்களுக்கு வரும் மாதவி டாயின் போது ஏற்படும் இடுப்பு வலிக்கு 5 துளி சாற்றுடன் 10 மி.லீ தேன் கலந்து கொடுத்து வெந்நீர் அருந்த வலி நீங்கும். மாதவிடாய் ஒழுங்குபடும்.

**9. ஊமத்தை**

இது அனைத்து வகை புண்களையும் ஆற்றும் தன்மை வாய்ந்தது. வீக்கம், கட்டுக்கள் முதலியவற்றை கரைக்கும் தன்மை வாய்ந்தது. இதுவிடத்தன்மை உடையது. மயக்கத்தை உண்டாக்கும். இதன் பிஞ்சை அவரவர் உமிழ்நீருடன் கரைத்து தடவ புழுவெட்டு நீங்கும். முடிவளரும். வீக்கங்கள் வலி, என்பவற்றிற்கு வாட்டிக்கட்ட குணம டையும்.

**10. எலுமிச்சை**

இதை அரசக்கனி என்பர். இதில் பல வகை உண்டு. எல்லாவற்றின் குணமும் ஒன்று தான். இதன் பொதுவான குணங்களாக பித்தத்தை போக்கும். சித்தம் ஆக்கும். அறிவை வளர்க்கும். வாந்தி, விக்கல், வயிற்றோட்டம் ஆகியவற்றைக் குணமாக்கும். பைத்தியம் தெளிவிக்கும். சித்த மருந்துகளில் துணை மருந்தாக பயன்படும். பிற மருந்துகள் கெடாமல் பாதுகாக்க பயன்படுத்தப்படும். எலுமிச்சை, பழச்சாறு, சீனியும், சிறிது உப்பும் சேர்த்து கொடுக்க வாந்தி,வயிற்றோட்டம் நீங்கும். கண்வலி, காதுவலிக்கு இச்சாறு ஒரு துளிவிட குணமாகும். தோல் நோய்களுக்கு இச்சாற்றில் நிலாவரை வேரை அரைத்து 5-6 நாட்களுக்கு பூசிவர குணமாகும்.

**11. வல்லாரை**

இருஒரு காயகல்ப மூலிகையாகும். இரும்புச்சத்து நிறைந்தது. இதன் பொதுக்குணமாக உடலைத்தேற்றும். மூளை வளர்ச்சிக்கு உகந்தது. சுறு சுறுப்பை உண்டாக்கும். இருமல், சளியை போக்கும். சிறுநீரை பெருக்கும். எரிச்சலை போக்கும். நினைவாற்றலைப் பெருக்கும். மந்தத்தைப்போக்கும். தலைமுடி வளர்ச் சிக்கும், கண் குளிர்மைக்கும் உகந்தது. இதைப்பச்சையாக சம்பல் செய்தோ கறியாக சமைத்தோவாரம் இரு முறையாவது உண்டு வர நலமாகும். இதன் சாறும்பசும்பாலும் 40 நாள் உண்டுவர (காலை, மாலை) பெண்களுக்கு ஏற்படும் வெள்ளை படுதல், உடல்வேட்கை என்பன தீரும். கிருமி களைக் கொல்லும்.

**12. தூதுவளை**

இது ஒரு கபத்தைப்போக்கும் தன்மையுடையது. காதுமந்தம், காது இரைச்சல் என்பவற்றைப் போக்கும். இதன் இலை, பூ, காய், தண்டு என்பவற்றை உணவாகச் சமைத்து உட்கொள்ளலாம். இதனால் சுரம்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இருமல், இளைப்பு, தடிமன், முட்டு முதலியன நீங்கும்.

**13. கொத்தமல்லி**

இது சமையலில் இடம் பெறுவதுடன் மருத்துவக்குணமும் கொண்டது. உடலுக்கும் உடல் உறுப்புகளுக்கும் உர மூட்டுவது அழுகலகற்றுவது, மண் மூட்டுவது, பித்தத்தையும் தணிக்கும். குளிர்ச்சியைத் தரும். சுரத்தைத் தணிக்கும். விக்கலை நீக்கும். தாது நட்டத்தைப் போக்கும். இதயத்தைப் புலப்படுத்தும். வயிற்றுப்பொருமல், ஏப்பம், நெஞ்செரிவு குணமடையும். கட்டி மூலத்திற்கு கொத்தமல்லியை அரைத்து பற்றிட கட்டி கரையும். மூலம் குணமடையும்.

**14. குப்பைமேனி**

இது எரிப்பு குணமுடையது. மூல ரோகத்திற்கு ஒரு சிறந்த மூலிகையாகும். விஷத்தை முறிக்கும். இதன் இலையுடன் மஞ்சள் உப்பு மூன்றும் சேர்த்து அரைத்துப் பூசிவர சொறி, சிரங்கு படை எல்லாவகை புண்களும் குணமடையும். மேனி அழகுடன் விளக்கும்.

**15. துளசி**

இது தெய்வீக மூலிகையாகும். இதில் பலவகையுண்டு. கருந்துளசி, மிக்க குணமுடையது. இதன் பொதுவான குணம் வெப்பத்தை தருவது சளியை வெளி யேற்றுவது. பசியை தூண்டுவது. இதன் சாறை தலைக்கு தடவிவர வலி குறையும். இருமல் முட்டு குறையும். இதை தலைப்பேனுக்கு தலையணையில் இலையைப்பரப்பி படுத்துறங்கினால் பேன் ஒழியும். துளசி இலையை குளிர்ந்த நீரில் ஊறவைத்து பருகிவர சுவாசம் சம்பந்தமான வியாதிகள் குணமாகும்.

**16. தொட்டால் சிணுங்கி**

இது காந்தசக்தி உள்ள மூலிகை யாகும். இதை தொடுகின்ற போது அதன் சக்தி மனிதனுள் மின்சாரம் போல் பாயும். 48 நாள் தவறாது நெரிட்டிவந்தால் உளஆற்றல்பெருகி மனோசக்தி அதிக மாகி சொன்னது பலிக்கும். நினைத்தது நடக்கும் இதன் இலையை களி மண்ணுடன் அரைத்துப் பற்றிட வாதவீக்கம் கரையும்.

**17. நாயுருவி**

இது ஒரு தெய்வீக தன்மையுள்ளது. இதை அட்ட கா்ம மூலிகை என்றும் கூறுவர். சிறுநீர் கோளாறுகளை அகற்றுவதில் முதன்மை பெற்றது. இதுபல வகை நோய்களை குணமாக்கும் ஆற்றல் மிக்கது. இதன் இலையை பருப்புடன் சேர்த்து சமைத்து வாரம் இருமுறை சாப்பிட்டு வர நுரையீரல் பற்றிய சளி குணமாகும்.

இஞ்சியை நாயுருவி இலையில் பொதித்து வைத்து இஞ்சியை எடுத்து விட்டு மறு நாள் இந்த இலையை உலர்த்தி தூள் செய்யவும். இதில் 5 கி. அளவு வெந்நீரில் இருவேளை கொடுத்து வர சுரம் சளி இருமல் குணமாகும்.

**18. நீர் முள்ளி**

நீர் முள்ளி நீர் நிறைந்தஇடங்களில் குத்துச்செடியாக வளரும். சிறுநீரைப் போக்கும். எரிவைத்தணிக்கும். கீழ்காய்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நெல்லி நெருஞ்சில், நாயுருவி போன்று சிறுநீரைப் பெருக்கும். இன்னும் சிறுநீரடைப்பு தாது விருத்தி முதலியவற் றையும் மாற்றும் தன்மையுடையது.

### 19. நெல்லி மரம்

அமிழ்வினை, தீங்கனி, அவ் வைக்கீந்தான், அதிகன், இக்கனி சகா மருந்தாகும் என்பதை இதனால் அறியலாம். இது சிறந்த காயகல்ப மூலிகையுமாகும். சிறந்த மருத்துவக் குணமுடையதாகும். சிறந்த ஊட்டச் சத்தும் நுரையீரலுக்கு வலிமை தருவது. ஈரல், மண்ணீரல், குருதி மண்டலம் ஆகியவற்றின் குறைபாடுகளை நீக்குவது. மலம் இளக்கும். நார்ப்பொருள் உடையது. சிறுநீர் பெருக்குவதில் முருங்கை முள்ளங்கியைப் போன்றது. வெப்பத்தைத் தணிப்பது. நீரிழிவு நோய்க்கு சிறந்தது. (இன்சுலின் சுரப்பை தூண்டுகிறது) இதனால் மேகவெட்டை வாந்தி கண்ணெரிவு தாதுநட்டம், பித்தசுரம், என்பன தீரும். இதனால் செய்யப்பட்ட எண்ணெய் தலைக்கு வைத்து வர முடிவளரும். இளநரை மாறும். கண்ணெரிச்சல் வெப்பம் குறையும். பொடுகு குணமடையும். மாலைக்கண் குணமாகும். இதனை வெறுவயிற்றில் 48 நாள் சாப்பிட்டுவர உடல் ஊட்டம் பெறும்.

### 20. பப்பாளி

இதன் காய், பால், விதை, பழம் மருத்துவக்குணமுடையவை. மிக்க வெப்பத்தை தருவது உயிர்ச்சத்து மிக்கது. மாத விலக்குத்தடையை நீக்கும். தக்காளிப்பூச்சி, கீரிப்பூச்சிகளை வெளி யேற்றும். சிறுநீரைப்பெருக்கும். கொழுப் பைக் கரைத்து உடலை இழைக்க வைக்கும். வாய்ப்புண்ணுக்கு இதன் பாலை தேங்காய் எண்ணெய் கலந்து பூசிவர குணமடையும். இப்பாலுடன் பொரித்த வெண்காரம் சேர்த்து தடவிவர வேர்க்குரு குணமாகும்.

### 21. பாகல்

இது பித்தம் தணிக்கும். பசியை தூண்டும். பலமிளக்கும் பூச்சி கொல்லும். நீரிழிவை போக்கும். பிற மருந்துகளின் குணத்தை முறிக்கும். இது பிறமருந்து களை தவறாக உண்டாலும் பிறர் மருந்துவைத்தாலும் அதை முறித்து விடும். பாகல் இலைச்சாற்றை பிழிந்து உள்ளங்கையில் விட்டால் தயிர்போல் துவர்த்துமருந்து உள்ளது என அறிய லாம். வெளிமூலத்திற்கு இதன் இலையை ஆமணக்கெண்ணெய் பூசி வாட்டி ஆசன வாயில் வைத்துக்கட்ட தீரும். பாகற்காய் சாற்றை தினம் அருந்தி வர மதுமோகம் குணமாகும்.

### 22. பிரண்டை

பிரண்டை இரு வகைப்படும். இது மருத்துவக்குணம் அதிகமுடையது. இது மூலம் வயிற்றுப்புண், தாதுநட்டம் முதலியவற்றைக் குணமாக்கும். இதன் உப்பு சிறந்த குணமுடையது.

### 23. மாதுளை

மாதுளையில் பல வகையுண்டு. இது மருத்துவக்குணமுடையது. உடல் தாதுக்களை கட்டும். பலத்தையும், வித்தையும் கட்டும். வயிற்றுக்கடுப்பு, வயிற்றோட்டம், மாதவிலக்கில் அதிக குருதிப்போக்கு ஆகியவற்றை நீக்கும். மூக்கால் இரத்தம் வடிவதற்கு மாதுளம் பூச்சாறும், அறுகம்புல்லும் சம அளவில் கலந்து மூன்று வேளை கொடுக்க மூக்கால் வடிவது நிற்கும். இதனால் பேதி, வாய்ப்புண், மலக்கழிச்சல், புழுவெட்டு, வயிற்றுப்பூச்சி, மலட்டுத்தன்மை என்பவற்றை நீக்கும். இதன் தூளை கண்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நோய்க்கு அவித்து கண்ணை கழுவிவர நோய்குணமாகும்.

**24. முருங்கை**

இதை பிரம்ப விருட்சம் என்பர். விந்து உற்பத்தி செய்து ஆண்மைக்குறை பாட்டை நீக்கும். உடலின் ஏழு தாதுக்களின் வெப்பத்தையும் தணிக்கும். சிறுநீரைப் பெருக்கும். சளியை அகற்றும். நரம்பு கசிவுகளை தடுக்கும். இது இரும்புச்சத்து மிகுதியானது.குருதியை தூய்மையாக்கும். இதன் இலையை வறுத்து சாப்பிட பித்தமயக்கம், மலச்சிக்கல், கண்நோய், கபம், மந்தம் தீரும். குழந்தைகளுக்கு ஊட்டத்தைக் கொடுக்கும். உடல்வலி அசதியை போக்கும்.

**25. முள்முருங்கு**

இதனை கல்யாண முருங்கை என்றும் கூறுவர். இதன் பொதுவான குணம் வாந்தி, வயிற்றுவலி, பித்தசுரம், மலச்சிக்கல், உடல்வெப்பம், வேர்க்காடு, வயிற்றுப்புழு ஆகியவற்றை நீக்கும். மாதவிடாய்வலி, சீதபேதி, மலக்கிருமி, வயிற்றுக்கடுப்பு, சொறி, சிரங்கு, அஸ்மா என்பவற்றை நீக்கும். பூச்சிகளைக் கொல்லும். சரும வியாதிகளை கொல்லும்.

**26. மணித்தக்காளி**

கீரை வகையில் மணித்தக்காளி மிகவும் சிறந்ததாகும். இதன் சாறு வயிற்றுப் புண்ணைக் கொல்லும். கறி சமைத்துச் சாப்பிட குளிர்ச்சியைத் தரும். மலக்கிருமிகளைக் கொல்லும். மலச்சிக் கலை தவிர்க்கும். கண்ணிற்கு நல்லது. உடல்வெப்பத்தை தணிக்கும். மூலநோய் நீரிழிவு, உடல் ஊளைச்சத்தையும் கரைத்துவிடும். சிறுநீரக கோளாறு நீக்கும். சளியை அகற்றும்.

இன்று நாம் எமது மண்ணில் மேலே கூறப்பட்ட மூலிகைகளை விட நமது பாவனையில் அன்றாடம் சமையலில் பயன்படும் சீரகம், வெந்தயம், கடுகு, மிளகு, மிளகாய், மஞ்சள், உப்பு, போன்ற எல்லாவகையான பொருட்களும் வாசனைப்பொருட்களும் பலவகையான மருத்துவக் குணங்களை உடையது. இன்ன மூலிகை எமது உடலுக்கு என்ன நன்மையைச் செய்கின்றது என அறியாமலே எமது மக்கள் தங்கள் பாவனைக்கு பயன்படுத்தி வருகின் றார்கள்.

எமது மண்ணில் எண்ணற்ற மூலிகைகள் இருக்கின்றன. அவற்றில் சிலவற்றைத் தான் நாம் அறிந்து நமது அன்றாட வாழ்க்கைக்கு உணவாகவும் மருந்து ரீதியாகவும் உபயோகிக் கின்றோம். ஏனைய புல், பூண்டு, என்ற பெயரோடு அழிந்து போகின்றன. மிருக இனத்தில் ஆடு பொதுவாக ஆடு தீண்டாப்பாலை என்னும் ஒரு மூலிகையை தவிர ஏனையவற்றை எல்லாம் சாப்பிட்டு தனது ஆட்டுப்பாலை நோய்க்கு மிகவும்உயர்ந்த ஒரு பொருளாகவும், ஊட்டச்சத்துடன் மக்களுக்கு கொடுக்கும். பொதுவாக சப்த தீவுகளில் பெரும் தொகையான மூலிகை வளங்கள் உண்டு. அவை அந்தக் காலத்தில் பாவனைக்கு வைத்தியர்களால் பிரயோசனப் படுத்தப் பட்டன. ஆனால் இன்று நாட்டுச் சூழ்நிலையில் மக்கள் இடம்பெயர்ந்து போய் எல்லா வளங்களும் அழிந்து போய்விட்டன. ஆனாலும் சித்த மருத்துவம் இன்றும் வளர்ந்து மக்களுக்கு பெரும் நன்மைகள் செய்து செழிப்ப டையும் என்பது திண்ணம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யோகமும் வாழ்வும்

உடல், உள, சமூக, ஆன்மீக வாழ் விற்கான சிறந்த பயிற்சி யோகாசன மாகும். யோக காலம் இருந்தால் மட்டும் தான் ஒருவனால் யோகத்தை உணரமுடியும். யோகப்பயிற்சியை எமது சரீரம் விரும்புகின்றது. காரணம் அவ் உடலின் ஆரோக்கியத்தை நம்பித்தான் (உயிர்) ஜீவாத்மா இருதயத்தினுள் குடியிருக்கிறான். உளம் நலிவுற்றால், உடலில் பிணி தோன்றுகிறது. இதை எண்ணி எண்ணியேஉளம் மீண்டும் மோசமான பாதிப்புக்குள்ளாகின்றது.



கிருமிகளால் தொற்றாத (27) இருபத்தேழு வகையான நோய்களை சில ஆசனங்கள் மூலம் விரைவில் குணமாக் கலாம் என விஞ்ஞானம் நிரூபித்துள்ளது. கிருமிகளும் அவனது சரீரத்தில் தொற்றாது காரணம் அதிக அளவு பிராணசக்தியினால், பிராணாயாம பயற்சினால் கிருமிகள் அழிக்கப் படுகின்றது.

எமக்குத் தெரிந்த ஒருசில ஆசனங் களை மட்டும் தெரிந்து எடுத்து செய்வது தவறாகும். ஒவ்வொரு ஆசனத்திற்கும் ஒவ்வொரு மாற்று ஆசனம் உண்டு.

யோகாசனம் செய்யும் முன்னர் முதலில் உடலைத்தளர்த்தும் பயிற்சிகள் (யோகக்கிரிகா) Loosning Exercises) செய்யப்படல் வேண்டும். பின்னர் கழிவு தேக்கநிலை வாயுக்களை வெளியேற்றும்

V. N. **சிவனேஸ்வரராஜா**
*யோகா போதனாசிரியர்,*
*(யோகக்கேந்திரா,*
*பெங்களூர் 51-29)*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"முக்ததவுத்தி" என்னும் பயிற்சி மூலம் வெளியேற்றல் வேண்டும். பின்னர் இருக்கையில் தெண்டா ஆசனத்தில் இளைப்பாறல் வேண்டும். அதன் பின்னர் தான் சுவாசப்பயிற்சிகள் கட்டாயம் செய்யப்படல் வேண்டும்.

1வது பயிற்சி கபாலபதி 1 நிமி 120 ஸ்ரோக் எண்ணிக்கை 1 நிமிடம் வரை 2வது பயிற்சிபஸ்திரிகா விரைவான சுவாசம் மாற்றும் பயிற்சி. மூன்றாவது நாடிசுத்தி பயிற்சி. நான்காவது சதந்தா என்னும் குளிர்மைப்படுத்தும் பயிற்சி. ஐந்தாவது அதிர்வுக்கலை பயிற்சி. இப்பயிற்சியின் பின்னரே ஹடயோகம் (யோகாசனப் பயிற்சிகள் செய்யப்பட வேண்டும்.) ஒவ்வொரு ஆசனமும் 1 நிமிடம் உட்சுவாசம், வெளிச்சுவாசத்தின் உதவியுடன் செய்யப்படல் வேண்டும். இதை ஒரு ஆசிரியர் மூலம் தெரிந்து கொள்ளல் வேண்டும். சுவாசத்துடன் செய்யாத பயிற்சிகள் யாவும் வீண் புஸ்தகங்கள், ரி.வி, பத்திரிகையைப் பார்த்துவிட்டு பயிற்சிகள் செய்யக்கூடாது.

யோகாசனப்பயிற்சியால் நாலாயிரத்து நாநூற்றி நாற்பத்தெட்டு (4448) நரம்புகளும் 72000) எழுபத்தியிரண்டாயிரம் ஜீவநாளம் நாடிகளும் தூய்மையடைகின்றது. தன்கடமையைச் சரிவர செய்கின்றது. யோகப்பயிற்சிகள் யாவும் உடலின் உட்புற ஜீவகருவிகளுக்கே யாகும். இவையாவும் சிறந்த முறையில் கடமையாற்றவே, முன்பக்க வளைவு, பின்பக்க, பக்கவாட்டில் தலைகீழாக நிற்றல், உடலை எமது தொடைகள், கைகளால் இறுக்குதல். அதாவது எமது சரீரத்தை எமது வெளிப்புற உறுப்புகளால் இறுக்க மடையச் செய்து அவற்றின் மந்தநிலையான இயக்கத்தை சீராக்கி சிறந்த முறையில் சுறுசுறுப்பாக இயங்கவைக்கும் தொழிற்பாட்டுக்கான பயிற்சியே யோகப் பயிற்சியாகும்.

இதர விளையாட்டுக்கள், பாரம் தூக்கும் பயிற்சிகள், கராத்தே, யூடோ, குங்பூ பயிற்சிகள் யாவும் வாலிப வயதினர் ஆசையில் கற்கும் ஒரு விளையாட்டுக் கலை. அவை உடல் உள ஆரோக்கிய, கல்வியை தரா. குறிப்பிட்ட வயதின் பின் செய்ய முடியாது ஆனால் யோகப்பயிற்சி ஒன்று மட்டுமே இறுதிமூச்சு இருக்கும் வரை இந்த உலகில் செய்யக்கூடிய ஒரே பயிற்சி என்பது உண்மையாகும். இதை தற்போது வெளிநாட்டவர் உணர்ந்து செய்கின்றார்கள். நோய் இன்றிவாழ நமது நாட்டினர் அப்பயிற்சிகளைச் செய்யாமல் அவர்கள் அனுப்பும் மருந்துச் குளிசைகளை போட்டவண்ணம் இருக்கின்றார்கள்.

யோகம் ஒரு சமயத்தைப் பரப்புவது அல்ல. அது செய்வதற்கு ஆண், பெண், இளையோர், முதியோர்என்ற வரம்பும் இல்லை. எல்லோரும் நலமாக வாழ வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நீரிழிவு
# (Diabetes)

**நீரிழிவு என்றால் என்ன?**

எமது உடலின் கணையப்பகுதியில் இருந்து இன்சுலின் சுரக்கிறது. உடலிலுள்ள சீனிச்சத்தின் அளவை சமனிலையில் வைத்திருக்க இது உதவுகிறது. சாதாரண ஒருவரில் 100 மி.லீ இரத்தத்தில் சீனிச்சத்து ஏறத்தாள 80 மி.கி. முதல் 120 மி.கி வரை அமைந்துள்ளது. இதன் அளவு உயர்ந்து காணப்படுவதை நீரிழிவு நோயாக கருதப்படுகிறது.

இதன் மறுபெயர்கள் - மதுமேகம், இனிப்புநீர், சர்க்கரைவியாதி எனவும் அழைக்கப்படும்.

**நீரிழிவு நோய்க்கான காரணங்கள்.**

1. பரம்பரை
2. மன அழுத்தம்
3. உடல் பருமன் கூடியவர்கள்
4. சீனிச்சத்துள்ள உணவை அளவிற்கு அதிகம் உண்ணல்.
5. சில நோய்களின் தாக்கம்
6. இயற்கையில் இன்சுலின் சுரப்பு குறைபாடு உடையவர்கள்.
7. போதிய தேகஉழைப்பு இல்லாமை

**நீரிழிவு நோய்க்கான குறி குணங்கள்.**

1. சிறுநீர் அடிக்கடி அதிகமாக கழிதல்.



டாக்டர் திருமதி.நா.புருசோத்தமன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

2. தாகம்.
3. அதிக பசி
4. காரணமின்றி உடல் எடை குறைதல்
5. ஆறாத நாட்பட்ட புண்கள்
6. உடல் உறுப்புக்களில் அரிப்புத் தோன்றல்.
7. களைப்பு
8. கை, கால்கள் மரத்துப்போதல்
9. கண்பார்வை மங்குதல்
10. இனிப்புப்பண்டங்களில் கூடிய நாட்டம்.

என்றாலும் ஆரம்பநிலையில் 40% நோயாளிகளுக்கு இந்த அறிகுறிகள் ஏதுமே இருப்பதில்லை. சந்தர்ப்பவசமாக இரத்தத்தையோ சிறுநீரையோ பரி சோதிக்கும் போதே இந்நோய் இருப்பது கண்டு பிடிக்கப்படுகின்றது.

சிறுவர்களில் ஏற்படுகின்ற நீரிழிவு நோய் இது பிறப்பிலோ பிறந்து சில காலத்தின் பின்போ ஏற்படும். இதற்கு காரணம் அவர்களிற்கு இன்சுலின் சுரப்பு குறைவதாகும். இந்நோயாகளிற்கு இன்சுலினை சமநிலையில் வைத்திருக்க சிகிச்சை அளிக்கப்பட வேண்டும்.

உடல் பருமன் கூடிய கர்ப்பிணித் தாய்மார் சிலரில் நீரிழிவு நோய் காணப்படுகிறது. பிரசவத்தின் பின் இக்குறிகுணங்கள் அற்றுவிடுகின்றது.

## நீரிழிவுநோயைக் கண்டுபிடிப்பதற்குரிய பரிசோதனைகள்

1. சிறுநீர்ப் பரிசோதனை
2. இரத்தப் பரிசோதனை

1. சிறுநீர்ப் பரிசோதனை செய்ய காலை எழுந்தவுடன் கோப்பி, தேனீர் அருந்துவதற்கு முன்னர் கழிக்கும் சிறுநீரை சுத்தமான சிறுகுப்பியில் எடுத்தல்.

## பரிசோதனைக்கு தேவையான பொருட்கள்

1. பரிசோதனைக் குழாய்.
2. பெனடிக்ட் கலவை (நீலநிறம்)

5 மி.லி. பெனடிக்ட் கலவையை பரிசோதனை குழாயில் எடுத்து அதனுள் எடுக்கப்பட்ட நோயாளியின் சிறுநீரில் 8 துளிகள் விட்டு பரிசோதனை விளக்கு அல்லது மெழுகுதிரியில் சூடேற்ற வேண்டும். அப்பொழுது பெனடிக்ட் கலவையின் நீலநிறம் மாறாவிட்டால் சிறுநீரில் சர்க்கரைச்சத்து இல்லை. அவ்வாறு இல்லாமல் பெனடிக்ட் கலவையின் நிறம் மாறலாம்.

இளம்பச்சை நிறமாக மாறினால் - 0.1 - 0.5%
மஞ்சள் நிறமாக மாறினால் - 1.0 - 2.0%
செங்கற்சிவப்பு நிறமாக மாறினால் - 2 % உம் அதற்கு மேலும்
சீனிச்சத்து இருப்பதாக கருதப்படும்.

இருப்பினும் இதை ஒரு திருப்திகரமான பரிசோதனையாக கருதமுடியாது. சீனிச் சத்து இருப்பதை மட்டுமே அறியமுடியும். இரத்தப் பரிசோதனை மூலமே இதை பூரணமாக உறுதிப்படுத்த முடியும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

2. **இரத்தப் பரிசோதனை**

1. இது காலையில் வெறுவயிற்றுடன் இருக்கும் போது நோயாளியின் இரத்தத்தை எடுத்து செய்யப்படுவது. இதில் 100 மி.லீ இரத்தத்தில் 80-120 மி.கி. அளவு சீனிச்சத்து இருந்தால் இது சாதாரண நிலையாகும். இதைவிட அதிகரித்த நிலையே நோயாக கருதப்படுகிறது.

2. நோயாளி உணவு உண்டபின் 1½ மணித்தியாலத்தில் நோயாளியின் இரத்தத்தை எடுத்து செய்யப்படுவது. இதில் 100 மி.லீ இரத்தத்தில் 180 மி.கி. அளவிற்கு மேற்பட்டால் இரத்தத்தில் சீனிச்சத்து கூடுதலாக உள்ளது என்பதை உறுதிப்படுத்தலாம்.

## *சிகிச்சை*

இந் நோயை முற்றாக குணமாக்க முடியாது. கட்டுப்பாட்டில் வைத்திருக்கலாம்.

1. **உணவுக் கட்டுப்பாடு**

நோயாளிக்கு உணவுக்கட்டுப்பாடு மிக மிக அவசியமானது. சீனிச்சத்துள்ள உணவுகள், கிழங்கு வகைகள், பழவகைகள் முக்கியமாக தவிர்க்கப்பட வேண்டும்.

கொழுப்புச்சத்துள்ள உணவு வகைகளை குறைத்துக் கொள்ளல். அதிலும் இரத்த அழுத்த நோயாளிகள் கொழுப்பு உணவுகளை தவிர்த்தல் வேண்டும்.

உணவில் தேங்காய் எண்ணெய்க்கு பதிலாக மரக்கறி எண்ணெய் அல்லது சூரியகாந்திப்பூ எண்ணெய் சேர்க்கலாம்.

புரத உணவுகளான கடலை, பயறு, உழுந்து போன்றவற்றை அதிகம் உணவில் சேர்த்தல். அத்துடன் குரக்கன், ஆட்டாமா, றவை, வரகு போன்றவற்றையும் கூடுதலாக உணவில் சேர்த்தல்.

40 வயதிற்கு மேல் நீரிழிவு நோய் ஏற்பட்டவர்கள் உணவுமுறையால் கட்டுப்பாட்டிற்குள் வைத்திருக்க முடியும். ஆனால் இம்முறையை தனது வாழ்நாள் முழுதும் கடைப்பிடிக்க வேண்டும்.

## *அவுடதங்கள்*

தனி அவுடதங்கள்

1. சிறுகுறிஞ்சா
2. சீந்தில் சர்க்கரை
3. கடல்ராஞ்சிப்பட்டை
4. முடக்கொத்தான்
5. பாவற்காய்
6. நாவற்பட்டை
7. கறிவேப்பிலை
8. வெந்தயம்
9. விளாத்திவேர்

a) மதுமேக சூரணம் : 3 விரல் எடை காலை, மாலை சாப்பாட்டிற்குப் பின் வெந்நீருடன்.

b) மதுமேகஹரணி : இரு தேக்கரண்டி காலை, மாலை சாப்பாட்டிற்கு முன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

c) வசந்த குசுமாகர மாத்திரை : 1 -2 காலை, மாலை சாப்பாட்டிற்கு முன்

நாவல்கொட்டை சூரணம் : 3 விரல்எடை காலை, மாலை சாப்பாட்டிற்குப் பின்

## இந்நோயின் பக்கவிளைவுகளாக ஏற்படும் அழல்வாதத்திற்கு.

1. சங்கம்குப்பிச்சாறு, பசுபால், சமஎடை எடுத்து காலை, மாலை அருந்தல். அல்லது வில்வம் இலை இரசத்தை சமஎடை பாலுடன் சேர்த்து அருந்தல்.
2. அவகெந்தி அல்லது அழுதுசர்க்கரை சூரணம் 3 விரல் எடை காலை மாலை சாப்பாட்டிற்குப் பின்.

நோயாளியில் தாகம் அதிகரித்திருப்பின் ஆவரசம் பூவை நிழலில் உலர்த்தி பொடியாக்கி வெந்நீரில் ஊறவிட்டு குடிக்கலாம்.

## நீரிழிவு நோயாளிகளுக்கான நாளாந்த உணவு அட்டவணை.

#### காலை உணவு

தவிட்டுப்பாண் 2 துண்டு, பட்டர், மாஜரினுடன் அல்லது இடியப்பம் 3, தோசை 3, இட்டலி 3 இவற்றுள் ஒன்று சம்பலுடன்.

கடலை வகை, பப்பாசிப்பழம் சிறுதுண்டு, பால்த்தேனீர் சீனி இன்றி.

#### காலை 10 மணி

கிறிம்கிறேக்கற் பிஸ்கட் 2, தேனீர் சீனி இன்றி.

#### மதிய உணவு

சோறு 2 அகப்பை (சிறியது) கீரை வகை, மரக்கறி வகைகள், அதிகம் சேர்த்தல், மீன் அல்லது இறைச்சி 1 துண்டு முட்டை 1, பப்பாசிப் பழம் சிறுதுண்டு அல்லது புளிவாழைப்பழம் 1.

#### மாலை 4 மணி

கிறிம் கிறைக்கற் 2 அல்லது தவிட்டுப்பாண் 2 துண்டு அல்லது அவித்த கடலைவகை அல்லது உழுந்துவடை 2. பால்த் தேனீர் சீனி இன்றி.

#### இரவு உணவு

குரக்கன் பிட்டு, ஆட்டாமா, கோதுமை, றவை இவற்றில் தயாரித்த உணவுகள், மரக்கறிவகை, மீன் 1 துண்டு.

நீரிழிவு நோய் மறைந்திருந்து தாக்கும் வியாதியாகும். இதை அறிந்து தகுந்த சிகிச்சை அளிக்காவிடின் இதன் பக்கவிளைவுகளாக.

1. கண் பாதிப்பு
2. இருதய - இரத்தநாள நோய்
3. இரத்த அழுத்தம் காரணமாக பாரிசவாதம் ஏற்படலாம். இறுதியில் இருதய வழுவல் (Heart Attack) காரணமாக மரணம் சம்பவிக்கலாம்.
4. சிறுநீரக வியாதிகள்
5. கிருமித்தொற்று
6. மூளை - நரம்புமண்டல தாக்கம்
7. மலட்டுத்தன்மை
8. இறுதியில் மயக்கநிலையும் ஏற்படலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**பராமரிப்பு**

இவ்வியாதி உடையவர்கள் கை, கால்களை கவனமாக பராமரிக்க வேண்டும். முக்கியமாக பாதங்களை கழுவி ஈரத்தன்மை இன்றி சுத்தமாக வைத்திருக்க வேண்டும். பாதணி அணிய வேண்டும்.

நாட்பட்ட நோயாளிக்கு புண்கள் ஏற்பட்டு நீண்டநாட்களாக ஆறாதுவிடின் இதன்மூலம் பாதங்களை இழக்கவேண்டிய நிலையும் ஏற்படும்.

நீரிழிவு நோய் இருந்து போதிய சுகாதாரம் பற்றிய கல்வி அறிவு இல்லாததால் சிலர் நீரிழிவு ரோகத்தின் உபத்திரவங்கள் ஏற்பட்டபோதே வைத்தியரை நாடுகின்றார்கள். ஆகவே பொதுமக்கள் இந்நோயாளிகளினால் ஏற்படும் பெரும்பாதிப்புக்களை தவிர்ப்பதற்கு சுகாதார கல்வி அறிவை பெற்றிருத்தல் அவசியம்.

நீரிழிவு நோய் ஒரு ஆட்கொல்லி நோயல்ல. தகுந்த சிகிச்சையுடனும், மனக்கட்டுப்பாட்டுடனும் இருந்தால் ஆரோக்கியமாக வாழலாம்.

"நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம்".

## உலக நாடுகள் சிலவற்றின் தலைநகரங்களும் அங்குள்ள மொழிகளும்

| நாட்டின் பெயர் | தலைநகரம் | மொழி |
|---|---|---|
| அவுஸ்திரேலியா | கன்பெரா | ஆங்கிலம் |
| கனடா | ஒட்டோவா | ஆங்கிலம், பிரெஞ் |
| சீனா | பீக்கிங் | மண்டாரின் |
| டென்மார்க் | கொபநேகன் | டெனிஷ், ஆங்கிலம் |
| எகிப்து | கெய்ரோ | அராபிக் |
| அமெரிக்கா | வாஷிங்டன் | ஆங்கிலம் |
| இங்கிலாந்து | லண்டன் | ஆங்கிலம் |
| தாய்லாந்து | பாங்கொக் | தாய் |
| சுவிற்சலாந்து | பேர்ணி | ஜேர்மனி,பிரெஞ் |
| சிங்கப்பூர் | சிங்கப்பூர் நகரம் | மலாய்,சைனீஸ்,தமிழ் |
| பாகிஸ்தான் | இஸ்லாமாபாத் | உருது,பஞ்சபி,ஆங்கிலம் |
| ஸ்ரீலங்கா | ஸ்ரீஜெயவர்த்தனபுரம் | தமிழ்,சிங்களம்,ஆங்கிலம் |
| இந்தியா | புதுடில்லி | ஹிந்தி,உருது,வங்காளம் தெலுங்கு,தமிழ் |
| மலேசியா | கோலாலம்பூர் | மலே,சீனம்,தமிழ் |
| நேபாளம் | காத்மண்டு | நேபாளி |
| ஈரான் | தெகிரான் | பெர்சியன் |
| ஈராக் | பக்தாத் | அராபிக் |
| ஜப்பான் | ரோக்கியோ | ஜப்பானிஷ் |
| நோர்வே | ஒஸ்லோ | நோர்வேஜியன் |
| லிபியா | திரிப்பொலி | அராபிக் |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தீவகம் தெற்கின் சிறப்புக்களை யாவருக்கும் அறியத்தரட்டும்



கட்டட நிர்மாணிப்பாளர்



கொமினிக்கேசன்

இல: 08, நவீன சந்தை
பலாலி வீதி, திருநெல்வேலி

தொலைபேசி:
021-2222983/84

இல: 24/1, இராமலிங்கம் வீதி,
திருநெல்வேலி.

பிரதேச மலர் சிறப்பிக்க வாழ்த்துகிறோம

குறைந்த செலவில் விரைவாக பொருட்களை
ஏற்றி இறக்க (யாழ் - கொழும்பு)

பிரகாஸ்
ஏஜென்சி

பிறிமா கோழித்தீன் உற்பத்தியாளர்களின்
யாழ் விநியோகஸ்தர்கள்



இல: 457, கே.கே.எஸ் வீதி,
யாழ்ப்பாணம்.
தொ.பேசி: 021-2222145/2958

இல: 221, டாம் வீதி,
கொழும்பு - 12
தொ.பேசி: 01-543310

ஆனையிறவு உப்பின் யாழ் குடாநாட்டுக்கான
ஏக விநியோகஸ்தர்களும்,
கிறவுண் பிஸ்கட் விநியோகஸ்தர்களும்

பரதன்

மல்ரி சேவிஸ்

அனைத்து வகையான விமான பயண
சிட்டைகளுக்கும், மற்றும்
தொலைத் தொடர்பு சேவைகளுக்கும்
நீங்கள் நாடவேண்டிய இடம்

110, மானிப்பாய் வீதி,
யாழ்ப்பாணம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


தீவுகள் தெற்கின் சிறப்பொலிக்க வாழ்த்துகிறோம்

தரமாக இலத்திரனியல் மின்சாரப் பொருட்களுக்கு

யாழ் நகரில்....

# கரசன்ஸ் எலக்ரிக்கல்ஸ்





இல: (4) 14 ஸ்ரான்லி வீதி,
ஜே.எம்.சி கட்டடம்,
யாழ்ப்பாணம்.

தொலைப்பேசி
021-2223128

பிரதேச மலர் சிறக்க எம் இதயம் கனிந்த நல்வாழ்த்துக்கள்

அனைத்து வகையான பாடசாலை உபகரணங்கள்,
புத்தகங்கள், கொப்பிகள் என்பனவற்றிக்கு



# பூபாலசிங்கம் புத்தகசாலை



இல:4 ஆஸ்பத்திரி வீதி,
(பஸ்நிலையம் முன்பாக )
யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வேலணை பிரதேச சபையின் அபிவிருத்தி வேலைத்திட்டங்கள் 1996-2003

| தொ. இல. | வேலை விபரம் | அமைவிடம் | நிதி ஆண்டு | மூலம் | நிதி ஒதுக்கீடு 1000 |
|---|---|---|---|---|---|
| 01 | எருமைப்பட்டி வீதி திருத்தம் | நயினாதீவு | 1996 | சி.பி.ஜி | 50,000 |
| 02 | சிரஞ்சிக்குள வீதி திருத்தம் | நயினாதீவு | 1996 | சி.பி.ஜி | 75,000 |
| 03 | கற்புலம் வீதி திருத்தம் | நயினாதீவு | 1996 | சி.பி.ஜி | 75,000 |
| 04 | மலசலகூடத்திருத்தம் | நயினாதீவு | 1996 | சி.பி.ஜி | 200,000 |
| 05 | பொது நூலகத்திற்கு நூல் கொள்வனவு | நயினாதீவு | 1996 | சி.பி.ஜி | 100,000 |
| 06 | பொது நூலகத்திற்கு நூல் கொள்வனவு | நயினாதீவு | 1996 | சி.பி.ஜி | 50,000 |
| 07 | மணியகாரன் வீதி திருத்தம் | வேலணை | 1997 | சி.பி.ஜி | 75,000 |
| 08 | முத்தவெளி வீதி திருத்தம் | புங்குடுதீவு | 1997 | சி.பி.ஜி | 50,000 |
| 09 | சேவியர் வீதி திருத்தம் | புங்குடுதீவு | 1997 | சி.பி.ஜி | 50,000 |
| 10 | அந்தியேட்டி மடத்திருத்தம், (சாட்டி) | வேலணை | 1997 | சி.பி.ஜி | 75,000 |
| 11 | பொது நூலகத்திற்கு தளபாடம் கொள்வனவு | வேலணை | 1997 | சி.பி.ஜி | 50,000 |
| 12 | மீன் சந்தை அமைத்தல் | வேலணை | 1997 | சி.பி.ஜி | 150,000 |
| 13 | ஐயனார் ச.ச. நிலைய முன்பள்ளி கட்டிடம் அமைத்தல் | வேலணை | 1997 | டி.சி.பி | 125,000 |
| 14 | அம்மன்கோவிலடி ச.ச.நி.முன்பள்ளி கட்டிடம் அமைத்தல் | வேலணை | 1997 | டி.சி.பி | 20,000 |
| 15 | அம்மன்கோவிலடி ச.ச.நி. ரி.வி.,ஜெனரேட்டர் கொள்வனவு | வேலணை | 1997 | டி.சி.பி | 100,000 |
| 16 | ஊரதீவு முன்பள்ளிக்கு விளையாட்டு உபகரணம் கொள்வனவு | புங்குடுதீவு | 1997 | டி.சி.பி | 15,000 |
| 17 | ஊரதீவு ச.ச.நிலையத்திற்கு கட்டிடம் அமைத்தல் | புங்குடுதீவு | 1997 | டி.சி.பி | 25,000 |
| 18 | ஊரதீவு ச.ச.நிலைய நூலக கட்டிடம் அமைத்தல் | புங்குடுதீவு | 1997 | டி.சி.பி | 15,000 |
| 19 | பாரதி ச.ச.நிலைய முன்பள்ளி உபகரணம் கொள்வனவு | புங்குடுதீவு | 1997 | டி.சி.பி | 20,000 |
| 20 | பாரதி நூல் நிலைய கட்டிடம் அமைத்தல் | புங்குடுதீவு | 1997 | டி.சி.பி | 15,000 |
| 21 | பாரதி ச.ச.நிலைய கட்டிடம் அமைத்தல் | புங்குடுதீவு | 1997 | டி.சி.பி | 20,000 |
| 22 | பாரதி ச.ச. நிலைய விளையாட்டு உபகரணம் அமைத்தல் | புங்குடுதீவு | 1997 | டி.சி.பி | 10,000 |
| 23 | அம்பிகை நகர் ச.ச. நிலைய கட்டிடம் அமைத்தல் | வேலணை | 1997 | டி.சி.பி | 75,000 |
| 24 | நாய் பிடி வண்டில் செய்தல் | வேபிச. | 1998 | சபைநிதி | 10,000 |
| 25 | நாய் பிடி வண்டில் செய்தல் | வேபிச. | 1998 | சி.பி.ஜி | 25,000 |
| 26 | போக்கத்தை வீதி திருத்தம் | புங்குடுதீவு | 1998 | சி.பி.ஜி | 50,000 |
| 27 | சோனகன் காடு உபவீதி திருத்தம் | ம.கும்பான் | 1998 | சி.பி.ஜி | 50,000 |
| 28 | யுவானியர் கடற்கரை வீதி | அ.பிட்டி | 1998 | சி.பி.ஜி | 50,000 |
| 29 | புதிய வீதி | வேலணை | 1998 | சி.பி.ஜி | 50,000 |
| 30 | கொல்களம் அமைத்தல் | புங்குடுதீவு | 1998 | சி.பி.ஜி | 75,000 |
| 31 | பொதுச் சந்தை அமைத்தல் | நயினாதீவு | 1998 | சி.பி.ஜி | 50,000 |
| 32 | பொதுச் சந்தை அமைத்தல் | புங்குடுதீவு | 1998 | சி.பி.ஜி | 50,000 |
| 33 | ஞானவைரவர் ச.ச.நிலைய குடிநீர் கிணறு அமைத்தல் | நயினாதீவு | 1998 | டி.சி.பி | 25,000 |
| 34 | சென் புனித பிலிப்பு ச.ச. நிலைய புனரமைப்பு | அ.பிட்டி | 1998 | டி.சி.பி | 140,000 |
| 35 | திருவள்ளுவர் ச.ச.நிலைய புனரமைப்பு | வேலணை | 1998 | டி.சி.பி | 125,000 |
| 36 | செட்டிபுலம் ச.ச. நிலைய புனரமைப்பு, தளபாடம் கொள்வனவு | வேலணை | 1998 | டி.சி.பி | 140,000 |
| 37 | மண்டைதீவு ச.ச நிலைய புனரமைப்பும், தளபாட வழங்கல் | ம.தீவு | 1998 | டி.சி.பி | 140,000 |
| 38 | கெட்டில் சுரவில் வீதி | வேலணை | 1998 | டி.சி.பி | 250,000 |
| 39 | நாவலர் ச.ச.நிலைய பாலர் பாடசாலை தளபாடம் வழங்கல் | நயினாதீவு | 1998 | டி.சி.பி | 115,000 |
| 40 | கந்தன் கடவை வீதி திருத்தம் | வேலணை | 1998 | சபைநிதி | 75,000 |
| 41 | நீர் விநியோக வீதி | வேலணை | 1998 | ரான் | 260,000 |
| 42 | ஆயுள்வேத வைத்தியசாலை திருத்தமும், தளபாட வழங்கல் | நயினாதீவு | 1998 | ரான் | 300,000 |
| 43 | சீற்பனை வீதி திருத்தம் | வேலணை | 1998 | ரான் | 400,000 |
| 44 | சந்தை கடை திருத்தம் | வேலணை | 1998 | ரான் | 360,000 |
| 45 | குடிநீர் கிணறுகள் திருத்தம் | வேபிச | 1998 | ரான் | 300,000 |
| 46 | தென்னை மர நடுகை | வேபிச | 1998 | வி.நிதி | 300,000 |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | | | |
|---|---|---|---|---|
| 47 மரமுந்திரிகை நடுகை | வேபிச | 1998 | விமூநிதி | 400,000 |
| 48 பெருங்காடு ச.ச.நிலையபுனரமைப்பும்,தளபாடம் வழங்கல் | புங்குடுதீவு | 1998 | விமூநிதி | 50,000 |
| 49 அண்ணா ச.ச.நிலையபுனரமைப்பும், தளபாடம்வழங்கல் | நயினாதீவு | 1998 | விமூநிதி | 100,000 |
| 50 கணேசா ச.ச.நிலைய பாலர்பாடசாலை புனரமைப்பும், தளபாடம் | நயினாதீவு | 1998 | விமூநிதி | 100,000 |
| 51 முஸ்லிம் இளைஞர் விளையாட்டுக்கழக கட்டிடஅமைப்பு | நயினாதீவு | 1998 | விமூநிதி | 150,000 |
| 52 மணிபல்லவ கலாமன்ற கட்டிட புனரமைப்பு | நயினாதீவு | 1998 | விமூநிதி | 100,000 |
| 53 மணிபல்லவ கலாமன்றத்திற்கு ரீ.வி.,மின்பிறப்பாக்கி வழங்கல் | நயினாதீவு | 1998 | விமூநிதி | 115,000 |
| 54 ஞானவைரவர் ச.ச. நிலைய கட்டிட புனரமைப்பு | | 1998 | விமூநிதி | 100,000 |
| 55 மீன் சந்தை அமைத்தல் | அல்லப்பிட்டி | 1998 | விமூநிதி | 100,000 |
| 56 பாலர் பாடசாலை அமைத்தல் | அல்லப்பிட்டி | 1998 | விமூநிதி | 50,000 |
| 57 பாலர் பாடசாலை அமைத்தல் | புங்குடுதீவு | 1998 | விமூநிதி | 50,000 |
| 58 மத்திய மீன் சந்தை புனரமைப்பு | நயினாதீவு | 1998 | விமூநிதி | 50,000 |
| 59 தெற்கு மீன் சந்தை புனரமைப்பு | நயினாதீவு | 1998 | விமூநிதி | 90,000 |
| 60 கபந்தீஜி ச.ச. நிலைய கட்டிடம், தளபாடம் வழங்கல் | | 1998 | விமூநிதி | 100,000 |
| 61 அண்ணா ச.ச. நிலைய கட்டிட புனரமைப்பு | | 1998 | விமூநிதி | 50,000 |
| 62 திருவள்ளுவர் ச.ச. நிலைய பாலர் பாடசாலை உபகரணம் | | 1998 | விமூநிதி | 40,000 |
| 63 மணிபல்லவ ச.ச நிலைய திருத்தம் | நயினாதீவு | 1998 | விமூநிதி | 40,000 |
| 64 நேதாஜி ச.ச.நிலைய பாலர் பாடசாலை உபகரணம் | | 1998 | விமூநிதி | 30,000 |
| 65 விநாயகர் ச.ச.நிலைய பாலர் பாடசாலை உபகரணம் | | 1998 | விமூநிதி | 50,000 |
| 66 ஐயனார் ச.ச.நிலைய பாலர் பாடசாலை | | 1998 | விமூநிதி | 30,000 |
| 67 அம்பிகை நகர் பாடசாலை | வேலணை | 1998 | விமூநிதி | 30,000 |
| 68 சனசமூக நிலையங்களுக்கு நூல் வழங்கல் | பொது | 1998 | விமூநிதி | 100,000 |
| 69 அலுவலக உபகரணம், தளபாடம், இயந்திரம் கொள்வனவு | பொது | 1998 | விமூநிதி | 600,000 |
| 70 வாகீசர் ச.ச நிலைய திருத்தம் | அல்லப்பிட்டி | 1999 | சி.பி.ஜி | 100,000 |
| 71 நேதஜி ச.ச. நிலைய திருத்தம் | வேலணை | 1999 | சி.பி.ஜி | 50,000 |
| 72 கொல்களம் அமைத்தல் | புங்குடுதீவு | 1999 | சி.பி.ஜி | 100,000 |
| 73 கடைத்தொகுதி திருத்தம் | வேலணை | 1999 | ரான் | 340,000 |
| 74 தற்காலிக சந்தை அமைத்தல் | வேலணை | 1999 | ரான் | 30,000 |
| 75 ஐக்கிய உதயமால் ச.ச.நிலைய திருத்தம் | வேலணை | 1999 | விநிதி | 125,000 |
| 76 அம்பிகை ச.ச. நிலையம் | நயினாதீவு | 1999 | விநிதி | 95,000 |
| 77 மடத்துவெளி ச.ச. நிலையம் | புங்குடுதீவு | 1999 | விநிதி | 75,000 |
| 78 நசராத் ச.ச. நிலையம் | புங்குடுதீவு | 1999 | விநிதி | 125,000 |
| 79 பவுசர் கராச் புனரமைப்பு | வேல.பிச | 1999 | விநிதி | 250,000 |
| 80 ஸ்ரீமுருகன் ச.ச நிலைய திருத்தம் | சிற்பனை | 1999 | விநிதி | 31,000 |
| 81 மீனாட்சி ச.ச. நிலைய திருத்தம் | வேலணை | 1999 | விநிதி | 37,500 |
| 82 தற்காலிக மீன் சந்தை | துறையூர் | 1999 | விநிதி | 50,000 |
| 83 அம்மன் வீதி | வேலணை | 1999 | சி.பி.ஜி | 75,000 |
| 84 கலைக்கோயில் வீதி | புங்குடுதீவு | 1999 | சி.பி.ஜி | 50,000 |
| 85 வங்களாவடி வீதி | நயினாதீவு | 1999 | சி.பி.ஜி | 50,000 |
| 86 நடராஜா வீதி | வேலணை | 1999 | சி.பி.ஜி | 50,000 |
| 87 அரியநாயகம் வீதி | புங்குடுதீவு | 1999 | சி.பி.ஜி | 50,000 |
| 88 சுடலை கிணறு திருத்தம் | புன்.கண்டி | 1999 | ரான் | 7,000 |
| 89 மலையநயினார் வீதி | நயினாதீவு | 1999 | ரான் | 23,000 |
| 90 கிணறு திருத்தம் | சரவணை | 1999 | ரான் | 15,500 |
| 91 தலைமை அலுவலக கிணறு திருத்தம் | வேலணை | 1999 | ரான் | 3,050 |
| 92 நாச்சிமார் பொதுக்கிணறு திருத்தம் | நயினாதீவு | 1999 | டி.சி.பி | 25,000 |
| 93 அன்னதான சபை கிணறு திருத்தம் | நயினாதீவு | 1999 | விநிதி | 90,000 |
| 94 உப அலுவலகம் மலசலகூட திருத்தம் | புங்குடுதீவு | 2000 | சி.பி.ஜி | 50,000 |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 95 | சுடலை மடம் புனரமைப்பு | புங்குடுதீவு | 2000 | சி.பி.ஜி | 150,000 |
| 96 | அம்பிகை நகர் பாலர் பாடசாலை புனரமைப்பு | வேலணை | 2000 | சி.பி.ஜி | 250,000 |
| 97 | திருவள்ளுவர் ச.ச.நிலைய திருத்தம் | வேலணை | 2000 | சி.பி.ஜி | 50,000 |
| 98 | திறந்தவெளி அரங்கு | வேலணை | 2000 | ரான் | 225,000 |
| 99 | யாத்தீயர் மடம் திருத்தம் | நயினாதீவு | 2000 | ரான் | 225,000 |
| 100 | உப அலுவலகம் திருத்தம் | நயினாதீவு | 2000 | ரான் | 200,000 |
| 101 | ஐயனார் ச.ச.நிலையம் திருத்தம் | வேலணை | 2000 | ரான் | 75,000 |
| 102 | நசாராத் ச.ச நிலையம் திருத்தம் | புங்குடுதீவு | 2000 | ரான் | 25,000 |
| 103 | சுடலை மடம் திருத்தம் | நயினாதீவு | 2000 | ரான் | 75,000 |
| 104 | அந்தியேட்டி மடம் புனரமைப்பு | நயினாதீவு | 2000 | ரான் | 150,000 |
| 105 | சித்தி விநாயகர் ச.ச.நிலைய புனரமைப்பு | புங்குடுதீவு | 2000 | ரான் | 150,000 |
| 106 | ஐக்கிய உதயமால் ச.ச.நிலைய புனரமைப்பு தொடர்வேலை | புங்குடுதீவு | 2000 | ரான் | 50,000 |
| 107 | சுடலைமடம் புனரமைப்பு | புங்குடுதீவு | 2000 | ரான் | 150,000 |
| 108 | பொது மலசலகூட புனரமைப்பு | சாட்டி | 2000 | ரான் | 200,000 |
| 109 | பயணிகள் தங்குமிடம் குறிகட்டுவான் | புங்குடுதீவு | 2000 | ரான் | 1,000,000 |
| 110 | கிராமிய வைத்தியசாலை திருத்தம் | வேலணை | 2000 | ரான் | 60,000 |
| 111 | கணனி அறை புனரமைப்பு | வேபிச | 2000 | சபைநிதி | 41,000 |
| 112 | தற்காலிக முகப்பு புனரமைப்பு | வேபிச | 2000 | சபைநிதி | 36,000 |
| 113 | வைரவர் வீதி திருத்தம் | வேலணை | 2000 | ரான் | 175,000 |
| 114 | சிற்பனை வீதி திருத்தம் | வேலணை | 2000 | ரான் | 250,000 |
| 115 | கடற்கரை வீதி திருத்தம் | அ.பிட்டி | 2000 | ரான் | 200,000 |
| 116 | நீர்விநியோக வீதி திருத்தம் | வேலணை | 2000 | ரான் | 250,000 |
| 117 | ஆலம்புலம் வீதி | வேலணை | 2000 | ரான் | 250,000 |
| 118 | அம்மன் வீதி திருத்தம் | வேலணை | 2000 | ரான் | 200,000 |
| 119 | சிற்பனை பாலர் பாடசாலை திருத்தம் | வேலணை | 2001 | சி.பி.ஜி | 125,000 |
| 120 | கணேச முன்பள்ளி மைதானம் புனரமைப்பு | நயினாதீவு | 2001 | சி.பி.ஜி | 150,000 |
| 121 | 1ம் குறுக்குத்தெரு | அ.பிட்டி | 2001 | சி.பி.ஜி | 125,000 |
| 122 | அன்னமார் கோயில் வீதி | சாட்டி | 2001 | சி.பி.ஜி | 100,000 |
| 123 | அம்பிகை நகர் மீன்சந்தை | வேலணை | 2002 | டி.சி.பி | 48,500 |
| 124 | சாட்டி மயானம் புனரமைப்பு | வேலணை | 2002 | டி.சி.பி | 97,000 |
| 125 | நாவலர் ச.ச.நிலைய பாலர் பாடசாலை பூர்த்திவேலை | வேலணை | 2002 | டி.சி.பி | 48,500 |
| 126 | தல்லைப்பற்று ச.ச.நிலைய பாலர்பாடசாலை புனரமைப்பு | புங்குடுதீவு | 2002 | டி.சி.பி | 48,500 |
| 127 | தாய், சேய் நிலைய புனரமைப்பு | வேலணை | 2002 | டி.சி.பி | 48,500 |
| 128 | மதியொளி பாலர் பாடசாலை தளபாடம் வழங்கல் | மண்டைதீவு | 2002 | டி.சி.பி | 30,000 |
| 129 | மத்திய முன்பள்ளி தளபாடம் வழங்கல் | அல்.பிட்டி | 2002 | டி.சி.பி | 30,000 |
| 130 | ஊரதீவு முன்பள்ளி பாடசாலை திருத்தம் | புங்குடுதீவு | 2002 | டி.சி.பி | 40,000 |
| 131 | சங்கத்தானை கேணி வீதி திருத்தம் | புங்குடுதீவு | 2002 | பி.எஸ்.டி.ஜி | 300,000 |
| 132 | உபஅலுவலக கடைத்தொகுதி திருத்தம் | நயினாதீவு | 2002 | சி.பி.ஜி | 230,000 |
| 133 | வங்களாவடி கடற்கரை வீதி திருத்தம் * | நயினாதீவு | 2003 | பி.எஸ்.டி.ஜி | 370,000 |
| 134 | குடலைப்பேய் வீதி திருத்தம் * | நயினாதீவு | 2003 | சி.பி.ஜி | 200,000 |
| 135 | சங்கத்தானை கோயில் வீதி திருத்தம் * | புங்குடுதீவு | 2003 | சி.பி.ஜி | 300,000 |

குறிப்பு:-
சி.பி.ஜி :- பிரமாண அடிப்படையிலான நிதி
டி.சி.பி. :- பன்முகப்படுத்தப்பட்ட வரவு செலவு திட்டநிதி
விநிதி :- விசேட நிதி
பி.எஸ்.டி.ஜி :- குறித்தொதுக்கப்பட்ட மாகாண அபிவிருத்தி நிதி

* --வேலை நடைபெற்றுக் கொண்டிருக்கிறது

தொகுப்பு:
திட்டமிடல் பகுதி
வேலணை பிரதேச சபை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நிரந்தர நிலையில் கடமையாற்றும் உத்தியோகத்தர்கள், ஊழியர்கள் விபரம் 2003

| | ஊழியரின் பெயர் | சேவையின் பெயரும் வகுப்பும் |
|---|---|---|
| 1. | திரு. செ. சண்முகராஜா | எழுதுநர் தரம் I<br>செயலாளர் |
| 2. | திரு. த. ஸ்ரீமுரளிதரன் | உள்ளூராட்சி உதவியாளர் -திட்டமிடல் பகுதி பொறுப்பாளர் |
| 3. | திரு. ஐ. குருச்சந்திரநாதன் | எழுதுநர் தரம் II "அ" - கணக்குப்பகுதி எழுதுநர் |
| 4. | திரு. கா. சண்முகநாதன் | எழுதுநர் தரம் II "ஆ" - பிரதம எழுதுநர் |
| 5. | செல்வி. செ. யசோதா | எழுதுநர் தரம் II "ஆ" - தாபனப்பகுதி எழுதுநர் |
| 6. | திருமதி. க. லெஸ்லி | எழுதுநர் தரம் II "ஆ" - வருமானப்பகுதி எழுதுநர் |
| 7. | செல்வி. ந. கோசலாதேவி | எழுதுநர்தரம் II "ஆ"-அலுவலகப்பொறுப்பதிகாரி புங்குடுதீவு. |
| 8. | திரு. ச. பிரசன்னா | காரியாலய காரிய சகாயர் |
| 9. | திரு. கு.விஜயகுமார் | காரியாலய காரிய சகாயர் |
| 10. | திரு. ந. மோகனரூபன் | காரியாலய காரிய சகாயர் |
| 11. | திரு. கு. கிருஸ்ணராசா | காரியாலய காரிய சகாயர் |
| 12. | திரு. ம. யோகராசா | காரியாலய காரிய சகாயர் |
| 13. | திரு. பொ. கருணாசேகரன் | வருமான மேற்பார்வையாளர் அலுவலகப் பொறுப்பதிகாரி |
| 14. | திரு. இ. பேரின்பநாதன் | வருமான மேற்பார்வையாளர் |
| 15. | திருமதி.நா.புருசோத்தமன் | ஆயுர்வேத மருந்துவ உத்தியோகத்தர் |
| 16. | திரு. இ. சற்குருநாதன் | ஆயுர்வேத மருத்துக் கலவையாளர் |
| 17. | திரு. க. குகனேஸ்வரன் | ஆயுர்வேத மருத்துக் கலவையாளர் |
| 18. | திரு. பொ. அன்பரசன் | ஆயுர்வேத மருத்துக் கலவையாளர் |
| 19. | திரு. நா. முகுந்தன் | ஆயுர்வேத தொழிலாளி |
| 20. | திரு. கோ. நிர்மலதாஸ் | ஆயுர்வேத தொழிலாளி |
| 21. | செல்வி. ச. நவரஞ்சினி | ஆயுர்வேத தொழிலாளி |
| 22. | திரு. ச. தருமராசா | சுகாதாரத் தொழிலாளி |
| 23. | திரு. இ. சுப்பிரமணியம் | சுகாதாரத் தொழிலாளி |
| 24. | திரு. க. வைத்தி | சுகாதாரத் தொழிலாளி |
| 25. | திரு. க. சண்முகம் | சுகாதாரத் தொழிலாளி |
| 26. | திரு. ம. குகராசன் | சுகாதாரத் தொழிலாளி |
| 27. | திரு. ம. யூட்சன் சக்திஜீவன் | தொழில்நுட்ப உத்தியோகத்தர் -<br>தலைமை தொழில்நுட்ப உத்தியோகத்தர் |
| 28. | திரு. ப. நந்தீஸ் | தொழில்நுட்ப உத்தியோகத்தர் |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிரதேச மலர் சிறப்பிக்க
வாழ்த்துகிறோம்

Annai Nagaa
Food City

சிறந்த சேமிப்பு!
சிறந்த சலுகை!!
உங்களுக்காக மட்டுமே

# அன்னை நாகா

# புட் சிற்றி



உங்கள் தினசரி தேவைகளை
எங்களிடம் பெற்றுக் கொள்ளலாம்

175, கே.கே.எஸ் வீதி,
யாழ்ப்பாணம்.
தொலைபேசி: 021-2225515/5223

பிரதேச மலர் சிறப்பிக்க வாழ்த்துகிறோம்

# புதிய ஆனந்தா

# நகை மாடம்



தங்கத் தரணியில் தனியிடம்
வகிக்கும் தங்க நகைகளின் அரங்கம்


185, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.
தொலைபேசி: 0777-976620

69/1, பஜார் வீதி,
வவுனியா.
தொலைபேசி: 024-22096


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிறிமாரி
## நகை மாடம்

நாளுக்கு நாள் மாறும் நவநாகரீக
தங்க ஆபரணங்களுக்கு நீங்கள்
நம்பிக்கையுடன் நாடவேண்டிய
சிறந்த ஸ்தாபனம்




49 [187] கே.கே.எஸ் வீதி,
யாழ்ப்பாணம்.

தரமான
தங்க நகைகளுக்கு
நாடவேண்டிய இடம்

# விவேகா
## நகை மாடம்

131, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.



கோடை காலத்தில் குளிர்ச்சிக்
கடலில் ஆழ்த்த அழைக்கின்றனர்

# கல்யாணி
## கிறீம் ஹவுஸ்





72, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

# எங்கள்
# விளம்பரதாரர்களை



# நீங்களும்
# ஆதரியுங்கள்


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

| | ஊழியரின் பெயர் | சேவையின் பெயரும் வகுப்பும் |
|---|---|---|
| 29. | திருமதி. க. சுமதி | தொழில்நுட்ப உத்தியோகத்தர் |
| 30. | திரு. ந. சுகந்தன் | தொழில்நுட்ப உத்தியோகத்தர் |
| 31. | திரு. சு. திருநாவுக்கரசு | காவலாளி |
| 32. | திரு. க. மகேந்திரன் | காவலாளி |
| 33. | திரு. ம.சிவதேவன் | காவலாளி |
| 34. | திரு. ஸ்ரீபத்மநாதன் | காவலாளி |
| 35. | திரு. ஏ. கேதீஸ்வரன் | காவலாளி |
| 36. | திரு. சி. உதயகுமாரன் | சாரதி |
| 37. | திரு. ப. தனபாலசிங்கம் | சாரதி |
| 38. | திரு. க. மகேஸ்வரன் | சாரதி |
| 39. | திரு. த. உதயகுமார் | சாரதி |
| 40. | திரு. ஆ. செல்வானந்தன் | பௌசர் கிளீனர் |
| 41. | திரு. சோ.குமரகுரு | பௌசர் கிளீனர் |
| 42. | திருமதி. க. தங்கராசா | பாலர் பாடசாலை ஆசிரியர் |
| 43. | திருமதி.ச.ஜெயகுணபாலன் | பாலர் பாடசாலை ஆசிரியர் |
| 44. | திரு. இ. ஸ்ரீகாந்தராசா | நூலக சேவகர் |
| 45. | திரு. மு. செல்வரத்தினம் | இயந்திர இயக்குனர் |
| 46. | திரு. க. சண்முகநாதன் | நூலகர் |
| 47. | திருமதி. க.சண்முகலிங்கம் | நூலகத் தொழிலாளி |
| 48. | திருமதி. ச. வில்வமூர்த்தி | நூலகத் தொழிலாளி |
| 49. | செல்வி. தி. ஜெயந்தா | நூலகத் தொழிலாளி |

**ஒப்பந்த அடிப்படையில் கடமையாற்றுவோர்**

| | | |
|---|---|---|
| 50. | திரு. வி. வேதநாதன் | ஆயுர்வேத மருத்துவ உத்தியோகத்தர் |
| 51. | திருமதி. சா. சிவகுமார் | ஆயுர்வேத மருத்துவ உத்தியோகத்தர் |

**பதில் அடிப்படையில்**

| | | |
|---|---|---|
| 52. | தி. நந்தகுமார் | காவலாளி |
| 53. | செ. ஜெயகாந்தன் | காவலாளி |
| 54. | செல்வி. க. மனோட்சவாணி | நூலக உதவியாளர் |
| 55. | திருமதி. பு. தீபா | தட்டெழுத்தாளர் |
| 56. | திரு. மு. ஜெயக்குமார் | காவலாளி |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நன்றி நவில்கின்றோம்.

எமது பிரதேசத்தின் மலராகிய 'வேலணை பிரதேச மலர்' எனும் சஞ்சிகையை வெளிக் கொணருவதில் பெருமகிழ்வு அடைகின்றோம். இச் சஞ்சிகையிலே பல்துறை அடங்கிய அம்சங்கள் வெளிக்கொணரப்படுகின்றது. இது மக்களது ஆற்றல் மேம்பாட்டிற்கு நிலைக்களனாக அமையும் என்பது திண்ணம். இத்துடன் இச்சஞ்சிகையிலே வேலணைப்பிரதேசசபையின் நிலைப்பாட்டை வெளிச்சத்திற்கு கொண்டு வருவதுடன்; ஒரு சிறந்த முன்னேற்றத்தை ஏற்படுத்துவதற்கும் இக்சஞ்சிகை களம் அமைக்கும் என்பதில் எவ்வித ஐயமுமில்லை. எமது வேண்டுதலை ஏற்று ஆசியுரைகளையும், வாழ்த்துச்செய்திகளையும் வழங்கியும், இந்நூல் சிறப்புற அமைய ஆக்கங்களை அளித்தும் மீண்டும் அதனை சரிபார்த்துத்தந்தும் எம்மை ஊக்குவித்து இச்சஞ்சிகையின் வெளியீட்டில் உதவியவர்கட்கும் சிரம்தாழ்த்தி நன்றிகூறக் கடமைப்பட்டுள்ளோம். அத்துடன் இச்சஞ்சிகையினை கணனி வடிவமைத்து தந்துதவிய 'ஹரிஹரணன் பிறிண்டேர்ஸ் நிறுவனத்தாருக்கும் மற்றும் அனைவருக்கும் நன்றி கூறிக்கொள்வதில் பெருமகிழ்வடைகின்றோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



Harikanan Printers, 424,K.K.S Road, Jaffna. T.P:021-2222717

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org